ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப்
அன்ட் அசோசியேட்ஸ்
• TRAFFIC TICKETS
• ACCIDENT CLAIMS
• IMMIGRATION
2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

UNIVERSITY OF TORONTO LIBRARY 10 DEC 20

03 ஜூன் 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 26

இலட்சக்கணக்கான தமிழர்கள் நாடு கடத்தப்படுவார்கள்

ஐரோப்பிய ஒன்றியம் – ஸ்ரீலங்கா அரசு திடீர் ஒப்பந்தம்

அதிர்ச்சியடைந்த தமிழ் அமைப்புக்கள் எதிர்த்துப் போராட சங்கற்பம்!

நமது ஐரோப்பிய செய்தியாளர்

நீடித்த சமாதானத்தைக் கொண்டு வரக்கூடிய ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு ஒன்றினைக் கண்டடையும் நோக்கத்துடன் இலங்கைத் தீவில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஐரோப்பாவில் புகலிடம் கோரியுள்ள இலட்சக் கணக்கான ஈழத்தமிழ் அகதிகளைக் கட்டம் கட்டமாக அவர்களது பிறந்த மண்ணுக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்று ஐரோப்பிய நாட்டு அரசாங்கங்களுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் ஐரோப்பியக் கூட்டமைப்புப் பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய அரசாங்கத்திற்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வொப்பந்தம் இரு தரப்புப் பிரதிநிதிகளாலும் கைச்சாத்திடப்படும் வரை வெகு இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தம் சொந்த நாட்டில் ஒடுக்குமுறைக்கு ஆளாகி உயிர் ஆபத்துக்கான அச்சுறுத்தலுக்குட்பட்டு வெளிநாடு ஓடி வந்து அரசியல் அடைக்கலம் கோருபவர்களை அவரவர் தப்பி வந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்புவது என்பது சர்வதேச முறைமைகளுக்கு (19ம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய "தமிழ்ஈழ" உணர்வாளர்கள் மத்தியில் கலாநிதி அன்டன் பாலசிங்கம் கொள்கை விளக்கம்

நமது விசேட நிருபர்

தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்டன் பாலசிங்கம் அவர்கள் சென்ற வாரம் ஐரோப்பாவிலுள்ள ஏராளமான "தமிழ்ஈழ"உணர்வாளர்களுக்குத் தற்போதைய அரசியல் நிலைமைகளையொட்டிய கொள்கை விளக்கம் ஒன்றை வழங்கியுள்ளார். ஐரோப்பாவின் வெவ்வேறு நாடுகளிலிருந்து கவிலில் குழுமிய உணர்வாளர்கள் மத்தியில் உரையாற்றிய கலாநிதி பாலசிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் அவர்களின் விடுதலைச் சிந்தனைகளுக்குத் தெம்பூட்டும் விதத்தில் அமைந்தன. தற்போதைய நிலைமைகளை விளக்கிய கலாநிதி அன்டன் பாலசிங்கம் அவர்கள் பலரது கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விடையளித்தார். அவர் தெரிவித்த முக்கிய கருத்துக்களின் சாராம்சம் பின்வருமாறு

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது சுதுமலையில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரையில் "போராட்டத்தின் வடிவங்கள் மாறலாம். ஆனால் இலட்சியம் மாறாது" என்று கூறினார். எக்காலத்துக்கும் பொருத்தமான கருத்துச் செறிவுமிகுந்த வாசகம் அது. இப்போது நடக்கிற அல்லது இனி நடக்கப் போகிற நிகழ்வுகளை (5ம் பக்கம் பார்க்க)

சந்திரிகா – ரணில் கூட்டரசாங்க முயற்சி

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தைகளின் போது பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும் ஒன்றாக இணைந்து ஒத்த நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்ற கருத்துத் தென்னிலங்கைச் சிந்தனையாளர்கள் மத்தியில் வலுத்து வருகின்றது. இந்தஅடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரு கூட்டரசாங்கத்தை நிறுவும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் பிரதமருமான ரணில் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா ஆகியோரின் பள்ளி மாணவருமான மாலிக் சமரவிக்கிரம (27ம் பக்கம்)

தேசியத் தலைவரின் பெற்றோர் நாடு திரும்ப மனு

இந்தியாவில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட அகதிகளாக தமிழகத்தில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் பெற்றோரான வேலுப்பிள்ளை தம்பதியர் தமது சொந்த நாடு திரும்புவதற்கான மனுவை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் திணைக்களத்திடம் கொடுத்துள்ளனர். தற்போதைய யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் இந்தியாவில் உள்ள சுமார் 650 இலங்கைத்தமிழர்கள் இத்தகைய நாடு திரும்பும் விண்ணப்பங்களைச் செய்துள்ளனர். இந்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்கக் ககுகி அடிப்படையில் முன்னுரிமை வழங்கித் தமது பொறுப்பில் யு.என். எச்.சி.ஆர் அவர்களை நாட்டிற்கு திருப்பி (27ம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை
வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்
Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

• சம்பள இழப்பீடுகள்
• வணிக இழப்பீடுகள்
• எதிர்கால சம்பள இழப்பீடுகள்
• கல்விக்கான இழப்பீடுகள்
• மறுதொழில் பயிற்சித்தல்
• சட்ட உரிமைகள்
• வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
• குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
• சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
THE INSURANCE CLAIMS SPECIALISTS
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

வாசகர்களே! விளம்பரதாரர்களே!

ஈழநாட்டில் விளம்பரம். அறிவித்தல்கள் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

மிஸிசாகா:

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

மொன்றியல்:

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

மேலதிக தொடர்புகளுக்கு:
பரமேஸ்: (416)266 - 9919

வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித் தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ் திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். *(905) 653 - 3000 (416) 266 - 9919*

தென்மராட்சியில் புதிதாக படைமுகாம் அமைப்பு

மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் விளைநிலங்களை உள்ளடக்கி மற்று மோர் பாரிய படைத்தளமொன்றினைத் தென்மராட்சிப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் அமைத்து வருகின்றனர். சாவகச்சேரி நகரையண்டியுள்ள நுணாவில் கிழக்குப் பகுதியில் கண்டி வீதியின் தெற்குப்புறமாக இப்படைத் தள அமைப்பு வேலைகள் சென்ற வெள்ளிக்கிழமை 31ம்முகதி காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தெற்காக சாவகச்சேரி சங்கம் வீதியில் இருந்து புகையிரதப்பாதை வரை நீண்டு விரிந்த பகுதியிலுள்ள சுமார் 450 ஏக்கர் வயல் வினை நிலங்கள் மற்றும் குடியிருப்புக்களை உள்ளடக்கியே இப்படைத்தள அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை படையினரின் சுமார கவாகனங்கள் இப்பகுதி களைச் சுற்றி பாதுகாப்பு அணை யினை அமைக்கும் பணியில் மும்முர மாக ஈடுபட்டிருந்தனர். இதேவேளை 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இப்பகுதிகளில் ஏற்பட்ட மோதல் களையடுத்து சேதமடைந்திருந்த மக்கள் குடியிருப்புக்கள் சிலவும் இப்படைத்தளத்திற்காக ஆக்கிரமிக்க ப்பட்டுள்ளது. இவற்றில் சில குடியிரு ப்புக்கள் தற்போது உரிமையாளர் களால் திருத்தம் செய்யப்பட்டிருந் தது. இவ்வாறான படைத்தளமொன்று சுமார் 60 ஏக்கர் பரப்பளவில் வரணி இடைக்குறிச்சிப்பகுதியில் படையின ரால்அண்மையில் நிர்மாணிக்கப் பட்டி ருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்மந்துவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றம் அதனையொட்டிய சுற்றாடலில் நிலை கொண்டிருந்த துருப்புக்கள் அங்கி ருந்து வெளியேறியதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளில் குடியேறி வருகின்றனர்.

படையினர் அங்கு முகாமிட்டிருந்த வேளையில் மக்கள் குடியிருப்புக்களின் சில வீடுகளில் உள்ள கூரைத் தகடுகள் முற்றாக அகற்றப்பட்டும்பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாலும் தற்போது மீளக் குடியமர்பவர்கள் தற்காலிக கொட்டகைகளை வளவுகளில் அமை த்தே குடியமர்ந்துள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டின் முற் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் தென் மராட்சியில் மூண்ட மோதல்களை யடுத்து மந்துவில் உள்ளிட்ட ஆறு கிராம சேவையாளர் பிரிவுகள் படை யினரால் ஆக்கிரமிக்கப்பட்டு பாரிய படைத்தளம் அமைக்கப்பட்டிரு ந்தது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

தேசியத் தலைவரது பெற்றோர் நாடு திரும்பினரா? வதந்திகளை யு.என்.எச்.சி.ஆர் மறுத்துள்ளது

தமிழீத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் பெற்றோர் 30 ஆம்திகதி வியாழக்கிழமை தமிழகத் திலிருந்து நாடு திரும்பியுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அகதிகளுக் காக ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யூ.என்.எச்.சி.ஆர்) மறுத்துள்ளது.

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தி யாவிலிருந்து இலங்கை திரும்பும் தமிழ்அகதிகள் திரும்புவதற்கு யு.என். எச்.சி.ஆர் அனுசரனை வழங்கி வரு கிறது.

இந் நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத் திடப்பட்டு போர்நிறுத்தம் கடைப்பிடி க்கப்பட்டு வரும் நிலையில் தமிழகத் தில் தங்கியுள்ள பல அகதிகள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை - இந்திய அரசுகளுக்கிடை யிலான இணக்கப்பாட்டையடுத்து அகதிகளை இலங்கைக்கு திருப்பிய மைத்து வரும் பணியை சிறியளவில் யு.என்.எச்.சி.ஆர் வியாழக்கிழமை ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய சென்னையிலிருந்து வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணி யளவில் இரு பெண்களுடன் வயோதிப ரும் இந்தியன் ஏயார் லைன்ஸ் விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

1995க்குப் பின்னர் முதல் தடவையாக இலங்கை வரும் அகதிளென்பதால் அவர்பளை அழைத்து வர யு.என்.எச். சி.ஆர் அதிகாரிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சென்றிருந்த னர்.

நாடு திரும்பிய மூவரில் இரு பெண்கள் யாழ்ப்பாணத்திற்கும் வயோதிபர் வவுனியாவுக்கும் சென்று ள்ளனர். விமான நிலையத்திற்கு யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் வந்து இவர்களை அழைத்துச் செல்லவே அங்கு நின்ற சில பத்திரிகைப் புகைப்பிடிப்பாளர்கள் வந்தது விடுத லைப்புலிகளின் தலைவரது பெற்றோ ரும் சகோதரியுமென செய்தியைப் பரப் பியதுடன் புகைப்படமும் எடுத்துள்ள னர்.

சம்பந்தப்பட் புகைப்படப்பிடிப்பாளர் களிடம் நிலைமையை விளக்கிய யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் நீங்கள் நினைப்பது போல் அவர்கள் முக்கிய பிரமுகர்கள் அல்ல என்று கூறியிருந்த போதிலும் ஆங்கிப் பத்திரிகையொன் றும் சிங்களப் பத்திரிகையொன்றும் வந்தவர்களது புகைப்படங்களைப் பிரசுரித்து விடுதலைப்புலிகளது பெற்றோர் எனத் தெரிவித்துள்ளன.

வந்தவர்கள் சாதாரண பொதுமக்களே தவிர செய்தி ஊடகங்கள் பல அறிவித்தது போல் அவர்கள் தலைவர் பிரபாகரனின் பெற்றோர் அல்ல எனவும் யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை வடக்கு கிழக்கில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக ஐநா. அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வியாழக் கிழமை சந்திப்பொன்ற நடைபெற்றுள் ளது. கிளிநொச்சியில் விடுதலைப்புலி களின் நடுவப் பணியகத்தில் நடை பெற்ற சந்திப்பில் கொழும்பில் இருந்து சென்ற ஐநா. அதிகாரிகள் நால்வரும் புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வனும் மற்றும் தொல்காப்பின். ஜோர்ஜ் பங்கு கொண்டனர் என்பது குறிப்பிடதக்கது

TRUCK FOR SALE

425 H.P குதிரை வலுக் கொண்ட நல்ல நிலையில் இயங்கிக் கொண்டி ருக்கும் 91 Fright liner Truck விற்ப னைக்கு உண்டு. மேலதிக விபரங் களுக்கு *(905) 653 - 7501*
(416) 438 - 6042

ஸ்ரீ முத்து மாரி அம்பாள் தேவஸ்தானம்

3057 Universal Drive - Mississaugh - Ontario L4X 2E2
Tel (905) 602 - 2068 / 629 - 2050 Fax (905) 629 - 4428

Web site: www.ambaltemple.org

தொடர்புகளுக்கு:
சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப்பதிவாளர்)

பூசை நேரம்
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

கோவில் திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

தொலைபேசி:
(905) 653 - 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
தொலைநகல்:
(905) 653 - 4031
தலைமையகம்:
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

பிரதம நிர்வாகி:
எஸ்.பாலச்சந்திரன்

பிரதம ஆசிரியர்:
எஸ்.எஸ்.குகநாதன்

கனடா பதிப்பு:
பிரதம ஆசிரியர்
T.K.பரமேஸ்வரன்

சுவிஸ்சர்லாந்து
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

ஜேர்மனி
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

அவுஸ்திரேலியா
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

லண்டன்
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ
ஈழநாட்டில்பிரகரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

ஐரோப்பாவில் இருந்து அகதிகளைத் திரிப்பி அழைக்க ஒப்பந்தம்
டிரோன் பேர்னாண்டோ – கிறிஸ்பெட்டன் ஒப்பந்தம்

ஐரோப்பிய நாடுகளில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகத்திற்கு திருப்பி அனுப்ப வகை செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் ஸ்ரீலங்கா அரசும் ஐரோப்பிய ஒன்றியமும் கைச்சாத்திட்டுள்ளன.

ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத் தொடர்புகளுக்குப் பொறுப்பான கிறிஸ் பெட்டனும் கடந்த வியாழக்கிழமை 30 ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக எத்தகைய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன என்ற விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை. எனினும் ஐரோப்பிய நாடுகளுக்கு சட்ட விரோதமான வழிகளில் சென்று அகதி அந்தஸ்து கோரியுள்ள இலங்கையர்களை நாடு திருப்பி அனுப்ப இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் அமைதிச் சூழல் அகதிகளை அங்கு திருப்பி அனுப்பி அவர்களை மீளக் குடியமர்த்த உகந்தது என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுகின்றது.

பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுடன் ஸ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடத்திய விரிவான பேச்சுக்களின் போது அகதிகள் விடயம் குறித்தும் பேசப்பட்டது. அகதிகளை திருப்பி அனுப்பி, அவர்களது புனர்வாழ்வுப் பணிகளுக்காக பெரு மளவு நிதி உதவியை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிதி உதவியைப் பெறும் நோக்குடன் ஸ்ரீலங்கா அரசு அவ்விடயத்தைக் கையாள்கின்றது என்று செய்தி ஒன்று தெரிவித்தது.

தீவுப்பகுதியில் கண்காணிப்புக்குழு தலைவர் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு

தீவுப்பகுதிக்குள் அரசியல் பணிகளில் ஈடுபட விடுதலைப்புலிகளை அனுமதிப்பதற்கு அரசு நிபந்தனை விதித்ததையடுத்து உருவாகியுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் புருகோவிட் கடந்த வாரம் தீவுப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

விமான மூலம் பலாலி வந்து சேர்ந்த இவர் காரைநகர், முகாமுக்குச் சென்று வடபிராந்திய கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் எஸ்.பி.வீரசேகரவுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் வேலணை, ஊர்காவற்றுறை பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களுக்கும் அவர் சென்றார். அங்கு கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

கடற்படை அதிகாரிகளுடன் பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது என்றும் பேச்சுக்களை முடித்துக் கொண்டு மறுநாள் கொழும்பு திரும்பிய புருகோவிட் மீண்டும் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்த யாழ்ப்பாணம் செல்லவுள்ளார் என்று கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை வடக்குக் கடலில் கடல் கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்புப்பணிகள் இரு வாரங்களில் ஆரம்பமாக இருக்கின்றன. இப்பணிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள போல் எரிக் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் நோர்வே திரும்பியுள்ளார். முல்லைத்தீவில் ஒருவாரம் தங்கி புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந் துரையாடிய அவர் யாழ்ப்பாணத்தில் இருதினங்கள் தங்கி கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதானப் பேச்சுக்கு பிரிட்டன் ஆதரவு
ரணிலிடம் ரொனி பிளேயர் நேரில் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இனப்பிரச்சனைக்குத் தீர்வு தொடர்பான சமாதான முயற்சிகள் குறித்து இரு தலைவர்களும் கூடி ஆராய்ந்தனர்.

இச்சந்திப்பையடுத்து பிரிட்டிஷ் வெளிவிவகார அலுவலகம் அரசு – புலிகள் இயக்கத்துக்கிடையில் நேரடி சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவளிக்கப்படும் என்று அறிவித்தது.

இதுதொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது புலிகள் இயக்கம் பயங்கரவாதத்தை முற்றுமுழுதாக நிராகரிக்க வேண்டும்.

இரு தரப்பினருக்குமிடையிலான நேரடிப் பேச்சுக்கள் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும். அதற்கு முழு ஆதரவு உண்டு. சமாதான முயற்சி வெற்றி பெறத் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய சமூகங்களினதும் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அந்த உரிமைகள் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் வன்முறை வகிக்கக்கூடிய பங்கு எதுவும் இல்லை என்பதைப் புலிகள் இயக்கம் உணரும் என்று நாம் நம்புகின்றோம்.

பிரிட்டனில் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படுவது குறித்து ஆராயப்படுவதற்கு முன்னர் பயங்கரவாதத்தை முற்றாக நிராகரிப்பதை விடுதலைப்புலிகள் இயக்கம் எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈழநாடு
புதிய தொலைபேசி இலக்கம்
(416) 266 - 9919
(905) 653 - 3000

பேச்சுக்கு முன் தடையை நீக்க ஜனாதிபதி கூறும் யோசனை!

விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை பேச்சுக்களுக்கு முன் நீக்குவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மாற்று யோசனை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்துப் பேச்சுக்கு முன் அத்தடையை நீக்க வேண்டுமென்று அரசாங்கம் கருதினால் பாதுகாப்பு அமைச்சர் அதுதொடர்பான ஒபாரிசை அமைச்சரவைக்குச் செய்ய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் அந்த மாற்று யோசனையாகும்.

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளரான ஜனதாஸ பீரிஸ் இதனைத் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இவற்றைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதும், இடைக்கால நிர்வாகசபையை அரசு – புலிகள் பேச்சின் போது ஏற்படும் பரஸ்பர இணக்கப்பாட்டின் பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் கருத்து.

நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி இனப்பிரச்சனைக்குத் தீர்வு குறித்து ஆராய்ந்து அவர் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக உறுதி அளித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக தனக்கும் அமைச்சரவைக்கும் எந்தவிதமான கருத்து முரண்பாடுகளும் இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் யுத்தமும் இல்லை. சமாதானமும் இல்லை. இழுபறி நிலையே இருக்கின்றது.

இடைக்கால நிர்வாகசபை நிறுவுவதையும் அதைப் புலிகளிடம் ஒப்படைப்பதையும் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் ஏகமனதாக அங்கீகரிக்கின்றனரா என்பதையும் ஆராயவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறுகிறார்.

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் இன்றைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய தேவையில்லை. நாடாளுமன்றத்தைக் கலைப்பது அரசியல் பண்பு அல்ல என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

தற்போதைய நாடாளுமன்றத்தை அதன் ஒரு வருட நிறைவில் ஜனாதிபதி கலைத்துவிடுவார் என ஊடகங்களில் வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை. பெரும்பான்மையுடன் செயற்படும் அரசைக் கலைக்க வேண்டிய தேவையும் இல்லை. கலைப்பதற்குஅவசியமும் இல்லை. இவ்வாறு கூறினார் ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் கூறினார். ஜனாதிபதியின் கருத்தையே பிரதமர் ரணிலும் தற்போது கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

TORONTO - COLOMBO
RETURN TRIP
ONLY
1285.00
(Tax included)

SkyRoute
TRAVEL SERVICES INC.
1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

(Taxes are extra and the fares are subject to change without notice)
416-439-4000
IATA
Reg: 04488805 / 04652780
TICO

வன்னியில் அங்குலம் அங்குலமாக நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் பணி

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி வடக்கு கிழக்கில் இயல்பு நிலை திரும்பிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு கிளிநொச்சிப் பகுதியில் மகத்தான சேவை ஒன்றை மேற் கொண்டு வருகின்றது.

முற்றிலும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களின் உதவியுடன் இவர்கள் கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறி வெடிகள், மற்றும் வெடிக்காத வெடிபொரு ட்கள் ஆகியவற்றை அகற்றி வருகின்றனர்.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதி களில் அங்குலம் அங்குலமாக இவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பது பார்ப்போர் நெஞ்சங்களை நெகிழ வைக்கின்றது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பின்பு பொதுமக்கள் எதிர்நோக்கும் முக்கிய

பரந்தன் பிரதேசத்தில் மீட்கப்பட்ட எறிகணைகள்

பிரச்சனைகளில் ஒன்று இந்த கண்ணிவெடி கள் தான். யுத்தநிறுத்தத்தின் பின்பும் கண்ணி வெடிகள் மற்றும் மிதிவெடிகளால் பலர் அவயங்களை இழந்துள்ளனர்.

மக்கள் மீளக் குடியமரவும் இவை முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றன. யாழ்ப்பாணம், தென்மராட்சியில் அமெரிக்கா தலைமையிலான கண்ணிவெடி அகற்றும் குழுவினர் தற்பொழுது பணியில் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றனர். நவீன கருவிகள், மோப்ப நாய்கள், இவர்களுக்கு உதவியாக இருந்து வருகின்றன. ஆனால் கிளிநொச்சிப் பகுதியில் முற்றிலும் எதிர் மாறான முறையில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கீழ் இந்தப் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

"தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கீழ் இந்தப் பிரிவு செயற்பட்டு வருகின்றது. இதற்குத் தேவையான நிதியையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே வழங்கி வருகின் றது"

இதற்குத் தேவையான நிதியையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே வழங்கி வருகின்றது.

வடக்கு கிழக்கில் இன்னும் 14 லட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இரு ந்து வருகின்றன. பெரும்பாலான கண்ணி வெடிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவு னியா வடக்குப் பிரதேசங்களிலேயே புதை க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படு கின்றது.

கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் இங்கு பெரும் அளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படு கிறது. 1996 இல் இராணுவம் கிளிநொச்சி யைக் கைப்பற்றியது. 1998 இல் இது மீண் டும் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ச்சி அடை ந்தது. இராணுவம் விதைக்க கண்ணி வெடிகளே இன்று பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

1999 ஏப்ரல் முதல் 2000 ஏப்ரல் வரை 182 கண்ணிவெடி, மிதிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வன்னிப்பகுதியில் இதுவரை 83 ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்று மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் இணைப்பாளர் யோகன் தெரிவித்தார்.

கனகராயன்குளத்தின் உட்பகுதி, மாங்குளத்தின் உட்பகுதி நெடுங்கேணியில் இருந்து ஒட்டுசுட்டான் வரையான இராணு வக் காவலரண் பகுதிகளில் கண்ணி வெடி கள் அகற்றப்பட்டு விட்டன.

மணலாறு சிலோன் தியேட்டர் முதல் பள்ளமடு வரையான முன்னரங்க காப்பரண் கள் உள்ள பிரதேசங்களில் இன்னும் கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை.

150 பேர் மட்டுமே தமது பிரிவில் கடமை யாற்றுகின்றனர் என்றும் இந்த ஆன்பலம் போதாதென்றும் யோகன் மேலும் தெரிவித் தார். மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு விடுதலைப்புலிகளின் கண்ணி வெடி அகறறும் பிரிவு உதவி ஒத்தாசை களை வழங்கி வருகிறது.

தம்மால் கண்ணிவெடிகள் புதைக்கப் பட்ட பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட வரை படங்களையும் விடுதலைப்புலிகள் வழங்கி இப்பணிக்கு உதவி வருகின்றார்கள்.

ஆனால் படையினர் தரப்பில் இருந்து போதுமான ஒத்துழைப்புக் கிடைக்க வில்லை என்றும் யோகன் கூறினார். படை யினர் புதைத்த கண்ணிவெடிகள் பற்றிய விபரங்களைப் பெறும் முயற்சி இதுவரை கைகூடவில்லை. படையினர் தாம் கைப்பற்றி விட்டுச் சென்ற பிரதேசங்களில் சீனத்தயாரிப்பான ரி72 ரக மிதிவெடிகளையும் பாகிஸ்தான் தயாரிப்பான பி4 மார்க் 1 ரக கண்ணிவெடிகளையும் பெருமளவு விதை த்து விட்டுச் சென்றுள்ளனர். இவற்றுள்

தற்பாதுகாப்புக் கவசம் அணிந்து கொண்டு மிதிவெடி அகற்றும் பணியில்

தண்ணீர் இலகுவில் உட்செல்லாது செயல் இழந்து போக பல வருடங்கள் செல்லும். படையினரும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமே இந்த மனிதாபிமான பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்று யோகன் மேலும் கூறினார்.

கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளை யும் அகற்றி மக்கள தமது சொந்த இடங் களில் மீளக் குடியமர உதவுவதே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நோக்கம் ஆகும். இதனையே மனிதநேய கண்ணிவெடி அகற் றும் பிரிவு செயற்படுத்தி வருகின்றது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு மிகவும் அவதானமாகவே தனது பணியில் ஈடுபட்டு வருகிறது. இதுவரை துப்பரவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மிதி வெடிகளோ அல்லது நிலக் கண்ணிவெடி களோ இருந்ததாக முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்றும் யோகன் கூறினார். மொத்தத்தில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் சேவை காலத்தின் அவசரத் தேவை என்பதை எவரும் மறந்து விடக் கூடாது. - (நன்றி கடரொளி)

எப்படி இருக்கும் அவனுக்கு?

வயதான பணக்காரன் ஒருவன் இருந்தான். பண விஷயத்தில் மிகவும் சிக்கனமானவன். அழகான இளம் பெண் ஒருத்தியை மணம் முடித்தான். அவள் ஓர் ஊதாரி.

ஊதாரியான தனது மனைவிக்குப் பாடம் புகட்டத் திட்டமிட்டான் பணக்காரனான அந்தக் கணவன். மனைவிக்கு உண்டியல் ஒன்றை வாங்கிக் கொடுத்தான். அன்பே! நீ என்னை முத்த மிட அனுமதிக்கும் போதெல்லாம் இந்த உண் டியலில் 50 ரூபா போடுவேன். மாதக் கடைசியில் நீ அந்தப் பணத்தை எல்லாம் எடுத்து உன் விருப்பப்படி செலவழிக்கலாம் என்றான். இளம் மனைவிக்கு நல்ல சந்தோஸம். திட்டம் நன்றா கவே வேலை செய்தது. உண்டியலில் பணம் நிறைந்து விட்டது. ஆனால் உண்டியலைப் பூட்டி அதன் சாவியை அவன் தன்னுடன் வைத்துக் கொண்டான். மாதக் கடைசி வந்தது. மனைவி இல்லாத நேரமாகப் பார்த்து உண்டி யலைத் திறந்தான் கணவன். என்ன ஆச்சரியம்! அதற்குள் 100 ரூபாத்தாள்களும் கிடந்தன.

இனியும் சும்மா இருக்க முடியுமா? நான் 50 ரூபா தாள்கள் தான் போட்டேன். இந்த 100 ரூபாக்கள் எப்படி வந்தன? என்று மனைவியிடம் கேட்டான்.

"எல்லோருமே உங்களைப் போல கருமிகளா? என்று பதிலளித்தாள் மனைவி.

இந்திய யுத்தக் கப்பல் இலங்கை வருகிறது

இந்தியாவின் நவீன போர் கப்பல் ஒன்று அடுத்த இரு வாரங்களுக்குள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உறவு பலமடைந்து வரும் நிலையிலேயே இந்தப் போர்க் கப்பல் இங்கு வரவுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி களில் இந்தியப் படையினர் நிலைகொண்டி ருந்த போதே இந்தியப் போர்க் கப்பல்கள் இறுதியாக இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்திருந்தன.

தற்போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ள அதேநேரம் திருகோணமலையிலுள்ள எண் ணெய்க் குதங்கள் பலவற்றை இலங்கை அரச இந்தியாவுக்கு நீண்டகால குத்தகை க்கு விட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் வான்பரப் பையும் கடற்பரப்பையும் துறைமுகங்களை யும் அமெரிக்கப் படையினர் பயன்படுத்தும் விதத்தில் இலங்கையும் அமெரிக்காவும் பாதுகாப்பு உடன்படிக்கை செய்துள்ளன.

PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்

- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

ஐரோப்பிய "தமிழ்ஈழ" உணர்வாளர்கள் மத்தியில் கலாநிதி அன்டன் பாலசிங்கம் கொள்கை விளக்கம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது இப்போது நடக்கிற அல்லது இனி நடக்கப் போகிற நிகழ்வுகளைச் சரியாக விளங்கிக் கொள்ள நீங்கள் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய அளவு கோல் அது.

எம்மைப் பொறுத்தவரை தலைவரைப் பொறுத்தவரை இலட்சிய உறுதியில் எந்த வித மாற்றமும் இல்லை. ஆனால் மாறி வரும் சர்வதேச சூழல்களை மனதில் கொண்டு சில தந்திரோபாய நகர்வுகளைச் செய்கிறோம்.

புத்திசாலிகளான நீங்கள் அவற்றைப் புரிந்து கொண்டு தொடர்ந்தும் கொள்கைப் பிடிப்புடன் இருங்கள். ஆனால் சூட்சுமமாகச் சமயோசிதமாக நடந்து கொள்ளுங்கள்.

சமாதானச் சூழலை ஏற்படுத்த ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டாலும் யுத்தம் எந்த நேரமும் வெடிக்கக்கூடும் என்ற முன் ஜாக்கிரதை உணர்வை இழக்கவில்லை. எது வந்தாலும் எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலைமையில் தான் நாம் இருக்கின்றோம்.

கடந்தகாலங்களில் நான் ஐரோப்பாவை விட்டுப் பயணம் செய்து இரணைமடுக் குளத்தில் சென்று இறங்கிய விதத்தைப் பாருங்கள். தலைவரின் சரித்திர முக்கியத்துவம் நிறைந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் நாம் கடைப்பிடித்த விரிவாக பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்திருப்பீர்கள்.

இவற்றை எல்லாம் நோக்கிப் பார்த்தால் நாம் எந்த நேரத்திலும் எதற்கும் ஆயத்தமாகத் தான் இருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்கு விளங்கியிருக்கும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது கூட நாம் சில விடயங்களைத் தடை செய்யும் விதிகளை அதில் சேர்க்காமல் இருப்பதில் கவனமாக இருந்தோம்.

18 வயதுக்கு மேற்பட்டவர்களை விருப்ப அடிப்படையில் தாராளமாகச் சேர்ப்பதற்குத் தடை ஒப்பந்தத்தில் இல்லை. நாம் ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு எவ்வித தடை விதியும் ஒப்பந்தத்தில் இல்லை. எம் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் கூட தற்காப்புப் பயிற்சி பெறலாம். அதற்கும் தடையில்லை. அத்துடன் எங்கள் அரசியல் பணிகளை சீராக நடத்துவதற்குத் தேவையான நிதியை வரிவிதிப்பின் மூலம் அல்லது பொதுமக்கள் நன்கொடை மூலம் அல்லது வியாபார முயற்சிகள் மூலம் பெற்றுக் கொள்வதில் தடை ஏதும் இல்லை. இவற்றை ஏன் குறிப் பிட்டுச் சொல்கிறேன் என்றால் நாம் சமாதானத்திற்கான யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டாலும் கூட எமது எதிர்காலம் குறித்த முன் ஜாக்கிரதை உணர்வை முற்றாகக் கைவிட வில்லை என்பதை எடுத்துக்காட்டவே. எதற்கும் நாம் தயார். எனவே நீங்கள் இதை மனதில் வைத்து உற்சாகமாக வழக்கமான பணிகளைச் செய்யுங்கள். சர்வதேச சூழலை மனதில் வைத்துக் கவனமாக நிதானமாக பொறுப்புடன் செயற்படுங்கள்.

> **"எம்மைப் பொறுத்தவரை தலைவரைப் பொறுத்தவரை இலட்சிய உறுதியில் எந்த வித மாற்றமும் இல்லை. ஆனால் மாறி வரும் சர்வதேச சூழல்களை மனதில் கொண்டு சில தந்திரோபாய நகர்வுகளைச் செய்கிறோம்"**

எந்தவொரு சிங்கள அரசாங்கமும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எமக்கில்லை. ஆனாலும் பேச்சுவார்த்தைகளுக்குச் சமாதான முயற்சிக்கு போயிருக்கின் றோம். ஏன்? சில திட்டவட்டமான குறிக் கோள்களை முன் வைத்தே.

பேச்சுவார்த்தைகளுக்கு முன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டும். அப்படிச் செய்தால் தமிழ்ப்பகுதி களில் இயல்பு நிலைமை ஏற்படும். அப்படி ஏற்படும் போது பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சூழ்நிலை தோன்றும். ஒடுக்குமுறைக்குட்பட்ட நிலையில் எம் மக்களை வைத்துக் கொண்டு நாம் பேச்சுவார்த்தை செய்ய முடியாது.

இந்த இயல்புநிலைமைக்கான யுத்தநிறுத்தம் எம் மக்களுக்கு ஒரு நிவாரணத்தை தற் காலிக நிம்மதியைக் கொடுக்கும். இதைப் பயன்படுத்தி பொருளாதார, மீன்பிடி, விவ சாய, போக்குவரத்து, தடைகள் நீக்கம், கோயில்கள், பாடசாலைகள், பொதுக்கட்டிடங்களில் உள்ள இராணுவம் விலகிக் கொள்ள வேண்டும். சோதனைச்சாவடிகள் குறையும். சிறைகளில் அடைக்கப்பட்டவர்கள் படிப் படியாக விடுதலை செய்யப்படுவார்கள். காலக் கிரமத்தில் பயங்கரவாத தடைச்சட்டமும் நீக்கப்படும். இதேநேரம் தமிழ் ஆயுதக்குழுக் கள் வடகிழக்கை விட்டு வெளியேறிச் சென்று விடுவர். இராணுவம் இருக்கும் இடத்தில் எமது "அரசியல்" பிரிவைச் சேர்ந்தவர்கள் சென்று அரசியல் செய்வார்கள். தமிழ்ப்பகுதிகளில் உள்ள பெரிய நகர்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோண மலை, மன்னார், வவுனியா எல்லாம் எம் உறுப்பினர்கள் சென்று அரசியல் செய்வார் கள். ஏற்கனவே இங்கே எல்லாம் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்ச்சிகள் எமக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை நிருபித்து ள்ளது.

இப்போது அந்தத் தார்மீக ஆதரவை அடிப படையாக வைத்து அரசியல் செய்வோம். இராணுவம் இப்பகுதியில் இருந்தாலும் எம் மக்கள் மனங்களில் நாங்களே. விடுதலைப் புலிகளே தலைமைத்துவ அரசியல் இராணுவ சக்தியாக இருக்கின்றோம் என்பதை உலகிற்குக் காட்டுவோம். ஆயுத போரில் எம் பகுதிகளை இராணுவம் திட்டமிட்டுத் தகர்ப்பதைத் தவிர்த்து எம் ஆதிக்கத்தை நிலைநாட்டுவோம்.

அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது குறித்து அதாவது அரசியல் சட்டவிவகாரங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகள் தொடங்க முன் நடக்கும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் வடகிழக்கு மாகாணத்துக்கு ஓர் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை ஏற்படுத்துவது குறித்ததாகவே இருக்கும்.

ஆனால் அதற்கு முன் இயல்புநிலை ஏற்பட வேண்டும். அத்துடன் எம்மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டும். இப்படித் தடை நீக்கப்பட்ட பின்னர் எம்மைத் தடைசெய்துள்ள வெளிநாடுகளுடன் இதைச் சுட்டிக் காட்டி தடையை நீக்கும்படி கோரிக்கை விடுத்துப் பிரச்சாரம் செய்வோம். வடகிழக்கு மாகாணங்களுக்கான நிர்வாக சபையில் உறுப்பினர் எண்ணிக்கை இரண்டு மாகாணங்களில் இனவிரிப்பு எண்ணிக்கையில் இருக்கும். இதன்படி 100 உறுப்பினர்கள்

என்றால் அதில் 70 -75 பேர் தமிழர்கள். 10 - 15 பேர் முஸ்லிம்கள். 5 - 10 பேர் சிங்களவர்கள். தமிழ் உறுப்பினர்கள் எல்லோரும் விடுதலைப்புலிகளால் நியமனம் செய்யப்படுபவர்கள் மாத்திரமே. முஸ்லிம் உறுப்பினர்கள் முஸ்லிம் காங்கிரஸினாலும் சிங்கள உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியாலும் நியமிக்கப்படுவார்கள்.

வெளிநாட்டு நிதி உதவியை நேரடியாகப் பெறும் அதிகாரம், காணிகளில் குடியேற்றும் அதிகாரம், தொழிற்சாலை தொடங்கும் அதிகாரம் என்று ஏராளமான அதிகாரங்கள் கொண்டதாக இந்த சபை இருக்கும். 2 -5 வருடம் வரை இதன் பதவிக்காலம் இருக்கும்.

இந்த நிர்வாகத்தை நிறமையாக நடத்தி தமிழ்பகுதிகளைக் கட்டியெழுப்பி பொருளாதார கரீட்சம் ஏற்படுத்துவோம். கஷ்டப்பட்ட எம் மக்களுக்கு ஒரு நல்வாழ்வைக் கொடுப் போம்.

இதே சமயம் விடுதலைப்புலிகளால் ஒரு சீரான நிர்வாகத்தை நடத்திக் காட்ட முடியும் என்று தென்னிலங்கைக்கும் உலகத்திற்கும் எடுத்துக் காட்டுவோம். இக்காலத்தில் வடகிழக்கை நாம் பொருளாதார ரீதியில் பலப்படுத்துவோம். எமது போராளிகளுக்கும் தமது நிறமைகளைக் காட்ட இது நல்ல சந்தர்ப்பம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழ் நிபுணர்களும் செல்வந்தர்களும் தம் பங்களிப்பைச் செய்ய இதுவொரு நல்ல சந்தர்ப்பமாகும். இப்படி ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தி விட்டு அடிப்படைப் பேச்சுவார்த்தை (27ம் பக்கம் பார்க்க)

சர்வதேச சமூகத்தின் மத்தியில் பலமான ஆதரவு:

பேச்சு திகதியை உறுதியாக முடிவு செய்த பின்னரே தடை நீக்கமாம்

தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திகதியை திட்டவட்டமாகத் தீர்மானித்த பின்பே விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் குறித்து சிந்திக்க முடியும் என ஸ்ரீலங்கா அமைச்சரவைப் பேச்சாளரும் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் பீரிஸ் கடந்த வியாழக் கிழமை தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கத்திற்கும் தாய்லாந்துப் பேச்சுக்களிற்குமான திகதிக்கும் நேரடி தொடர்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாடு கொழும்பு அரசாங்கத் தகவல் நிணைக்களத்தில் இடம் பெற்றது.

தாய்லாந்து பேச்சுவார்த்தைகளிற்கான நிகழ்ச்சி நிரலில் இனப்பிரச்சனையின் அனைத்து பரிமாணங்களும் இடம்பெற வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது

நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதா ஹெல்கீசன் தனது இலங்கை விஜயத்தின் போது பல முக்கிய சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். பல விடயங்களைத் தீவிரமாக ஆராய்ந்திருந்தார்.

தாய்லாந்தில் நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான திகதியொன்றை நிச்சயிக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதேவேளை இதற்கு முன்னர் செய்து முடிக்க வேண்டிய பணிகள் பல உள்ளன.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான நிரந்தர சமாதானத்திற்கான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள அம்சங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். குறிப்பாக பாடசாலைகளில் இருந்தும் கோயில்களிலிருந்தும் படையினர் விலகிக் கொள்ள வேண்டுமென அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

சிறிய அளவிலேயே படையினர் வழிபாட்டுத் தலங்களில் தங்கியுள்ளனர் இவர்கள் விலகிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். மீன்பிடித்தடை முற்றாக விலக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர். இது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

இதேவேளை விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அரசாங்கம் இதுதொடர்பாக நோர்வேயின் கவனத்தை ஈர்த்துள்ளது. விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான இலங்கை கண்காணிப்புக்குழுவினர் இதனை உறுதி செய்துள்ளனர். விடுதலைப் புலிகள் 16 பேரைக் கடத்தியதற்காக தடயங்கள் உள்ளன. அரசாங்கம் இவற்றை நோர்வேயிடம் சுட்டிக்காட்டியுள்ளது. விடுதலைப்புலிகளுடன் சர்வதேச கண்காணிப்புக் குழுவுடனும் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டுள்ளதாக நோர்வே தெரிவித்துள்ளது. யுத்தநிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதாக நோர்வே தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்குவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் தங்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

தடை நீக்கப்படுவது அவசியம் என அரசாங்கம் கருதுகின்ற அதேவேளை பேச்சுவார்த்தைகளிற்கான உறுதியான திகதியொன்று நிர்ணயிக்கப்பட்ட பின்னரே இதனை மேற்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டை அது கொண்டுள்ளது.

தாய்லாந்து பேச்சுவார்த்தைகளிற்கான திகதியை நிச்சயிக்கும் முயற்சியில் நோர்வேயின் அனுசரணையாளர்கள் ஈடுபடப் போகின்றனர். தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளிற்கான நிகழ்ச்சி நிரல் குறித்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சருடன் கலந்தாலோசித்தோம். நிகழ்ச்சி நிரலின் தரம், எவ்வளவு தூரம் சிறப்பானதாக அமைந்துள்ளது என்பது குறித்தே தாம் அதிக கரிசனை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலை அவசரமாகத் தயாரிக்க முடியாது. அவசரமாகத் தயாரிக்கக் கூடாது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கவே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

உரிய சூழ்நிலையொன்று ஏற்படுத்தப்பட்டதும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வது கலபமாகவிருக்கும். எனினும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவது தாமதமாவதை நாம் விரும்பவில்லை. இது தற்போதைய சாதகமான சூழ்நிலையைப் பல வீனப்படுத்தி விடும்.

தாய்லாந்துபேச்சுவார்த்தைகளிற்கான நிகழ்ச்சி நிரலில் இனநெருக்கடியின் அனைத்து விடயங்களும் அனைத்து பரிமாணங்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என அரசாங்கம் விரும்புகின்றது. முழுமையான ஒரு நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

சர்வதேச சமூகத்தின் மத்தியிலிருந்து கிடைத்த ஆதரவே எமக்கான மிகப்பெரிய பலமாகவுள்ளது. பிதமரின் சமீபத்திய சுற்றுப் பயணம் மூலம் இது புலனாகி யுள்ளது என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி முதலில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவே முதலில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளினால் இரண்டு ஆண்டுகளுக்கு நிர்வகிக்கப்பட்டு வடக்கு கிழக்கில் ஒரு யதார்த்தபூர்வமான இயல்பு நிலைமை ஏற் படுத்தப்பட்ட பின்பே நிரந்தர அமைதிக்கான சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் தொடர்ந்து தெரிவித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசு – புலிகள் பேச்சுவார்த்தை தொடர்பாக.....

சுருதி மாறி ஒரே தொனியில் ஜனாதிபதியும் பிரதமரும்

நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடமும் பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரம் பிரதமரிடம் இருக்கும் நிலைமை கடந்த டிசம்பரில் ஏற்பட்ட பின்னர் முதற்தடவையாகச் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்தும் ஒரே தொனியிலான கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

பிரஸ்சல்ஸில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்கிழமை உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா, பிரிட்டனில் நடைமுறையில் இருக்கும் அதிகாரப்பகிர்வு நடைமுறையை முன்மாதிரியாகக் கொள்வது குறித்து தனது அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இனப்பிரச்சனைக்கு தீர்வாக இத்தகைய அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு வழிக்கக்கூடியதாக இருக்கலாமென்ற கருத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். ஒன்றுபட்ட இலங்கையென்ற விடயம் தொடர்பாக மறுபேச்சு கிடையாதென ஐரோப்பிய பாராளுமன்ற உறப்பினர்கள் மத்தியில் அழுத்தம் திருத்தமாகப் பிரதமர் கூறியிருப்பதுடன் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது அடிப்படைப் பிரச்சனை தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்த தனது அரசாங்கம் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் போது வடகிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசப்படும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

"கடும் இராணுவப் போக்குக் கொண்ட, சமாதானத்திற்கு எதிரான ஜனாதிபதியின் கருத்துக்க இசைவான போக்கே தற்போது அரசாங்கத்திடமும் காணப்படுவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பலத்த அவ நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது"

ஆனால் கடந்த திங்கட்கிழமை 27ஆம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதா ஹெல்கீசனுடனான சந்திப்பின் போது இடைக்கால நிர்வாகம் என்பது இனநெருக்கடிக்கான இறுதித்தீர்வு தொடர்புபட்டதாக இருக்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார். பிரதமரும் முதன்முறையாக இடைக்கால நிர்வாக விவகாரம் அடிப்படை பிரச்சனைகள் தொடர்புபட்டதாக அமைய வேண்டுமென்ற கருத்தை வெளிப் படுத்தியுள்ளார். மனித உரிமைகள், ஜனநாயக விழுமியங்களுக்கு விடுதலைப்புலிகள் மதிப்பளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி வெளிப்படுத்திய கருத்தும் பிரதமரிடமிருந்தும் வெளிக்கிளம்பியிருக்கிறது.

வடகிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாக முதலில் செய்திகள் வெளியாகியிருந்தன.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் போது முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கடந்த வாரம் மறைமுகமாக குறிப்பிட்டிருந்தார். ((27ம் பக்கம் பார்க்க)

WEXFORD CASH MART
FINANCIAL SERVICES
• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED
பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை
தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி
1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை
உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை
MONEY ORDER
வசதி உண்டு
WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம் ஆரம்பம்

உலகின் கோடானுகோடி மக்கள் கடந்த ஒரு வருடமாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 17வது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி கடந்த 31ம் திகதி வெள்ளிக்கிழமை தென்கொரியாவில் சோர் நகரில் கூதூகலமாக ஆரம்பமாகியது.

ஜூன் மாதம் 30ம் திகதி வரை ஜப்பானிலும் தென்கொரியாவிலும் தினமும் நடைபெறவுள்ள மொத்தம் 64 போட்டிகளையும் உலகம் முழுவதும் சுமார் 200 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொலைக்காட்சிகளில் பார்ப்பார்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தொடக்க நாள் அன்று உலக சாம்பியனாக இருக்கும் பிரான்ஸ் அணிக்கும் செனகல் அணிக்கும் மட்டும் ஒரேயொரு போட்டி நடைபெற்றது.

பிரான்ஸ் அணியைப் பொறுத்த மட்டில் இவ்வணி மிகவும் பலம் வாய்ந்த அணியாகவே இருக்கிறது. கடைசியாக 1998 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற 16ஆவது உலகக்கிண்ணப் போட்டியில் பிரான்ஸ் அணி தான் உலகக்கிண்ணத்தை முதல் தடவையாகக் கைப்பற்றியது.

இதைவிட 1930, 1934, 1938, 1954, 1958, 1966, 1978, 1986 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரான்ஸ் நாடு பங்கு பற்றி உதைப்பந்தாட்டத்தில் மிகவும் அனுபவம் வாய்ந்த நாடாகத் திகழ்கிறது. உதைப்பந்தாட்ட சர்வதேச தரப்பட்டியலில் போட்டியில் பங்கு பற்றும் பிரான்ஸ் அணி முதலாவது இடத்தில் இருந்தமையால் முதலாவது நாள் போட்டியில் பிரான்ஸ் அணியே வெற்றி பெறும் என்று ரசிகர்கள் அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்தார்கள். ஆனால் நிலைமை வேறுவிதமாக அமைந்தது.

பிரான்ஸ் அணியை எதிர்த்துப் போட்டியிட்ட செனகல் அணி உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட சரித்திரத்தில் இறுதிக் கட்டப் போட்டிகளுக்குத் தெரிவானது இது தான் முதற் தடவையாகும். பிரான்ஸ் அணியை எதிர்த்து மிகவும் சாதுரியமாக ஆடிய இவ்வணி இறுதி நேரத்தில் பிரான்ஸ் அணியைத் தோற்கடித்து உலகின் பார்வையை தனது பக்கம் திருப்பிக் கொண்டது பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

செனகல் நாடு பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற ஒரு நாடு. தற்பொது செனகல் உதைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் பிரான்ஸ் நாட்டில் உள்ள முன்னணி விளையாட்டுக்கழகங்களில் அங்கட வகித்து தற்போதும் விளையாடி வருபவர்கள். இதனால் பிரான்ஸ் வீரர்களுக்கு எதிராக எதிர்த்தாக்குதல் எவ்வாறு தொடுக்க வேண்டும் என்பதை செனகல் வீரர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்ததால் முதல் நாள் ஆட்டத்தில் செனகல் வீரர்கள் பிரான்ஸ் வீரர்களுக்கு பெரிதும் சவாகத் திகழ்ந்தார்கள்.

இதேவேளை செனகல் நாட்டுப் பயிற்சியாளராக இருக்கும் புறோனோ என்பவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் பிரான்ஸ் அணியின் விளையாட்டுப் பாணியில் தான் செனகல் அணியையும் உருவாக்கியுள்ளார். இதனால் தான் செனகல் அணி தகுதி காண் போட்டி 8 இல் பங்கு பற்றி 4 போட்டிகளில் வெற்றியும், ஒரு போட்டியில் எகிப்து அணியிடம் தோல்வியைத் தழுவி, மூன்று போட்டிகளில் வெற்றி தோல்வியின்றியும் முடித்துக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் விசா மறுத்த ஆர்ஜென்டீனா கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் மரடோனாவிற்கு தென்கொரியா அனுமதி

ஆர்ஜென்டீனா கால்பந்து அணியின் முன்னாள் தலைவரும் கால்பந்து விளையாட்டின் நட்சத்திர வீரருமான மரடோனாவிற்கு தென் கொரியா விசா வழங்கியுள்ளது.

இதன் மூலம் தென்கொரியாவில் நடைபெறும் உலக்கிண்ண கால்பந்து போட்டிகளில் போது மரடோனா வர்ணனையாளர்கள் வரிசையில் இடம்பெறுவார் எனத் தெரிகிறது.

போதை மருந்து உபயோகித்த தாக முன்பு குற்றம் சாட்டப்பட்டுள்ள மரடோனாவிற்கு ஜப்பானிய அரசு விசா வழங்க மறுத்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்ஜென்டீனா கால்பந்து அணி பங்கு கொள்ளும் முதல் கற்றுப் போட்டிகள் அனைத்தும் ஜப்பானில் நடைபெறுகிறது.

எனவே அப்போட்டிகளை காணும் ஆவலில் ஜப்பான் வருவதற்காக மரடோனா முதலில் விசாவுக்கு ஜப்பான் அரசிடம் விண்ணப்பித்திருந்தார். ஆனால் போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர் மீது ஏற்கனவே தொடரப்பட்டுள்ள வழக்கு ஒன்று இன்னும் முடியாமல் உள்ளதால் ஜப்பான் அரசு அவருக்கு விசா வழங்க மறுத்துவிட்டது.

இந்நிலையில் தென்கொரியா அரசாங்கத்திடம் விசா வேண்டி பயண முகவர் ஒன்றின் மூலம் மரடோனா விண்ணப்பித்திருந்தார். அவருடைய அந்த விண்ணப்பம் ஏற்கப்பட்டு அவருக்கு விசா வழங்கப்பட்டுள்ளதாக தென் கொரியா அறிவித்துள்ளது.

ஜப்பான் போல தென்கொரியாவின் சட்டதிட்டங்கள் அத்தனை கடுமையானவைகள் அல்ல. போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் அவர் மீது இருக்கின்றன. என்றாலும் அவரது வேண்டுகோளை ஏற்று அவருக்கு அனுமதி வழங்குவது என்று முடிவு செய்துள்ளோம்.

அவர் எவ்வளவு பெரிய வீரர். அவரால் எங்கள் நாட்டுக்கு ஆபத்து என்று நாங்கள் கரதவில்லை. அவருடைய வருகை உலகக் கிண்ணத்தைக் காண வரும் இலட்சக்கணக்கான பார்வையாளர்களைப் பரவசப்படுத்தும் என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. அவர் விரும்பினால் இங்கு வந்து வர்ணனையாளராகப் பணி புரியலாம். அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தென்கொரியாவின் கால்பந்துச் சங்கம் செய்து கொடுக்கத் தயாராகவுள்ளது.

அவரை மட்டுமல்ல மேலும் பல முன்னாள் கால்பந்து வீரர்களான மைக்கேல் பிளாடினி (பிரான்ஸ்) ஈசிபயோ (போர்த்துக்கல்) பிரான்ஸ் பெக்கன்பேயர் (ஜேர்மனி) மற்றும் குனிஹிகே கமமோடோ (ஜப்பான்) ஆகியோருக்கும் தென்கொரியா அரச அழைப்பு விடுத்துள்ளது என்று தென்கொரியாவின் நிதித்துறை அமைச்ச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே ஜப்பானிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறுத்து கருத்துத் தெரிவித்த மரடோனா "நான் யாரையும் கொலை செய்யவில்லை. ஜப்பான் அரசின் சட்டதிட்டங்களை நான் மதிக்கின்றேன். நான் அவர்கள் மீது நியூகீனியர் அனுகுண்டையாக வீசப்போகின்றேன்? பாதுகாப்புத்தான்முக்கியம் என்றால் அமெரிக்க கால்பந்து அணியை தங்கள் நாட்டுக்குள் அனுமதித்திருக்கக் கூடாது என்று கூறியிருக்கிறார்.

1986 ஆம் அண்டு ஆர்ஜென்டீனா அணி உலகக் கிண்ணத்தை வெல்லக் காரணமாயிருந்த மரடோனாவிற்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர் கள் உள்ளனர். ஜப்பான் நாட்டி லேயே அவருக்கு ரசிகர்களின் எண்ணிக்கை ஏராளம். இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் ஜப்பான் அரசு அவருக்கு விசா வழங்க மறுத்து விட்டது தவறான செயல் என்று கால்பந்து ரசிகர்கள் பரவலாக எண்ணுகி றார்கள் என்று ஆர்ஜென்டீனா கால்பந்து அணியின் பயிற்சியாளர் ஜப்பானில் செய்தியாளரிடம் கூறினார்.

உலக உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவராக மீண்டும் பிளேட்டர் தெரிவு

உலக உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக சுவிற்சர்லாந்தைச் ஜோசப் பிளேட்டர் அதிகப் படியான வாக்குகளினால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்கொரியாவின் சியோல் நகரில் மேற்படி சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் ஜோசப் பிளேட்டர் தலைமையில் நடைபெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் இக்கூட்டத்தில் தலைவர் பதவிக்கு பிளேட்டருக்கு எதிராக கமறூன் உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் இஸ்சாஹயட்டோவும் போட்டியிட்டார். வாக்கெடுப்பில் பிளேட்டர் வெற்றி பெற்றார்.

66 வயதான பிளேட்டர் கடந்த நிர்வாகத்தில் பெரும் நிதிமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் பிளேட்டரில் தலைமையில் இயங்கிய செயலாளர், மூன்று உபதலைவர்கள் கடந்த மாதம் பதவிகளை இராஜினாமாச் செய்ததுடன் பிளேட்டருக்கு எதிராக வழக்கும் தொடர்ந்திருந்தனர். தன்மீது கமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் மறுத்த பிளேட்டர் எது சரி, எது பிழை என்பதற்கு எதிர்வரும் பொதுக்கூட்டத்தின் மூலம் பதில் கிடைக்கும் எனத் தெரிவித்தார். பிளேட்டர் கடந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை உதைப்பந்தாட்ட வளர்ச்சிக்காக பெருமளவு பண உதவிகளைச் செய்தார்.

ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
• உரிமைகள் • நன்மைகள்
• பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
• தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
• கல்வி /வணிக இழப்புகள்
• வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
• மருத்துவ வசதிகள்
போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"

Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

அதிரடியாக பதவியில் இருந்து நீக்கப்பட்ட கனடாவின் பிரபல்யமான அமைச்சர் ஆர்ட் எக்லிங்டன்

1993 ஆம் ஆண்டு லிபரல் கட்சி கனடாவில் ஆட்சிபீடம் ஏறிய நாளில் இருந்து அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்த திரு ஆர்ட் எக்லிங்டன் அவர்கள் 36,500 டொலர் பெறுமதியான இராணுவ ஒப்பந்தம் ஒன்றில் தமது முன்னாள் பெண் சிநேகிதி ஒருவருக்கு சாதகமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கடந்தவாரம் அமைச்சர் பதவியில் இருந்து பிரதமர் கிறிச்சியான் அவர்கள் தூக்கியெறிந்துள்ளார்.

58 வயதான இவர் முன்னாள் ரொறன்ரோ நகரில் மேஜராகப் பதவி வகித்தவர். யோர்க் மத்திய பகுதியில் இருந்து பாராளுமன்றத் திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

எமது பதவியினை திடீர் என பிரதமர் பறித்துக் கொண்டதில் எதுவித நியாயமும் இல்லை. எது விதமான தப்புகளும் இங்கு நடக்கவில்லை. லிபரல் கட்சிக்கும் தலைமைக்கும் விசுவாசமாகவே நான் செயற்பட்டு வந்தேன். சில நேரங்களில் அரசியலில் சில நிகழ்வுகள் உண்மைகளை மறைக்கின்றன என்றே கூற்றே இங்கு நடந்துள்ளது என தமது பதவி பறிப்பு தொடர்பாக திரு ஆர்ட் எக்லிங்டன் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார். இப்பதவிக்கு இது வரை காலமும் மார்க்கம் பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இதுவரை காலமும் நிதிநிறுவனங்களின் சிரேஷ்ட அமைச்சரா இருந்த திரு ஜோன் மக்கலும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எற்றோபிக்கோ - லேக்சோர் பகுதியில் இருந்து பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட ஆபிரிக்கக் கறுப்பினத்தினைச் சேர்ந்த ஜீன் அகஸ்டீன் என்னும் பெண்மணி பல்கலாச்சார பெண்கள் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவின் வரலாற்றில் இப்பதவிக்கு முதன்முதல் தெரிவு செய்யப்பட்ட ஆபிரிக்க கறுப்பினப் பெண் என்ற இடத்தினை இவர் தற்போது பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் அரசவைத் தலைவராக இருந்த திரு னால்ட்டுடேல் பொதுப்பணித் துறை அமைச்சராக மாற்றப்பட்டுள்ளார். இதே அரசாங்க அரசவைத் தலைவராக திரு டொன் போட்றியா மாற்றியமைக்கப்பட்டுள்ளார்.

அரோரா பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டு விஞ்ஞான ஆய்வுதுறையின் சிரேஷ்ட அமைச்சராக இருந்த திரு மறியோ வெவ்லாக்குவா நிதி அமைச்சின் பிரிதி அமைச்சராக மாற்றியமைக்கப்பட்டுள்ளார்.

இதே விஞ்ஞான ஆய்வுத் துறையின் சிரேஷ்ட அமைச்சர் பதவியினை ஏற்கனவே அமைச்சரவையில் இருந்த திரு றிபார்கன் மேலதிகமாகப் பொறுப்பேற்றுள்ளார். கடந்தவாரம் பிரதமர் கிறிச்சியான் அவர்கள் அரசின் ஒழுக்கவியல் தொடர்பாக சில மாற்றங்களை மேற்கொள்ளப் போவதாக அறிவிப்பினை மேற்கொண்டதனைத் தொடர்ந்தே இவ்வதிரடி மாற்றங்களை திடீர் என மேற் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக எதிர்கட்சிகள் கருத்து தெரிவிக்கும் போது அமைச்சரவைகளின் மாற்றங்கள், ஒழுக்கங்கள், தரங்கள் தொடர்பான அடிப்படை பிரச்சனைகளின் தீர்வுக்கு வழிகாட்டி யாக இருக்கப் போவதில்லை என்றனர்.

கனேடியச் செய்திகள்

தொகுப்பு:சிவ.பஞ்சலிங்கம்

உச்சநிலையில் பிரதமர் – நிதிஅமைச்சர் மோதல்

கனடாவில் கமார் 39 வருட கால அரசியல் அனுபவத்துடன் கடந்த ஒன்பது ஆண்டுகளாக பிரதமராக இருக்கும் திரு ஜீன் கிரைச்சியான் அவர்களுக்கும் அவரது அமைச்சரவையில் அவருக்கு சமமான நிலையில் இருக்கும் நிதிஅமைச்சர் திரு போல் மாட்டின் அவர்களுக்கும் இடையில் லிபரல் கட்சியின் தலைமையினைக் கைப்பற்றுவது யார் என்ற மோதல் பல வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டு அடங்கியிருந்த போதிலும் கடந்த வாரம் மீண்டும் பலமாக ஒலித்து, கனடாவின் பொதுஜனத் தொடர்பு சாதனங்களில் பகிரங்கமாகி வரத் தொடங்கியுள்ளது.ரொறன்ரோவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடந்த லிபரல் கட்சியினரின் நிதிசேகரிப்பு வைபவத்தில் இக்கருத்து மோதல்கள் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

"தலைமை பதவி போட்டியில் தமது வாயை மூடவில்லையானால் அமைச்சர் பதவியில் இருந்து தூக்கி எறிவேன். கடந்த 39 வருடகால அரசியல் அனுபவத்தில் சண்டை என்பது எனக்கு பிடித்த விடயம்" என பிரதமர் நிதிஅமைச்சரை நோக்கி ஆவேசமாகத் தெரிவிக்க, நிதி அமைச்சரும் தாம் இவ் அமைச்சரவையை விட்டு விலகும் திட்டத்தில் இருப்பதாக பகிரங்மாகத் தெரிவித்தார். இவர்களுடைய பதவிப் போட்டி 1990 ஆம் ஆண்டுமுதன்முதல் ஆரம்பித்தது

வருமானவரியில் மோசடி செய்தவருக்கு நீதிமன்றத் தண்டனை

மிஸிசாகாவில் வசிக்கும் திரு டேவிட்மைக்கல் என்னும் ஓய்வு பெற்ற நபர் ஒருவர் தமது சொந்தத் தொழிலாக தாம் மேற்கொண்டு வரும் வீடுகள் திருத்தும் வேலைகளிர் பெற்ற ஏராளமான வருமானங்களில் கமார் 250,000 டொலர் வருமானத்தினை 1994 - 1996 ஆம் ஆண்டு காலங்களில் முறையாக வருமானவரி நிணைக்களத்திற்கு சமர்ப்பிக்க தவறிய குற்றத்திற்காக பிரம்டன் நீதிமன்றத்தில் தமது குற்றத்தினை ஏற்றுக் கொண்டதனைத் தொடர்ந்து நீதிமன்றம் செலுத்த வேண்டிய நிலையில் தவறிய வரி, வருமான வரித் நிணைக்கள தண்டனைப பணம், நீதிமன்றத் தண்டனைப் பணம் ஆகியன யாவும் கொடுத்து தீர்க்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மோசடி சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பிடிக்கப் போய் பிடிபட்ட ஏராளமான மோசடி வங்கிக் கடன் அட்டைகள்

மொன்றியால் நகரில் கியுபெக் மாகாண பொலிஸ் உத்தியோகத்தர்கள், மோசடி சாரதி அனுமதிப் பத்திரத்தினை துப்புத் துலங்கப்போய் ஏராளமான வங்கிக் கடன் அட்டைகள், சமூகக் காப்புறுதி அட்டைகள் யாவற்றினையும் கைப்பற்றினர்.

போலி வங்கிக்கடன் அட்டைகள், உட்பட கமார் 30,000 அட்டைகள் பிடிக்கப்பட்டுள்ளன. இதே அட்டைகளை உருவாக்கும் அதி தொழில்நுட்பம் வாய்ந்த சிறு இயந்திரம் மற்றும் ஒரு துப்பாக்கியும் இவ்விடத்தில் கைப்பற்றப்பட்டது.

இவ் மோசடி தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் ஏராளமானோர் இவற்றுடன் தொடர்புடையோர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சம்பவத்தினைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் ஏனைய நாடுகளுடனும் தொடர்புகளை உருவாக்கி புலனாய்வுகள் தொடந்த வண்ணமுள்ளன.

சில கடன் அட்டைகள் 150,000 டொலர் வரை கடன் எல்லை உள்ள அட்டைகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டிருந்ததும் தெரிய வந்துள்ளது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தீ விபத்தினைத் தடுக்கப் போய் தீயில் மாண்ட தீயணைப்பு படை வீரர்

பரி நகரில் உள்ள இரண்டு மாடிகள் இரண்டாக இணைக்கப்பட்ட வீடு ஒன்றில் தீவிபத்து ஏற்பட்ட தனைத் தொடர்ந்து அத்தீ விபத்து வீட்டு நிலஅறையில் இருந்து உருவாக்கியதனையடுத்து அதனை அணைப்பதற்காக சென்ற தீயணைப்பு படை வீரர்களில் ஒருவரான திரு பில்வில்கின்ஸ் (32வயது) என்பவர் தீயில் கருகி பரிதாபகரமாக மரணமானார்.

இதே இடத்தில் இன்னொரு தீயணைப்பு வீரர் காலில் எரிகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தீயணைப்பு படையில் சேர்ந்த இவருக்கு இரு சகோதரர்கள் உண்டு. இதேவேளை இவரது திருமணமும் நிச்சயிக்கப்பட்டு இருந்தது.

அவசரமாக தீக்காயங்களுடன் ஏயர் அம்புலன்சில் றோயல் விக்டோறியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டவர் அங்கு மரணமானார். கடந்த மே முதலாம் திகதி 2001 ரொறன்ரோவில் தீயணைப்பு படை கப்டன் திரு பாங்கரே என்பவர் மரணமாகியிருந்தார். கடந்தவாரம் பரி நகரசபை மண்டபத்தில் நகரசபை உறுப்பினர்கள், தொழில் நேரத்தில் மரணமான இந்த தீயணைப்புப்படை வீரனுக்காக சிறிதி நேரம் மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டனர்.

வேலை நேரத்தில் ஏற்பட்ட தொழிலாளியின் உடற் காயத்திற்காக தலைமை இயக்குநர்கள் மீது வழக்கு

கமார் ஒரு வருடங்களின் முன்பு கிறேட் வேக்ஸ் பவர் த கோப்பரேஷன் என்னும் மரம் வெட்டும் கம்பனியில் பணியுரிந்த இளைஞன் ஒருவர் தமது தொழில் நேரம் தமது கை, கால்களை இழக்கும் நிலைமைக்கு விபத்தினை எதிர் கொண்ட சம்பவத்தில் இக்கம்பனியின் தலைமை இயக்குனர்கள் மூவருக்கு எதிராக ஒன்ராறியோ தொழிலாளர்கள் அமைச்சர் தொழிலாளர் பாதுகாப்பு சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இக்குற்றச் சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் இந்த இயக்குநர்கள் ஒவ்வொரு வரும் 25,000 டொலர் வரை பணத் தண்டனையும், ஒரு வருடம் வரையிலான சிறைத்தண்டனையும் பெறுவதோடு இத் தொழில் நிறுவனமும் ஐந்து லட்சம் டொலர் வரை பணத்தண்டனை க்கு உள்ளாக்கப்படலாம்.

அடுத்த வாரம் முதல்!
கேள்வி - பதில் மருத்துவம் விளையாட்டு
பகுதிகள் ஆரம்பம்.

வாசகர்களே! உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். கேள்விகள் அனுப்ப வேண்டிய தொலைநகல் (905) 653 - 4031

மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்
- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- Investment Fund
- RSP • RIFs and Annuities

SINCE 1871
One of the best & leading companies in North America
CANADA LIFE

பலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 0919
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

முன்னைய பேச்சுவார்த்தைகளிலிருந்து வேறுபடும் உத்தேச தாய்லாந்து பேச்சு!

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெற இருக்கும் நேருக்கு நேர் முதல் சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு முக்கிய காரணத்துக்காக முன்னைய சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றது.

அரசியல் தீர்வுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்று இல்லாததே அதுவாகும். ஆனால் இது தான் இந்தத் தெற்கு ஆசியத் தீவு நாடான இலங்கையில் இரத்தக் களரியை ஏற்படுத்தி வரும் இனப்பிரச்சனைக்குத்தீர்வு காண எடுக்கப்படும் ஐந்தாவது முயற்சியும்கூடுதல் நம்பிக்கை வாய்ந்ததுமாகும். இந்த முறை நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் இரு தரப்பினரும் சமபங்கை வகிப்பார்கள். இவ்விதம் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி நிரல் பின்னர் பேச்சுவார்த்தை மேசையில் சமர்ப்பிக்கப்படும். இலங்கை ஊடகங்களில் வெளியிடப்படுவது போன்று இந்த 'பேச்சுக்கள் பற்றிய பேச்சுக்கள்' மற்றுமொரு செயற்பாட்டைக் கொண்டுள்ளன.

இறுதியான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இரு தரப்பினரும் எதிர்க்கருத்துக்களில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தன்மையை உருவாக்கிக் கொள்ளுதல். ஏற்கனவே பேச்சுக்கான பேச்சுக்களின் போது தான் முன்வைக்க இருக்கும் சில விடயங்களை அரசாங்கம் சூசகமாகத் தெரிவித்துள்ளது.

அவற்றுள் முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்கது, நாட்டில் பெரும்பாலாக தமிழ் பேசப்படும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துதல் ஆகும்.

உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுக்கு கூடுதல் ஸ்தானங்கள் வழங்கப்படும் என்று விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தமிழ்ச் செய்தியாளர் டி.பி.ஸ்.ஜெயரா ஒரு சுயாதீன இலங்கைப் பத்திரிகையான சண்டே லீடரில் அண்மையில் எழுதியிருந்தார். இது உண்மையானால் புலிகள் முதற் தடவையாக இலங்கையில் பிரதான அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வதை முதல் தடவையாக அவதானிக்கமுடியும்.

இதுவரை காலமும் அவர்கள் பின்பற்றி வந்த பாதையிலிருந்து இது பெரிதும் வேறுபட்டதாகும். மேலும் நிலையான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் புலிகள் ஒரு தீவிரவாத இயக்கம் என்ற முறையில் அல்லாமல் ஒரு அரசியல் அமைப்பு என்ற வகையில் கலந்து கொள்ளும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழீழ அரசை அமைப்பதற்கெனபுலிகள் இலங்கை அரசாங்கத்துக் கெதிராகப் பிரிவினைவாத யுத்தம் ஒன்றை நடத்தி வந்துள்ளனர்.

நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களிலும் பார்க்கப் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு சலுகைகளை வழங்கி வந்த அரசாங்கக் கொள்கைகளினால் உருவான யுத்தத்துக்கு இதுவரை 60000 க்கும்அதிகமானோர் பலியானார்கள். நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களில் கூடுதலானோர் தமிழர்களும் அடுத்து முஸ்லிம்களுமாவார். பிரச்னைக்கான அரசியல் தீர்வு முயற்சியில் தற்போதைய அணுகுமுறை இதற்கு முன்னர் மேற்கொண்ட முயற்சியின்

மேற்கு நாடு ஒன்று விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே தீர்வு ஒன்றைக் கொண்டு வர முயற்சி செய்வது இதுவே முதல் தடவை. பிரச்னைத் தீர்வுகளில் நோர்வே ஆற்றிவரும் பங்களிப்பை அவதானிக்கும்போது சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இந்தத் தடவை கிடைக்குமென்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இன்னமும் இதுவரை காணப்பட்ட முன்னேற்றம் வெற்றிகரமான இறுதிப்பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்லுமா என்பது குறித்து நிச்சயமாகக் கூறமுடியாதிருக்கின்றது.

போது அவ்வேளையில் ஆட்சியிலிருந்த அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதென தீர்மானித்ததும் சமாதானத் தீர்வுகான இறுதி விடயங்கள் பற்றிப் பேசு நடத்துவதில் ஆர்வம் காட்டியது. சமாதானத்துக்கான அவசர முயற்சியில் அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைத்தது. 1989 - 90 ஆம் ஆண்டு சமாதான முயற்சியின்போது பதவியிலிருந்து மற்றுமொரு அரசாங்கம் சமாதானத்தின் உயர் அரசியல் விவகாரங்களில் தீர்வு காணும் நோக்கத்துடன் விரைந்து செயற்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் இரு தரப்பினருக்கும் இந்திய அமைதி காக்கும் படை மீதிருந்த பகைமையே இரு தரப்பினரையும் சமாதான மேசைக்கு வரத் தூண்டியது.

இந்தியாவின் பங்களிப்பு அவ்வேளையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சியின் பேரில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதி காக்கும் படை நிலை கொண்டிருந்தது.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காகப் புலிகள் கொழும்புக்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தனர். ஆனால் விடுதலைப் புலிகள் இத்தகைய சமாதான முயற்சிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவில்லையென்பது தெளிவாகியது. அவர்கள் சமாதானப் பேச்சுக்களைப் பயன்படுத்தி தங்கள் இராணுவ பலத்தைப் பலப்படுத்தினர்.

போர் அமைதியின்போது மீண்டும் போராளிகளைச் சேர்த்து இலங்கை அரசுடன் அடுத்த கட்டப் போருக்கு தங்களைத் தயார்ப்படுத்தினார்கள்.

தற்போது அயல்நாடான இந்தியாவிலும் பல மேற்கு நாடுகளிலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் 1998 ஜனவரி தொடக்கம் புலிகள் தடை செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய பேச்சுவார்த்தை ஆரம்பமாகு முன்னர் தடையை நீக்குமாறு புலிகள் கோரி வருகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதப் பிற்பகுதியில் புலிகளும் அரசும் தன்னிச்சையாக யுத்த நிறுத்தத்தை அறிவித்த பின்னர் பெப்ரவரியில் உத்தியோகபூர்வ போரமைதி அமுலுக்கு வந்தாலும்தற்போதைய முயற்சிகளை விமர்சிப்பவர்கள் புலிகளை நம்பமுடியாது என்றே கூறினர்.

புலிகளுக்குத் தங்களால் யுத்தத்தில் வெற்றி காண முடியா தென்பது தெரியும். மேலும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தனிநாட்டுக்கான அவர்களது அர்ப்பணிப்பு மாறாதிருப்பதால் ஒரு அரசியல் இராணுவக் கொள்கை ஒன்றை அவர்கள் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

இதற்காகவே புலிகள் செப்டம்பர் 11 க்கு நீண்டகாலம் முன்பே புதியதொரு சமாதான முயற்சிக்கு விருப்பம் தெரிவித்தார்கள் என்று திஸ்ஸராணி குணசேகர லங்கா அக்கடமிக் என்ற இணையத்தளச் சஞ்சிகையில் எழுதியிருந்தார்.

அரசாங்கமும் அதன் சமாதான முயற்சிகளைத் தொடர்வதென உறுதிபூண்டது. புலிகளின் யுத்த நிறுத்த மீறல் பற்றிய அறிக்கைகள் குறித்துத் தெரிந்தும் தெரியாமலும் இருந்து வந்தது.

வடக்கு கிழக்கில் புலிகள் தமிழ்ச்சிறுவர்களை கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளுதல், நிதி சேர்த்தல் போன்றவை இவற்றில் அடங்கும். அரசாங்கம் இந்த மனப்போக்கை கடைப்பிடிப்பதுடன் வருட ஆரம்பத்தில் யுத்தம் காரணமாகப் பல கஷ்டங்களுக்குள்ளான வடபகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும் ஆரம்பித்தது.

தமிழ் மக்களின் கட்டுப்பாடற்ற போக்குவரத்து, உணவு, மருந்துப்பொருட்கள் விநியோகம் உட்பட தமிழ் மக்களின் துயரங்கள் போக்கப்படவேண்டும் எனப் புலிகள் விடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றப்பட்டன.

இந்த முயற்சிகளை பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் என்று வர்ணித்த அரசாங்கத்தின் உள்நோக்கமும் வெளியானது.

சமாதான முயற்சிகளிலிருந்து புலிகளை விலகிச் செல்லாமல் வைத்திருப்பதும் சமாதான நடைமுறைகள் முழுவதிலும் அவர்களை ஈடுபட வைப்பதுமே அரசின் நோக்கமாகும். உண்மையில் இந்த வழிமுறை முதலில் யுத்த நிறுத்தம் பின்னர் யுத்தப்பிரதேசங்களில் சுமுக நிலையை ஏற்படுத்துவது. இதனையடுத்து 'பேச்சுக்கள் பற்றிய பேச்சுக்கள்' போன்றவை இலங்கையில் சமாதானத் தீர்வுக்கான புதிய படிமுறைகளாக இருக்கின்றன. மேற்கு நாடு ஒன்று விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே தீர்வு ஒன்றைக் கொண்டு வர முயற்சி செய்வது இதுவே முதல் தடவை. பிரசனைத தீர்வுகளில் நோர்வே ஆற்றிவரும் பங்களிப்பை அவதானிக்கும்போது சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இந்தத் தடவை கிடைக்குமென்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இன்னமும் இதுவரை காணப்பட்ட முன்னேற்றம் வெற்றிகரமான இறுதிப்பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்லுமா என்பது குறித்து நிச்சயமாகக் கூறமுடியாதிருக்கின்றது. (ஐ.பி.எஸ்)

நமது நோக்கு

எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

சமாதான முயற்சிகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆரம்பத்தில் காணப்பட்ட வேகம் இப்போது காணாமற்போய்விட்டது என தமிழ்ச்செல்வன் சரியாகத் தான் சொல்லியிருக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு அரச தரப்பிலிருந்து 'மௌனம்' தான் இதுவரையில் பதிலாக உள்ளது.

வேகமடைந்து வரும் இராணுவ மாற்றம் பேரினவாத அழுத்தங்கள் ரணிலின் 'தொனி'யில் பெருமளவு மாற்றங்களைச் செய்துவிட்டது. இந்த மாற்றம் இப்போது வெளிப்படையாகவே தெரிகின்றது. அவர் அதனை மறைக்கவும் இல்லை. மறைக்கமுடியவுமில்லை.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படும் என்பதை முதலில் கூறியவர் ரணில் விக்கிரமசிங்க தான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதுகூட தான் வெற்றி பெற்றால் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படும் என அவர் கூறியிருந்தார்.

'இடைக்கால நிர்வாகமா' என எழுந்துள்ள பேரினவாதக் குரல்கள் இப்போது அவரைத் தடுமாறச் செய்துள்ளது. 'அப்படியாருக்கும்வாக்குறுதி கொடுக்கவில்லை' என குரல் தழுதழுக்கப் பதிலளிக்கவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டிருப்பது சமாதான முயற்சிகளில் யார் இப்போது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள் என்பதை உணர்த்தப் போதுமானது.

''ஈழத்தைவிட எதனையிட்டும் பேசத் தயார்'' என்று தான் ரணில் முதலில் அழைப்பு விடுத்தார். இப்போது தாயகத்தை ஏற்கமுடியாது. சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒற்றையாட்சி முறைக்குள் தான் தீர்வு என பிரதமர் அடுக்கிக் கொண்டே போகின்றார். இந்த அடுக்கல்கள் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் வாக்கியங்களாகவே உள்ளன.

ரணிலிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் - தமிழர்களுக்கு ஏமாற்றமாகவே இருக்கின்றது.

தமது அபிலாஷைகள் பற்றியும் பேசப்படும் என எதிர்பார்த்த தமிழ் மக்கள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளத்தின் கதையை வாசித்தவர்களாகவே உள்ளார்கள். பண்டாரநாயக்காவிலிருந்து இலங்கைத் தீவை ஆண்ட ஒவ்வொரு தலைவர்களும் செய்ததைத் தான் ரணிலும் செய்யப்போகின்றாரா என்ற சந்தேகத்தை அவரது இந்தத் தளர்வுப்போக்குத்தான் உருவாக்கியிருக்கின்றது.

கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்த ஒரு கருத்து இந்த இடத்தில் கவனிக்கத்தக்கது. 'நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணக்கூடிய அரசியல் வலு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருக்கும் எனக் கருதவில்லை. அதனால் தான் இடைக்கால நிர்வாகத்தைக் கேட்கின்றோம்'' என பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

ஆனால் இப்போது அரசியலில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது கூட பல தடைகளைத் தாண்டவேண்டிய ஒரு நிகழ்வாகவே இருக்கப்போகின்றது என்பதைத் தான் புலப்படுத்துகின்றது.

புலிகளுக்கு எதிரான தடையை நீக்கும் விவகாரத்தில் கூட பேரினவாதிகளுக்கு அஞ்சும் நிலையில் தான் ரணில் உள்ளார். சட்டத்துறையின் அதியுயர் பீடமாக உள்ள சட்டமாஅதிபர் மட்டுமன்றி பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூட பேச்சுக்களுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டியது அவசியமானது என்பதை பல ஆதாரங்களுடன் வலியுறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் ரணில்.....?

சமாதானத் தீர்வு என்பது வழமைபோல பேரினவாதிகளின் அழுத்தங்களுக்கு அரசு எந்தளவுக்கு இணங்கிப்போகின்றது என்பதில் தான் தங்கியுள்ளது. சமாதான முயற்சிகளை அணுகுவதில் புதிய முறைகளைக் கடைப்பிடித்த பிரதமர் இவ்விடயத்தில் சறுக்கிவிடக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கைப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையே கடந்த பெப்ரவரியில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது மூன்று மாதங்களைக் கடந்துள்ளது. நோர்வேயின் அனுசரணையோடு வன்னியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் கைச்சாத்திட்ட இப்புரிந்துணர்வு ஒப்பந்தமே இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்ற சமரச முயற்சிகளுக்கான அத்திவாரமாகவும் இருக்கின்றது. இருந்தபோதிலும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலும் பலப்படுத்தப்பட்டு அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள் முழு அளவில் அமுல்ப்படுத்தப்படவேண்டியதாக இருக்கின்றது.

ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் வடக்கு கிழக்கு உட்பட முழு நாட்டிலுமே யுத்த பீதி பெரிதும் அகன்றிருக்கிறது.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நாடு முழுவதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் மீது நிலவிய கெடுபிடிகள் தற்போது பெரிதும் குறைவடைந்துள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆங்காங்கே சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் பெருமளவில் நெருக்கடிகள் எதுவும் காணப்படவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து யுத்த நிறுத்தம் முழு அளவில் இருப்பதோடு சமரச நடவடிக்கைகளில் அனுசரணையாளர்களாகக் கடமையாற்றும் நோர்வே யுத்த நிறுத்தக் கண்காணிப்பை மிக விரிவாகவே மேற்கொண்டு வருகின்றது.

படைத்தரப்பில் அவ்வப்போது விடுதலைப் புலிகளைச் சீண்டிவிடும் போக்கு காணப்படுகின்றது. ஆனால் இது விடயத்தில் விடுதலைப் புலிகள் மிக அவதானமாகவே நடந்து கொள்கின்றனர்.

அண்மையில் கிழக்கிலங்கையில் இடம் பெற்ற கடற்படையினர் சம்பந்தப்பட்ட சம்பவத்தில் கூட விடுதலைப் புலிகள் மீது படைத்தரப்பு விஷமத்தனமான முறையிலேயே குற்றச்சாட்டை சுமத்தியிருந்த தென்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வாகரைச் சம்பவம் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுமோ என்ற பயம் கூடத் தோன்றி யிருந்தது. ஆனால் நோர்வே யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் உடன் செயலில் இறங்கி நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். கடற்படையினர் மேற் கொண்ட தவறுகாரணமாகவே வாகரையில் பிரச்னை தோன்றியிருந்ததையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மூலம் அறியமுடிந்தது.

வாகரைச் சம்பவத்தையடுத்து யுத்த நிறுத்தக் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கடலில் ரோந்துக் கப்பல்களில் யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ள துடன் தரையிலும் யுத்த நிறுத்த நடவடிக்கைகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர மேலதிகமாக இரு பத்தியிரண்டு யுத்த நிறுத்தக் கண்காணிப் பாளர்கள் ஸ்கண்டி நேவியா விலிருந்து இலங்கைக்கு இவ் வாரம் வருகை தந்துள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களது எண்ணிக்கை 45 ஆக உயரும் என தெரி விக்கப்பட்டுள்ளது.

எனவே ரணில் - பிரபா ஒப்பந்தத்தின் பிரதான அம்சமான யுத்தநிறுத்தம் பலப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அந்த ஒப்பந்தத்தில் இருக்கின்ற ஏனைய அம்சங்களின் அமுலாக்கம் தொடர்பாகவே ஒரு தொய்வு நிலை காணப்படுகின்றது.

இதனை அண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் சுட்டிக்காட்டி யிருந்தார்.

வடக்கு கிழக்கின் ஆலயங்கள், பாடசாலைகள் என்பவற்றில் ஆயுதப்படையினர் பெருமளவில் நிலை கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக இதுவரை காலமும் சாதாரண மக்களுக்கு மிகுந்த இடைஞ்சல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவையே ஏற்பட்டு வந்தன.

ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலைகள், கோயில் கட்டிடங்கள் என்பவற்றிலிருந்து ஆயுதப்படையினர் வெளியேறவேண்டு மென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 90 நாட்கள் பூர்த்தியடைந்த நிலையிலும் அதாவது மூன்று மாதங்கள் கழிந்த போதிலும் கோவில்கள், பாடசாலைகள் என்பவற்றிலிருந்து ஆயுதப்படையினர் வெளியேறாமலேயே இருந்து வருகின்றனர். இதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களிடையே யுத்த பீதி தொடர்ந்து நிலவி வருவதையும் காண முடிகின்றது. இது தவிர தமிழ்கைதிகள் பலர் விசாரணைகள் எதுவுமின்றி கடந்த பல வருடங்களாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகர் விடுதலைப் புலி சந்தேக நபர்கள் எனத் தெரிவித்தே கைது செய்யப்பட்டனர்.

தனஞ்சயன்

ஆனால் ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதையடுத்து விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் விரிவான அரசியல் பிரவேசத்தை மேற்கொண்டுள்ளபோதிலும் பல வருடங்களுக்கு முன்னர் கைதான தமிழ் இளைஞர்கள் விசாரணைகள் எதுவுமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது. எனவே இக்கைதிகள் விவகாரம் கூட அரசு புலிகள் புரிந்துணர்வு விடயத்தில் கவனத்திலெடுக்கப்படவேண்டியதாகவே இருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெற்கே மாத்தறைப் பகுதியில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய போது தமக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்று மாதகாலத்தைப் பூர்த்தி செய்துள்ளதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அச்சமயம் இந்த மூன்று மாத காலம் பூர்த்தியானதுமே அடுத்த கட்ட நடவடிக்கையாக சமரசப் பேச்சுக்கள் பற்றித் தீர்மானிக்கப்படும் என்று பிரதமர் ரணில் குறிப்பிட்டிருந்தார்.

அரசு - புலிகள் பேச்சுவார்த்தையே தற்போது அனைவரும் எதிர்பார்த்திருக்கும் முக்கிய விடயமாக இருக்கின்றது.

தாய்லாந்தில் இப்பேச்சுவார்த்தை இடம் பெறுமென்பது தற்போது பெரிதும் உறுதியாகி விட்டது. தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் பாங்கொக்கில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகளை கவனிக்க ஆரம்பித்துள்ளார்.

பெரும்பாலும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தம் மீதான தடையை இலங்கை அரசாங்கம் அகற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

இது பற்றி அரச தரப்பில் தற்போது பிரதானமாக ஆராயப்பட்டு வருகின்றது. புலிகள் மீதான தடைபெரும்பாலும் தாய் லாந்துப் பேச்சுக்களுக்கு முன்பதாக தற் காலிகமாகவேனும் அகற்றப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனையடுத்து வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் விடயமும் அரச தரப்பினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இந்த இடைக்கால நிர்வாக அமைப்பின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளது பொறுப்பில் புனர்நிர்மாணம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பவை வடக்கு - கிழக்கில் மேற் கொள்வதற்கு இடமளிப்பது பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது. ஏனெனில் வடக்குகிழக்கைப் பொறுத்தவரை பரவலாகவே அனைத்துப் பகுதிகளிலும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலேயே பெருமளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. எனவே இச்சேதங்களை மறுசீரமைப்பதற்கு விடுதலைப் புலிகளது நேரடிப்பங்களிப்பு பெரிதும் வேண்டப் படுவதாகவே இருக்கின்றது.

கடந்த இருபது வருட கால யுத்தத்தில் வடக்கு கிழக்கில் பொலிஸ் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் என்பவை சீரற்றவையாகவே இருந்து வந்துள்ளன. இவற்றைச் சீராக்குவதற்கும் நாளடைவில் ஒரு புதிய நிர்வாக முறையை சமரச முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் வடக்கு கிழக்கில் ஏற்படுத்துவதற்கும் முன்னோடியாகவே விடுதலைப் புலிகள் அமைப்பு இடைக்கால நிர்வாக முறையைக் கோரி நிற்கின்றது.

அரச தரப்பில் இது குறித்து எவ்வித முடிவுகளும் இதுவரை எடுக்கப்படாதிருக்கின்ற தாயினும் எதிர்க்கட்சிகள் குறிப்பாக ஜேவிபி, சிஹல உறுமைய போன்ற இனவாதக்கட்சிகள் புலிகள் மீதான தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் என்பவற்றுக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வருவதையே அவதானிக்க முடிகின்றது. இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றன. ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளதுடன் அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தாவிய ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரர் அனுராபண்டாரநாயக்காவும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளார்.

இவர் இலங்கையிலுள்ள எதிர்ப்பாளர்களிலிருந் து ஒரு படி முன்னேறிச் சென்று இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் எதிராகப் பிரசாரம் செய்யப்போவதாகக் கூறி வருகின்றார்.

அனுரா பண்டாரநாயக்காவின் இப்புதிய நடவடிக்கை பற்றி விமர்சித்த அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகையில் 'இலங்கையில் தாம் ஒரு 'பத்தாம் பசலி' அரசியல்வாதி என்பதை நிரூபித்துள்ள அனுரா பண்டாரநாயக்கா தற்போது வெளிநாடுகளிலும் தமது அறிவிலித் தனத்தை வெளிக்காட்ட முற்படுகின்றார்

தாயகக் கோட்பாட்டின் தார்மீக வலுவான தமிழீழத் தீர்மானம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தால் உலகுக்கு அறிவிக்கிறது" என்று தெளிவான செய்திகளை வெளிப்படுத்திய மேற்படித் தீர்மானம்.

"..... இத்தீவிலுள்ள தமிழீழ நாட்டினத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு நாட்டினத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற, சோஷலிசத் தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றும் விபரித்தவாறு தமிழர் தாயகக்கோட்பாட்டின் இதயத்தின் உயிர்நாடியாய் வெளியிடப்பட்டது.

மேற்படித் தமிழ்ஈழத் தீர்மானத்தை முன்வைத்து மக்கள் ஆணை கோரிய த.ஐ.வி.கூ. க்கு 1977 ஜூலை பொதுத்தேர்தலில் அமோக வாக்குகள் கிடைத்து 18 ஆசனங்களும் ஸ்ரீலங்கா அரச அவையில் எதிர்கட்சியாக இடம் பிடித்ததுடன் தடம் மாறியமை ஒரு துன்பியல் நிகழ்வாகி விட்டது. இது இளையவர்களிடையே கடும் கவலையை ஏற் படுத்தியது.

1976 ஆம் ஆண்டு குடியரசத் தினத்தில் மேற்படித் தமிழ் ஈழத் தீர்மானத்தைப் பிரகர வடிவில் விநியோகித்தமைக்காக திருவாளர்கள் அ.அமிர்தலிங்கம், கா.பொ.இரத்தினம், வ.த.நவரத்தினம், க.துரைரெத்தினம் ஆகியோர் ஸ்ரீலங்கா அரசால் கைது செய்யப்பட்டு தேசத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் ஜூரிமார் அற்ற "ட்ரயல் அற்பார்" வழக்குத் தொடரப்பட்ட போது தமிழ்த் தலைவர்கள் சார்புல் தந்தை செல்வா, மு.திருச்செல்வம் உள்ளிட்ட 65 தமிழ் வழக்கறிஞர்கள் வாதிட்டு இவர்களை விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ஈழக் குடிமகனின் இறைமை மீளப்பட்டுள்ளது. இந்த இறைமையைப் பயன்படுத்தித் தமிழரின் உயர்ந்த அரசியல் நோக்கங்களை நிறைவு செய்து தமிழீழத் தமிழர்கட்கும் உலகின் ஏனைய தமிழர்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் ஆட்சி அமைக்கக்கூடிய ஆட்சியுரிமையைப் பெறுவது ஈழத்தில் உள்ள தமிழர் ஒவ்வொருவரின் புனித கடமையாகும் என்று வழக்குரைஞர் முருகேசன் திருச்செல்வம் அவர்களின் கருத்துச் செறிவான வாதத்தை தமிழில் மறவன்புலவு சச்சிதானந்தன் "ஈழத்தமிழர் இறைமை" எனும் பெயரில் நூலாக வெளியிட்டார். (இற்றைக்கும் என்றைக்கும் ஒவ்வொரு ஈழத்தமிழரும் கற்றுத் தெளிய வேண்டிய நூல் அது)

மேற்போந்த தமிழீழத் தீர்மானத்தைப் பேச்சளவில் மட்டும் கொண்டிராது, செயல்வடிவம் கொடுத்துப் போராடும் ஈழத் தமிழரின் தேசிய சக்தியான தமிழீழ விடுதலைப்புலிகளது தமிழீழ விடுதலைப் போராட்டம் தார்மீக ரீதியானது. தர்மத்தின் பாற்பட்டது என்பதை அனைத்துலகும் எடுத்துரைக்க தமிழீழத் தீர்மானத்தையும் "ஈழத் தமிழரின் இறைமை"யையும் சரிவரப் பயன்படுத்தி நீதியான நிறைவான அமைதி வாழ்வை எமதுடையதாக்க தேசப் பணியாற்றுதல் அவசியமாகின்றது.

- து.உமாபதி

ஈழநாடு
தொடர்புகளுக்கு
(416) 266 -9919
(905) 653 - 3000

தாயகக் கோட்பாட்டின் தார்மீக வலுவான தமிழீழத் தீர்மானம்

ஈழத்தமிழரது தேசிய விடுதலைப் போராட்டமானது "போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலக்குகள் மாறாது" என்ற உயரிய சிந்தனை வழிப்படி இன்று ஜனநாயக விரிவு பெற்றிருப்பது புதிய செய்திகளை பகர்ந்திருக்கிறது.

உலகை அதிசயிக்கச் செய்த போரியற் சாதனைகள் ஊடாக மிக வலுவான படைக் கட்டமைப்பையும் தேசியக் கட்டமைப்பையும் கொண்ட நிலையிலேயே இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடலுடனான இதர அரசியற் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை வலுக் குன்றச் செய்யவென அவ்வப்போது தமிழ்தேசிய விரோத சக்திகளால் நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட பரப்புரைப் போர் முன்னெடுக்கப்பட்டது நாமறிந்ததே.

தற்போதைய "அமைதி பேணலை" தமக்குச் சாதகமான சூழ்நிலையாகக் கொண்டு மீளவும் அடிப்படைக் கோட்பாடுகளையே தகர்க்க முயற்சிக்கும் வகையில் இவை பொய் பிரச்சாரங்களைப் பரவலாகக் கட்டவிழ்த்து வருவதைக் காண முடிகின்றது.

இதிலுள்ள துயரம் என்னவென்றால் இப் பரப்புரைப் போரை "ஜனரஞ்சக" ரீதியாக முன்னெடுப்போரில் "தேசியம்" பற்றி வாய் கிழியக் கத்துவோராக தம்மை அடையாளப் படுத்திக் கொள்ள முனையும் காக பண்ணும் எழுத்தை விற்றுப் பிழைக்கும் "தமிழ்" ஊடகங்கள் சிலவும் ஊடகவியலாளர்கள் சிலரும் முன்னணி வகிப்பது தான்.

இத்தகையோர் தத்தமது நேசசக்திகளை யெல்லாம் விஞ்சியவாறு வெளிப்படுத்தும் மிகமுக்கியமான பரப்புரையாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழத்தைக் கைவிட்டு (விட்டனர்) வருகின்றனர் என்ற தொனியிலானதை அவதானிக்க முடிகின்றது.

மேற்போந்த "குழப்பியடிக்கும்" செய்திகளை (?) எல்லாம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றினை ஆழ வேரோடிய ஆலமரமாய் மிளிரும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் ஏப்ரல் 10 இல் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பில் ஐயந்திரிபுற தெளிவு படுத்தி இருந்தார்.

பன்முக ஆற்றலுடன் செயலுக்கு முன்னுரிமை அளிக்கும் தலைவர் அவர்கள் 1977 பொதுத்தேர்தலில் தமிழீழத் தீர்மானத்திற்கு வழங்கிய மக்கள் ஆணையையே தாம் முன்னெடுத்துச் செல்வதாக வரலாற்றுப்பூர்வ மாக விடை பகர்ந்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினது தாயகக் கோட்பாட்டின் தார்மீக வலுவான தமிழீழத் தீர்மானம் வெளிப்படுத்தப்பட்டு (1976 மே 14) இருபத்தாறு ஆண்டுகள் ஆகும் நிலையில இதோடு தொடர்புடைய சில செய்திகளை சுருக்கமாகவேனும் நினைவுபடுத்திக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

தமிழீழத் தீர்மானத்தின் தோற்றுவாய்க் காரணிகள் மிகப் பல. மிக கொடிய காரணங்கள். அதற்கான உடனடிக் காரணமாக தமிழ்பேசும் மக்களுக்கிருந்த ஓரிரு உரிமைகளையும் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் அடாத்தான நிறைவேற்றம் என்றே ஆய்வாளர்கள் கூறுவர்.

1972 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் ஸ்ரீலங்காப் பாராளுமன்றத்துக்கு வெளிஆய நோயல் கல்லூரி நவரங்ஹால மண்டபத்தில் குடியரச அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்ட போது ஈழத்தமிழ் பேசும் சமூகத்தைப் பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழரசுக்கட்சி கலந்து கொண்டிருக்காமை இசைவும் ஒப்புதலும் வழங்கப்படாததால் "ஈழத்தமிழ் இறைமை" சிங்கள ஆட்சிக்கு வழங்கப்படவில்லை எண்பதையே செயல்வடிவில் வெளிப்படுத்தியது. எனவே ஈழத்தமிழர் இறைமை தொடர்பான எவ்வித தார்மீக மேலாண்மையும் ஸ்ரீலங்கா ஆட்சியதிகாரங்களுக்கு இல்லை என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

மேற்போந்த அரசியல்யாப்பு நடைமுறைக்கு வந்த சில நாட்களுக்குள் 1972 மே 25 இல் யாழ்நாவலர் மண்டபத்தில் தந்தை செல்வா தலைமையில் ஒன்றுகூடிய தமிழரகக்கட்சியினர் புதிய அரசியலமைப்பைத் தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை உலக்குக்கறிவிக்கும் வகையில் பெருமளவிலான மக்கள் முன்னிலையில் அரசியலமைப்பின் பிரதியைத் தீயிட்டுக் கொழுத்தினர்.

இத்தகைய பரந்தளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளையடுத்து 1972 அக்டோபர் 03ஆம் நாள் ஸ்ரீலங்கா தேசிய அரசப்பேரவை கூடிய போது பேரவை முதல்வரின் அனுமதியுடன் உரையாற்றிய தந்தை செல்வா அவர்கள்

"இந்நாட்டில் சென்ற இருபத்து நான்கு ஆண்டுகளாக நடந்தவற்றை மனதில் கொண்டு தமிழ்மக்கள் இந்நாட்டில் ஓர் அடிமை இனமாக அழிவதா? அல்லது சுதந்திர மக்களாக வாழ்வதா? என்று தமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதே எனது கொள்கையாக இருக்கும்.

விடுதலை பெற்ற மக்களாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களிக்குமாறு (தமிழ்) மக்களை நான் கேட்பேன்.

இந்தக் கொள்கையில் அரசாங்கம் என்னோடு போட்டியிடட்டும். நான் தோல்வி அடைந்தால் என் கொள்கையை நான் விட்டு விடுகிறேன். அரசாங்கம் தோல்வியடைந்தால் தமது கொள்கையையோ அரசியல் நிட்டத்தையோ தமிழ்மக்கள் ஆதரிப்பதாகக் கூறுவதை நிறுத்தி விட வேண்டும். இடைத் தேர்தலைப் பின்போட்டு இப்பிரச்சனைகளையொட்டி மக்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடுக்க வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று தனது உரையை முடித்து கூறியதைச் செம்பவராகத் தேசிய அரசப் பேரவையில் தனது உறுப்புரிமையைத் துறந்தார்.

ஸ்ரீமாவோ ஆட்சியினருக்கு தலையிடியை உண்டு பண்ணிய மேற்படிப் பதவி துறப்புக் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இடைத்தேர்தல் நடத்தாது தள்ளிப் போட்ட அரசாங்கம் 1972 பெப்ரவரி 6ம் நாள் காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்தியது.

கம்யூனிஸ்கட்சியைச் சேர்ந்த வி.பொன்னம்பலம் அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்டார். 25927 வாக்குகளைப் பெற்று தந்தை செல்வா இடைத்தேர்தலில் அமோக வெற்றி பெற திரு வி.பொன்னம்பலம் 9457 வாக்குகளையே பெற்றிருந்தார். (திரு வி.பொன்னம்பலம் அவர்களும் தந்தை செல்வாக்கே வாக்களித்ததாக அரசியற் கட்டுரையாளர் திரு த.சா. ஆனந்தராசா முன்னொரு தடவை கூறியிருந்தமை நினைவிற்கு வருகிறது)

தமிழ்மக்கள் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பை ஏற்கவில்லை. சுதந்திர இனத்தவராக வாழவே விரும்புகின்றனர் என்பதை அம்முடிவு வெளிப்படுத்தியது. இவ்வெற்றியையடுத்து தேசிய அரசப் பேரவைக்குச் சென்ற தந்தை செல்வா தலைமையிலான 12 உறுப்பினர்களுமாக வரலாற்று முன்னோடித் தீர்மானம் ஒன்றை முன் மொழிந்தார்கள். 1976 பெப்ரவரி 04ம் நாளுக்குரிய தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் இத்தீர்மானம் "விடுதலை பெற்ற இறைமையுடைய மதச் சார்பற்ற சமதர்ம நாடான தமிழ்ஈழம்" என்ற தலைப்பில் பின்வருமாறு இடம்பெற்றிருந்தது.

அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும் தமிழ்நாட்டினமும் இன்றுவரை பிணைக்கப்பட்டுள்ளமையால் சுதந்திர இலங்கையின் அரசுகள் அத்தும் சிங்கள நாட்டினத்தினை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்த்ததன் பயனாக இப்போதுள்ள அரசியலமைப்பு ஒரு தலைப்பட்சமாகத் திணிக்கப்பட்டு தமிழ் நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக்கப்பட்டுள்ளமையால்

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற இறைமையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றலுரிமையாக ஏற்றுக் கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கின்றது.

இதற்கடுத்ததாக ஈழத்தமிழினத்தை ஒரு குடையின் கீழ் அணி திரட்டும் வகையிலானதாக தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தோற்றத்துடனான முதலாவது மாநில மாநாடு வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியின் பண்ணாகத்தில் 1976 மே 14 ஆம் நாள் கூடியபோது ஈழத்தமிழர்களின் ஆட்சியுரிமை அடிப்படையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழீழத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஊடாக வளவை நதியிலிருந்து சிலாபம் வரைக்கும் தெற்கு மேற்குப் பகுதிகளிலும் நடுப்பகுதியிலும் சிங்கள மக்களும் வடக்கு கிழக்கு வடமேற்கு நிலப்பகுதிகளில் தமிழ்மக்களும் வாழ்ந்து இந்நாட்டின் ஆளுகையைச் சிங்கள நாட்டினமும் தமிழ்நாட்டினமும் தமக்குள் பகிர்ந்து வந்ததாலும்" என்று தொடங்குகின்ற இததீர்மானம் விரிவானதும் வரலாற்றுப்பூர்வமான நியாயபூர்வமான உண்மைகளை வெளிப்படுத்திற்று.

1875 பெப்ரவரி 6ஆம் நாள் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர் அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் சிங்கள அரசாங்கம் தமிழ்மக்கள் மீது திணித்த குடியரச அரசியல் அமைப்பை நிராகரித்தது மாத்திரமின்றி திரு செல்வநாயகம் அவர்களுக்கும் அவர் மூலம் தமிழர் கூட்டணிக்கும் சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற சோஷலிச தமிழ்ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்யக் கட்டளை யிட்டதாலும்

1976 ஆம் ஆண்டு மே 14ம்திகதி பண்ணாகத்தில் முதலாவது மாநில மாநாடு

தமது உன்னதமான தாய்மொழியாலும் தமது சிறப்புப் பெற்ற கலாச்சாரப் பாரம்பரியங்களாலும் ஐரோப்பிய படையெடுப்பாளரின் ஆயுதபலத்தினால் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு பிரத்தியேகமான பிரதேசத்தில் தனி நாட்டினமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உள்ள உறுதியாலும் இலங்கை வாழ் தமிழ்மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஒரு தனி நாட்டினம் என்

(10ம் பக்கம் பார்க்க)

கேலிக் கூத்தாகும் தேர்தல் ஜனநாயகம்

தமிழக தேர்தல் களம்

ஒரு நாட்டின் ஜனநாயக மாறுதல்களையும் அவற்றின் நிலைபேறாக்கத்தை உத்தர வாதப்படுத்தவும் ஆட்சியின் உறுதித் தன்மைக்கும் 'தேர்தல் அரசியல்' அடிப்படை பாதுகாப்பை வழங்கி வருகின்றது.

தேர்தல் ஜனநாயக நடைமுறைகளின் பரவலாக்கம், சமூக ஜனநாயகத்தின் உயிர்ப்பு மையமாகவும் மாறிவிடுகின்றது.

குறித்த காலத்தில் நடைபெறும் தேர்தல் வழிமுறைகள் ஜனநாயகப் பங்கேற்பின் அதிகாரப்பரவலாக்கத்தின் விரிவாக்கத்தை

செங்கை சிவம்

உறுதிப்படுத்தி வளர்த்து வருகின்றன. ஜனநாயகப் பண்பாடு, கட்சி அரசியல், மக்கள் திரள் இவற்றை ஊடுறுத்து உரிமை கள், கடமைகள் என்பவற்றை வழங்கி வருகின்றன.

தேர்தல் நடைபெறுவதற்கான காலம் குறித்துவிட்டால் அக்கணம் முதல் தேர்தல் நடைமுறைகளுக்கு எந்தவித பாதிப்பும் வராமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகவே இருக்கும். ஜனநாயக வழிமுறைகளின் கண்காணிப்பாளராக தேர்தல் ஆணையம் செயற்படும்.

ஆனால் சமீப கால வரலாறு தேர்தல் நடை முறைகளை கேலிக்கூத்தாக்கி வருகின்றது. தேர்தல் விதிமுறைகளின் தாற்பரியத்தை அரசியல்வாதிகள் குழிதோண்டிப் புதைக் கின்றனர். தேர்தல் விதிமுறைகள் சட்டங்கள் இவற்றின் தன்மைகள் மீதான விழிப்புணர்வு மக்களிடையே பரவலாக்கப்படவேண்டியு ள்ளது. ஏனெனில் தேர்தல் விதிமுறைகளுக்கு அரசியல்வாதிகள் தவறான விளக்கத்தை கொடுத்து வருகின்றனர். தமது கட்சி அரசியல் நலன்களுக்கு உட்பட்டதாக தேர்தல் விதிமுறைகளை சட்டங்களை குறுக்கி வருகின்றனர். இந்தப் போக்கு ஆபத்தானது.

தமிழகத்தில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் 3 தொகுதிகளில் திமுக வேட்பாளர் செங்கை சிவம் வேட்புமனுத் தாக்கல் செய்ததன் மூலம் தேர்தல் சட்டத்தை அரசியல்வாதிகள் கேலிக்கூத்தாக்கும் நடை முறை உருவாகிவிட்டது என்பதை வெளிப் படுத்துகின்றது.

தேர்தலில் 2 தொகுதிகளுக்கு மேல் போட்டி யிடக்கூடாது என்பது தேர்தல் விதிமுறை. நீதிமன்றத்தில் 2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடமுடியாது என்பதும் தேர்தல் விதிமுறை.

இந்த நிலையில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா 4 தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்.

விதிமுறைகளின்படி மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஆனாலும் முன்னாள் முதல்வர் கருணாநிதி தான் சதி செய்து வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்யச் சொன்னதாக ஜெயலலிதா கூறினார்.

நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தண்டனை காரணமாக ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடமுடியுமா என்பதைச் சொல்லத் தேர்தல் ஆணையத்தின் உயரதிகாரிகள் கூடத் தயாராக இல்லை.

தேர்தல் ஆணையம் தலையீடு செய்து பதில விளக்கம் கூறவேண்டிய இடத்தில் மௌனம் காக்கின்றது. இதனால் அரசியல்வாதிகளின் அவரவர் சார்ந்த விளக்கமே தேர்தல் விதிமுறைகளுக்கு விளக்கமாகின்றது.

தற்போது ஜெயலலிதாவின் பாணியில் இடைத்தேர்தல் நடைபெறும் 3 தொகுதி களிலும் திமுக வைச் சேர்ந்த செங்கை சிவம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். செங்கை சிவம் விஷயத்தில் திமுக எதிர்பார்த்தது ஒன்று நடந்தது ஒன்று.

2 தொகுதிகளுக்கு மேல் ஒருவர் வேட்பு மனுத் தாக்கல் செய்தால் அனைத்து வேட்புமனுக்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற விதி இருந்தாலும் இரு தொகுதியில் அவரது வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

செங்கை சிவத்தின் 3 மனுக்களும் தள்ளுபடியானால் கடந்த தேர்தலில் திமுக அரசின் தூண்டுதலினால் தான் ஜெயல லிதாவின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என அதிமுக செய்த பிரசாரம் பொய் என்று தாங்கள் பிரச்சாரம் செய்யலாம் என திமுக வினர் நம்பியிருந்தனர்.

அதற்கு மாறாக இரு இடங்களில் மனுக்கள் ஏற்கப்பட்டதால் தங்கள் நோக்கம் நிறை வேறாமல் திமுக வினர் ஏமாற்றம் அடைந்து ள்ளனர். இரு மனுக்களையும் செங்கை சிவம் வாபஸ் பெற்றுள்ளார்.

ஆக தேர்தல் பிரச்சார உத்திகளுள் ஒன்றாக தேர்தல் விதிமுறைகள் பயன்படுத்தப்படுவது தேர்தல் சட்டத்தை கேலிக்கூத்தாக்கும் நடை முறையாகும். திமுக அதிமுக இதில் போட்டி யிட்டு செயற்படுவதை அனுமதிக்கமுடியாது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையம் தேர்தல் சட்டங்களை மேலும் கடுமையாக்கும் வகையில் சில சட்டத்திருத்தங்களை வருங்காலங்களில் மேற்கொள்ள வேண்டும். யாராக இருந்தாலும் ஒரு தொகுதியில் மட்டுமே போட்டியிடவேண்டும். வெற்றி பெற்றவுடன் ஒருவர் பதவி விலகினால் மறுதேர்தலுக்கு ஆகும் செலவை அவர் ஏற்றுக்கொள்வதோடு குறிப்பிட்ட காலத்துக்கு அல்லது ஆயுள் முழுவதும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடத் தடை விதிக்கவேண்டும்.

இதே போல் ஒருவர் வெற்றி பெற்ற பின் சட்டப்பேரவைக்குச் செல்லாமல் இருந்தால் அவருக்கு ஊதியம் வழங்கக்கூடாது. மேலும் அடுத்த 2 தேர்தல்களில் போட்டியிடுவதை தடைசெய்யவேண்டும்.

ஆக தற்போதுள்ள சட்டங்களை கடுமை யாக்காவிட்டால் தேர்தல் விதிமுறைகள் என்பது ஜனநாயகத்தில் மோசமாக விமர்சிக்கப்படும் கேலிக்கூத்தாகப்படும் அவலங்களாகவே தொடரும் வாய்ப்புக்கள் உள்ளது. இப்போக்கு ஜனநாயக நடை முறைகளுக்கு எதிரானது. அபாயம் விளைவிக்கக்கூடியது.

மீண்டும் போர்

ஜம்முவில் கலுச்சக் என்ற இடத்தில் பஸ் பயணிகள் இராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் 34 பேரை ஆயுதம் தாங்கிய குழுவினர் சுட்டுக்கொன்ற கொடூர சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

மீண்டும் இந்தியா - பாகிஸ்தான் உறவில் முறுகல் நிலை உருவெடுத்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ள தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற மனநிலையை பிரதமர் உள்ளிட்டவர்களும் இந்திய இராணுவ தரப்பின் மூத்த உயர் அதிகாரிகளும் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் நிலவரம் பற்றியும் தீவிரவாதிகளுக்கு எந்த மாதிரியான பதிலடி கொடுக்கலாம் என்பது பற்றியும் உயர்மட்டத்தில் கருத்துப்பரிமாற்றம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடன் போருக்கு நேரம் வந்து விட்டது போன்ற மனநிலைக்கு இந்தியா வந்துள்ளது.

எதிர்க்கட்சிகளும் இந்தக் கொலைத் தாண்டவத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். காங்கிரஸ் மத்திய அரசுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. மேலும் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுக்கும் தீர்மானம் நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது. இதில் விவாதம் நடத்தி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படும்.

அதன்பிறகு அரசின் முடிவு அறிவிக்கப் படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜம்மு தாக்குதல் சம்பவத்தில் பாகிஸ்தான் தொடர்பு இருப்பதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளதை பாகிஸ்தான் மறுத்துள்ளது. கண்டனத்தை தெரிவித்துள்ளன. அதேநேரம் இரு நாடுகளுக்கிடையிலும் பதற்றம் நிலவுகின்றது.

ஜம்மு காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அமைதிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய விவகாரமாகவே உள்ளதென்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை.

பாகிஸ்தான் சார்புள்ள குழுக்கள் இந்தியா வுக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையில் ஜம்மு - காஷ்மீரில் கொலைத் தாண்டவத்தை வளர்த்து வருகின்றன.

பாகிஸ்தான் தனது நடவடிக்கைகளில் இதை ஒன்றாகக் கொண்டுள்ளது. இதுவரையான வரலாறும் இதை நிரூபிக்கின்றது.

ஆக இந்தியா பாகிஸ்தான் இடையே போர் உருவாகுவது ஒன்றும் புதிதல்ல. ஜம்மு - காஷ்மீர் மக்களின் துயரங்களுக்கு நிரந்தர தீர்வு இன்றி அமைதியற்ற அசமான வாழ்வு நிரந்தரமாக்கப்படுவது வேதனைக் குரியது.

குடும்பங்கள் வெளியேற்றம்

ஜம்மு எல்லையில் நடந்து வரும் மோதல்களைத் தொடர்ந்து சம்பா பகுதியில் உள்ள 850 குடும்பத்தினர் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர். எல்லைப்பகுதியில் உள்ள பென், கிளார், பக்கிராசாக், சூசசட் கார், சிங்கி சாப்ரி, கோரோதனா, கரானா ஆகிய பிரதேசங்களிலிருந்தும் மக்கள் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர்.

கண்மூடித்தனமாக கட்டவிழ்த்துவிடப்படும் பயங்கரவாதத்திற்கு முடிவு கட்ட ஒன்றுபட்டு உறுதியாகப் போரிடுவது என நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் வெள்ளி யன்று ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

''மானுடத்திற்கு எதிராக கண்மூடித்தனமாக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பயங்கர வாதத்திற்கு இறுதி முடிவுகட்ட ஒருங்கி ணைந்து உறுதியுடன் போராடுவது என்றும் ஒருமனதுடன் அதனை ஒழிப்பது என்றும் இந்த அவை தீர்மானிக்கின்றது'

இத்தீர்மானத்தை சபாநாயகர் மனோகர் ஜோஷி மக்களவையிலும் துணைத்தலைவர் கரேஷ் பச்செளரி மாநிலங்களவையிலும் முன் மொழிந்தனர்.

இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் கட்ட விழ்த்துவிட்டு வரும் இப்படிப்பட்ட பயங்கர வாத நடவடிக்கைகளை உலக நாடுகள் கவனத்தில் கொண்டு ஒருங்கிணைந்த தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த தீர்மானம் கோரியுள்ளது.

சமாதானத்திற்கு எதிரான சக்திகள் இணைகின்றன!

யாழ்ப்பாணத்தில் வைத்துக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும் என தற்போதைய அரசாங்கம் முன்னர் வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனால் தற்போதும் வழக்கு விசாரணைகள் எனோ தானோ என்ற ரீதியில் தான் நடத்தப்பட்டு வருகின்றது. அதேவேளை இந்த வழக்கின் முக்கிய சூத்திரதாரிகளைதப்ப வைக்கும் நடவடிக்கைகளும் வெற்றி கண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நிமலராஜன் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரின் மீது யாழ்ப்பாண நீதிமன்றம் ஏற்கனவே பிடியாணை பிறப்பித்திருந்தது.

நெப்போலியன் என்று அழைக்கப்பட்ட ஈபிடிபி யின் இராணுவப் பொறுப்பாளர் மற்றும் முரளி ஆகியோரே நாரந்தனைப் படுகொலைக்கு காரணமானவர்கள் என்று சந்தேகத்தின் அடிப்படையில் பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு கொலைச் சம்பவங்களினதும் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் நெப்போலியனோ அல்லது நிமலராஜன் கொலைவழக்கில் சம்பந்தப்பட்டவராகக் கருதப்படும் முரளியோ இதுவரை நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை.

இவர்கள் பொலிசார் மற்றும் படையினருக்கு தெரியாமல் குடாநாட்டை விட்டு வெளியேற முடியாத கட்டத்தில் கூட பொலிசாரால் கைது செய்யப்படவில்லை.

நிமலராஜன் கொலைச் சம்பவமானது தனியே நெப்போலியன் முரளி ஆகியோர் மட்டும் சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை.

இதற்கு அரச தரப்பு ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. நிமலராஜன் கொலையுடன் சம்பந்தப்பட்டவராகக் கருதப்படும் முரளிக்கு படையினரே அடைக்கலம் கொடுத்து காப்பாற்றி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அதேவேளை நெப்போலியன் நாரந்தனைப் படுகொலை களிலும் சம்பந்தப்பட்டவராக கருதப்படும் நிலையில் அரச சார்பில் அடைக்கலம் கொடுக்கக்கூடிய நிலை இருக்க வில்லை.

நெப்போலியன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால் நாரந்தனைப் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் பற்றிய விபரங்கள் மட்டுமல்ல அவற்றைத் திட்டமிட்ட தமிழ்க்குழுவின் தலைவர் தொடர்பான விபரங்களும் நிமலராஜன் கொலைக்கு காரணமான வர்கள், கொலையைச் செய்வித்தவர்களின் விபரங்களும் வெளியாகிவிடும்.

இதனைத் தவிர்க்கவே நெப்போலியனைத் தீவகத்தில் மறைத்து வைத்து ஈபிடிபி இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. இந்தியாவிற்குச் சென்ற நெப்போலியன் லண்டனுக்கு சென்று விட்டதாக நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் இவர் லண்டனுக்கு வந்து சேர்ந்ததாகவும் இதையடுத்து தீவகத்தில் இருந்து ஈபிடிபி யினரால் அழைத்துச் செல்லப்பட்ட நெப்போலியனின் மனைவி மற்றும் பிள்ளைகளையும் இந்தியா மூலம் டக்ளஸ் தேவானந்தா லண்டனுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

நிமலராஜன் கொலை வழக்கின் சூத்திரதாரியான நெப்போலியன் லண்டனுக்குத் தப்பிச் சென்றுவிட்ட நிலையில் யாழ்.நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் ஈபிடிபி யைச் சேர்ந்த ஜெகன் என்பவர் பொலிஸ் புலனாய்வுப்

> டக்ளசும் வரதரும் இப்போது கூட்டுச் சேர்ந்திருக்கின்றார்கள். முன்னர் இருவரும் இரு வேறு துருவங்களாகவே இருந்தனர். ஆரம்பத்தில் ஈபிஆர்எல்எவ் இன் இரண்டாவது மாவட்டத் தலைவராக இருந்த டக்ளசை வரதர் தான் சதி செய்து பிளவினை உண்டாக்கி அந்தத் தலைமையைத் தன் வசப்படுத்திக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

டக்ளசும் வரதரும் இப்போது கூட்டுச் சேர்ந்திருக்கின்றார்கள். முன்னர் இருவரும் இரு வேறு துருவங்களாகவே இருந்தனர். ஆரம்பத்தில் ஈபிஆர்எல்எவ் இன் இரண்டாவது மாவட்டத் தலைவராக இருந்த டக்ளசை வரதர் தான் சதி செய்து பிளவினை உண்டாக்கி அந்தத் தலைமையைத் தன் வசப்படுத்திக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போது சந்தர்ப்பவாத அரசியல் நடத்தி தமிழ் மக்களின் உரிமைகளைப் பேரினவாதத்திடம் அடகு வைத்தவர்கள் தற்போதைய சமாதான சூழ்நிலையைக் குழப்புவதற்காக கூட்டணி சேர்ந்திருக்கின்றார்கள்.

வரதருடன் கூட்டுச்சேர்ந்த பின்னர் அவரது ஏற்பாட்டில்தான் டக்ளஸ் இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றார். இருவரும் இணைந்து சென்றால் வெளியில் விஷயம் கசிந்துவிடும் என்பதால் முதலில் வரதர் பயணமான பின்னர் டக்ளஸ் நெப்போலியனின் குடும்பத்தையும் கூட்டிக்கொண்டு போயிருக்கின்றார்.

மருத்துவ பரிசோதனைக்காக சென்னைக்கு வந்ததாக இவர் கூறிக்கொண்டாலும் இவரது பயணத்தின் நோக்கம் இந்தியப் புலனாய்வுத்துறையினருடன் கலந்து பேசுவதும் இந்திய மண்ணில் மீண்டும் பாதுகாப்பான இடம் ஒன்றைத் தேடிக்கொள்வதுமாக இருந்துள்ளது.

சென்னையில் இவரை இந்திய அரச அதிகாரிகள் சிலரும் றோ உட்பட இந்தியப் புலனாய்வு அமைப்புக்களின் அதிகாரிகள் பலரும் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

இந்தப்பேச்சுவார்த்தைகளை வரதரே ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். பேச்சுக்களின்போது இந்தியாவில் பாதுகாப்பான தங்குமிடம் ஒன்றை டக்ளஸ் கோரியதாகவும் தெரிய வருகின்றது.

முன்னர் இவரது குழுவினர் தமிழகத்தில் தங்கியிருந்தபோது

டக்ளஸ் இந்தியா சென்று வந்ததேன்?

விசாரணையின்போது குறிப்பிட்ட சைக்கிளில் தமது கணவர் அடிக்கடி வீட்டுக்கு வந்து செல்வார் என வாக்குமூலம் அளித்துள்ளார். இதிலிருந்து நிமலராஜன் கொலை வழக்கில் சாட்சியங்களையும் சாட்சிகள், தடயங்களையும் மட்டுமன்றி சூத்திரதாரிகளையும் மறைத்துவிடும் செயற்பாடுகளிலும் ஈபிடிபி இறங்கியிருப்பது நிரூபணமாகின்றது.

இப்படுகொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவது போல இருந்தாலும் ஆமை வேகத்திலதான் நடந்து கொண்டிருக்கின்றது.

குற்றவாளிகள் உயர் மட்ட ஆதரவுடன் இருக்கும் நிலையில் அரச தரப்பும் அதிகமான அக்கறை காட்டினால் தான் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கமுடியும். இதேவேளை அண்மையில் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் இரகசியமும் அம்பலமாகி யிருக்கின்றது.

யாழ்ப்பாண மக்களால் தூக்கியெறியப்பட்டு விட்ட நிலையில் டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் தான் காலத்தைக் கடத்தி வந்தார்.

யாழ். நகரிலிருந்து கண்ணன்

முன்னர் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை யாழ்ப்பாணத்திற்கு திருவிழா கடைபரப்ப வருகிறவர்கள் என்றும் இவர்கள் வாக்குகளை வாங்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்றும் தாமே மக்களுடன் இருந்து சேவையாற்றுவதாகவும் கூறி வந்தார்.

கொள்ளை, ஆட்கடத்தல் சம்பவங்களில் தொடர்பு பட்டிருந்ததும் இப்படியானதொரு சம்பவத்துக்காக டக்ளஸ் தேவானந்தா கூட கைதாகி சிறை வைக்கப்பட்டிருந்ததாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டக்ளஸ், வரதர் என புலிகளுக்கு எதிரான சக்திகள் கூட்டுச் சேர்ந்திருப்பதும் இருவரும் இந்தியப் புலனாய்வு அமைப்புக்களை நாடி தமக்குப் புகலிடம் கோரியிருப்பதும் சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற பாரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதையே புலப்படுத்துகின்றது.

அத்துடன் சென்னையில் தங்கியிருக்கும்போது டக்ளஸ் தேவானந்தா செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்கவேண்டிய தேவையோ அல்லது இப்போது இடைக்கால நிர்வாகம் அமைக்கவேண்டிய தேவையோ இல்லை என்றும் பேட்டியளித்துள்ளார்.

முன்னர் இவரே இடைக்கால நிர்வாகத்தை அமைத்துத் தம்மிடம் தரும்படி ஆட்சியில் இருந்த அரசாங்கங்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது இவரே இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கும் அதனைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கும் கடும் எதிர்ப்பு அதுவும் தமிழகமண்ணில்இருந்து தெரிவித்திருப்பது நிச்சயமாக சமாதான முயற்சிகளை குழப்புகின்ற நடவடிக்கையாகவே நோக்கப்படுகின்றது.

ஈபிடிபி யினால் வெளியிடப்படுகின்ற தினமுரசு வார இதழில் கூட டக்ளஸ் மருத்துவ காரணங்களுக்காக இந்தியா சென்றார் எனக் கூறப்படுவதை நக்கலடித்திருப்பதுடன் மாற்றுத்திட்டம் ஒன்றை இந்திய மண்ணில் உருவாக்க இவர் சென்றிருக் கலாமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக வேறு செய்தி வெளியிட்டுள்ளது.

எப்படியாயினும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் இருப்பவர்களும் சரி பேச்சுக்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளும் சரி இந்த விடயத்தில் அதிக அக்கறையெடுத்து செயற்படவேண்டும். இல்லையேல் சமாதானத்தை குழப்புகின்ற சக்திகளின் சதிமுயற்சிகள் வெற்றி கண்டுவிடும்.

நெப்போலியன் லண்டனில்...?

பணியகத்தால் நாலாம் மாடியில் வைத்து விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்.

கொலை செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் இருந்து மீட்கப்பட்ட சைக்கிள் தொடர்பாகவே இவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. முன்னர் ஈபிடிபியினர் இந்தச் சைக்கிள் தம்முடையதல்ல என்று தெரிவித்தனர்.

நாலாம் மாடியில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதும் ஜெகன் என்ற ஈபிடிபி உறுப்பினர் இந்தச் சைக்கிள் தன்னுடையதல்ல என்று மறுத்துள்ளார். ஆனால் முன்னதாக இவரது மனைவியிடம் பொலிசார் இரகசியமாக மேற்கொண்ட

ஆனால் இதேடக்ளஸ் கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி தேர்தலில் தமது கட்சி தோற்றவுடன் சில தினங்களில் கொழும்புக்கு போனவர் தான் திரும்பி யாழ்ப்பாணப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை.

இப்படிப்பட்ட டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இந்தியாவுக்கு சென்றதற்கு முன்னாள் வட கிழக்கு முதல்வர் வரதராஜப் பெருமாளுடன் காணப்பட்ட இணக்கப்பாடே வழி வகுத்திருந்தது.

தமிழ் மக்களால் தூக்கியெறியப்பட்டவர்களான சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் எடுபிடிகளாக மாறியுள்ள

ஐரோப்பிய நாடுகள் திருப்பி அனுப்பும் அகதிகளின் பீதியைப் போக்கும் UNHCR ஐரோப்பிய ஒன்றியம் சடுதியாக தலையிட முடியாதெனவும் கருத்து

மேற்குலகில் அகதிகளாய் புகலிடம் கோருவோர் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அறிவித்திருக்கும் நிலையில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கனடாவிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கும் பெரும் எண்ணிக்கையானோர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பீதியை அகற்றி ஆறுதல் படுத்தும் விதத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அகதிகளாகப் புகலிடம் கோரியோர் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தால் சடுதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தை மேற்கோள் காட்டி கடந்த வெள்ளிக் கிழமை 31ம் திகதி இரவு ராய்ட்டர் செய்தி நிறுவனம் செய்தியொன்றை வெளியிட்டிருக்கிறது.

பத்து வருடங்களுக்கு முன்னர் புகலிடம் கோரியோரின் எண்ணிக்கையிலும் பார்க்க தற்போது தஞ்சம் கோருவோரின் தொகை சரிபாதியாகக் குறைந்திருப்பதாகவும் அவர்களின் பிரச்சனையைச் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் பிரச்சனையுடன் ஒன்று சேர்ந்து குழப்பக்கூடாதென்றும் யூ.என்.எச்.சி.ஆர். குறிப்பிட்டுள்ளது. பிரிட்டன், டென்மார்க் உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகள் பல சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகக் கோரிக்கைகளை விடுத்து வருவதுடன் சட்டவிரோதப் பிரச்சனைகளுடன் ஒன்றாகச் சம்பந்தப்படுத்திக் காட்டுவது அநீதியானது என்று யூ.என்.எச்.சி.ஆர் சாடியுள்ளது.

ஐரோப்பாவில் குடிவரவுப் பிரச்சனையைக் கையாள்வது தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும் என்று யூ.என்.எச்.சி.ஆர் தெரிவித்துள்ளது. உதாரணமாக பாகிஸ்தானும் ஈரானும் 40 இலட்சம் ஆப்கானியர்களை அகதிகளாக

"அகதிகள் விவகாரம் தொடர்பாக ஐரோப்பாவில் தற்போது இடம்பெற்று வரும் சர்ச்சையானது ஆத்திரமான தொனியில் உக்கிரமடைந்து வருவது குறித்து யூ.என்.எச்.சி.ஆர். கவலையடைந்துள்ளது"

குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகளையும் முடுக்கி விட்டுள்ளன. குடியேற்றவாசிகள் விவகாரம் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் அண்மைய தேர்தல்களில் முக்கிய விடயமாகக் காணப்பட்டதுடன் கடும்போக்கு வலது சாரிக் கட்சிகளும் இந்த விவகாரத்தைத் தேர்தல் தொனிப் பொருளாகக் கொண்ட பிரச்சாரம் செய்த கணிசமான அளவு ஆதரவையும் பெற்றுள்ளன.

அடக்குமுறை ஆட்சிகளுக்கு அஞ்சியே புகலிடம் தேடுவோர் பலர் தமது சொந்த நாடுகளை விட்டு வெளியேறிப் புகலிடம் தேடுகின்றனர். அவர்களை சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் தொடர்பாக பல பிரச்சனைகள் எதிர் நோக்கப்படுகின்றன. இதில்ஞ புகலிடம் தேடுவோர் விவகாரம் மிகச் சிறிய தொன் றே என்று யூ.என்.எச்.சி.ஆர் பேச்சாளர் ரூபேர்ட் கொல்வில் ராய்ட்டருக்குத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 15 நாடுகளில் 1992 இல் 675460 பேர்கள் அரசியல் புகலிடம் கோரினார்கள். ஆனால் 2001 இல் புகலிடம் கோரியோரின் தொகை 384530 ஆகும்.

இதேவேளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் புகலிடம் கோருவோரை உள்ளீர்க்கும் தொகையுடன் ஒப்பிட்டால் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளீர்த்துக் கொண்டதைக் குறிப்பிடமுடியும்.

இதேவேளை அகதிகள் விவகாரம் தொடர்பாக ஐரோப்பாவில் தற்போது இடம்பெற்று வரும் சர்ச்சையானது ஆத்திரமான தொனியில் உக்கிரமடைந்து வருவது குறித்து யூ.என்.எச்.சி.ஆர். கவலையடைந்துள்ளது. இதன் விளைவே அந்நாடுகள் சட்ட விதிகளை அமுல்படுத்துவதில் துரிதமாகச் செயற்படுகின்றன. இதனால் அகதிகள் தொடர்பாக எதிர்காலத்தில் பாரிய ஆபத்து ஏற்படும். ஐரோப்பாவில் நீதியும் பாரபட்சமுமின்றி நடத்தப்படும் நிலைமையும் அகதிகளுக்குக் கிடைக்காது போகலாமென கொல்வில் தெரிவிக்கின்றார். டென்மார்க் அரசாங்கம் குடியேற்றவாசிகளின் நலன்புலி உதவிகளைக் குறைப்பதற்கான சட்டத்திருத்தத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை சமர்ப்பித்துள்ளது.

பிரிட்டனும் புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்களைத் துரிதமாகப் பரிசீலித்து நிராகரிக்கும் சட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

பிரிட்டனும் பிரான்கம் சர்ச்சையில் ஈடுபடும் இது இவ்வாறிருக்க பிரிட்டன் எடுத்திருக்கும் சர்சசைக் குரிய நடவடிக்கை தொடர்பாக அதன் அண்டை நாடான பிரான்ஸ் எதிர்ப்புத் தெரிவிக்குமெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பிரிட்டன் தனது புதிய திட்டத்தின்படி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட சட்டவிரோதப் குடியேற்ற வாசிகளை அவர்களது சொந்த நாடுகளுக்கோ அல்லது மூன்றாவது நாடொன்றிற்கோ நாடு நடத்தவுள்ளது.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான பிரிட்டனில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தாங்கள் நாடு கடத்தப்பட்ட நாட்டிலிருந்து மேன்முறையீடு செய்யலாம் எனப் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

எனினும் பிரான்ஸ் இதனைக் கடுமையாக எதிர்த்துள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இதனை எதிர்க்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அகதிகளுக்கான மனித உரிமை அமைப்புக்கள் பிரிட்டனின் இந்த நடவடிக்கை சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு எதிரானது எனச் சுட்டிக் காட்டியுள்ளன. இத மிகவும் ஆபத்தான நடைமுறைச் சாத்தியமற்ற விடயம் என அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட எவரும் மேன்முறையீடு செய்வதற்காக பிரிட்டனில் தங்கியிருக்கலாம் என அவை தெரிவித்துள்ளன. அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் அமைப்பு பிரிட்டனின் இந்தத் திட்டத்தைக் கண்டித்துள்ளது. ஆனால் பிரிட்டனின் உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெட் பிரிட்டனின் அரசியல் புகலிடம் அளிக்கும் திட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதை அனுமதிக்க முடியாது என்றார்.

வாழைச்சேனை பிரதேசத்தில் ஆலயங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவில்லை

மட்டக்களப்புக்கு வடக்கே உள்ள வாழைச்சேனை பிரதேசத்தில் பல வணக்கத்தலங்கள் ஸ்ரீலங்கா படை முகாமுக்குள்ளும் முகாமை அண்டிய பகுதிகளிலும் உள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த ஆலயங்களில் இருந்து படையினர் இதவரை வெளியேறவில்லை என மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மும்புறுமூலை முனியாண்டி ஆலயம், கிண்ணையடி சித்தி விநாயகர் ஆலயம், மீராவோடை பத்திரகாளி அம்பாள் ஆலயம், வாழைச்சேனை பெற்றோல் நிலையச் சந்தி விநாயகர் ஆலயம்,கல்குடா கண்ணகியம்மன் ஆலயம், கல்குடா சந்தி விநாயகர் ஆலயம், கல்குடா கத்தோலிக்க தேவாலயம் ஆகிய ஆலயங்கள் இராணுவ முகாம் கற்றாடலிலும் முகாமை அண்டிய பகுதிகளிலும் உள்ளன.

இந்த ஆலயங்களில் கல்குடா கண்ணகியம்மன் ஆலயம், கல்குடா சந்தி விநாயகர் ஆலயம், கல்குடா கத்தோலிக்க தேவாலயம் என்பன கல்குடா இராணுவ முகாம் பகுதிக்குள் அமைந்துள்ளன. வாழைச்சேனை பெற்றோல் நிலையச் சந்தி விநாயகர் ஆலயம் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள எல்லைக்குள் அமைந்துள்ளது. ஏனைய ஆலயங்கள் முகாம் அமைந்துள்ள பகுதிகளில் அமைந்துள்ளது. மீராவோடை தமிழ் கிராமத்தில் அமைந்துள்ள ஆலயங்கள் இரண்டும் இராணுவ முகாம் எல்லையில் அமைந்துள்ள போதிலும் வன்செயல் காரணமாக உடைக்கப்பட்ட நிலையில் உள்ளன. இந்த ஆலயங்களில் இருந்து படையினர் வெளியேறியதுடன் சேதமாக்கப்பட்ட ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பகுதி மக்கள் கட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் மட்டு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் படை முகாம் பகுதிக்குள்ளும் முகாமை அண்டிய கற்றாடலிலும் அமைந்துள்ள வணக்கத் தலங்களின் விபரங்களை அண்மையில் சேகரித்த போதிலும் அது வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள இந்த ஆலயங்களைக் கவனத்தில் எடுக்கவில்லை எனவும் இப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஈழநாட்டில் பிரகரமாகும் அனைத்து அறிவித் தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். *(905) 653 - 3000 (416) 266 - 9919*

BUYING - SELLING

- வீடுகள் வாங்க அல்லது விற்க,
- அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட,
- குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட

NADA G. NADARAJAH B.V.Se
Sales Representative
Gold Award Winner 2000

Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

இன்றே அழையுங்கள்
நடா. ஜி. நடராசா

HOMELIFE
HomeLife Metro Realty Inc.
Real Estate Broker
5200 Finch Ave. East, Suite 206, Scarborough, ON M1S 4Z4

ஜனாதிபதியின் விசேட அதிகாரங்கள் பிரதமர் எதிர்கொள்ளும் நெருக்கடி

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் பாராளுமன்றத்துக்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியலமைப்புக்கான 18 வது திருத்தச்சட்டமூலம் தொடர்பான

குத்தூசியின்
கொழும்புக் கோலங்கள்

வாதப்பிரதிவாதங்கள் கொழும்பு அரசியலில் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன முன்னணி இதிலுள்ள சில ஏற்பாடுகளுக்கு ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கக்கூடிய வகையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரம் நீக்கப்படுவதை பொ.ஐ.மு. வால் கொள்கை ரீதியாக எதிர்க்கமுடியாது என்பது உண்மை தான். ஆனால் இச்சட்டமூலத்திலுள்ள வேறு சில அம்சங்களின் அடிப்படையில் பொ.ஐ.மு. இதனை எதிர்க்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இச்சட்டமூலத்தை கொண்டு வருவதில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை என்னவென்றால் இதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதற்கு அவசியம் என்பது தான். அதாவது பொ.ஐ.மு.வின் ஆதரவு இல்லாமல் இச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அரசாங்கத்தால் நிறைவேற்றிக்கொள்ள முடியாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது ஒரு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. டிசம்பர் 5 ஆம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருப்பது தலைக்கு மேல் கத்தி தொங்கிக் கொண்டிருப்பது போன்ற ஒரு நிலைமையை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்கு முன்னதாக ஜனாதிபதியின் இந்த அதிகாரத்தை பிடுங்கிக்கொண்டு விடவில்லை என்றால் ஜனாதிபதியின் உத்தரவுகளுக்கு இணங்கச் செயற்படவேண்டிய நிலைமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படலாம்.

ஜனாதிபதிக்கும் ஐதேமு அரசாங்கத்துக்கும் இடையேயான முரண்பாடுகள் வளர்ந்து வரும் நிலையில் நாட்டை விடுதலைப் புலிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்றுவிட்டார் என்ற பிரச்சாரத்தை பொ.ஐ.மு. உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் தமக்குள்ள அதிகாரங்களை ஜனாதிபதி பயன்படுத்தத் தயங்கமாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவில்வைத்து இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னிச்சையாக எதனையும் செய்துவிடமுடியாது எனவும் எந்த ஒரு தீர்வு பதிலிருந்து ஜனாதிபதியைத் தடுத்து வைத்திருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான பிரேரணையை பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதிக்க வேண்டும் என்றில்லை. இதனைச் சமர்ப்பித்தாலேயே அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையில் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கும். இவ்வாறான ஒரு பிரேரணையைச் சமர்ப்பிப்பது தொடர்பாகவே இப்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

'இம்பீச்மெண்ட்' தொடர்பாக அரசாங்க வட்டாரங்கள் தீவிரமாகச் சிந்திப்பதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. உத்தேச 18 வது திருத்தத்திலேயே கட்சி மாறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதனை பொ.ஐ.மு. எதிர்க்கவில்லை. இதனைத் தமக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று தான் அவர்கள் கணக்குப் போடுகின்றார்கள். இருந்தபோதிலும் சிறிய கட்சிகள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இந்த யோசனை தொடர்பாக அச்சமடைந்திருக்கின்றன. தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்படுபவர்களை அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ விலை கொடுத்து வாங்குவதற்கு இச் சட்டமூலம் வழிவகுப்பதாக அமைந்துவிடும் என இவ்விரு அமைப்புக்களும் கருதுவதுடன் அதற்கு எதிரான தமது நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கும் தெரிவித்திருக்கின்றன. இவற்றின் ஆதரவும் இல்லாத நிலையில் இம்பீச்மெண்ட் பிரேரணையைச் சமர்ப்பிப்பதை விட அரசாங்கத்துக்கு வேறு மாற்றுவழிகள் எதுவும் இருக்கப் போவதில்லை.

ஹக்கீமுடன் ரணில் விரிவாகப் பேச்சு

கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்விவகாரம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை சுமுகமான முறையில் கொண்டு செல்வதற்கும் அதற்கு பொஜமு

பிரதமருடனான சந்திப்பின்போதே இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது. பொ.ஐ.மு. தலைவர்களுடன் பேசி 18 வது திருத்தத்தை அவர்களது ஆதரவுடன் கொண்டு வர முயல்வது. அது சாத்தியமில்லை எனில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதுபோல ஜனாதிபதிக்கு எதிரான 'இம்பீச்மெண்ட்' பிரேரணையைக் கொண்டு வருவது என்பது தான் அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு எனத் தெரிகின்றது. இதற்கான சமரச முயற்சிகளை ஹக்கீம் முன்னெடுப்பார் எனவும் தெரிகின்றது. தற்போது அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இந்த முயற்சிகளை ஹக்கீம் ஆரம்பிப்பார்.

எம்.பி.க்களின் ஆதரவை பெறுவதற்கும் முயற்சி!

உண்மையில் இந்த விவகாரத்தைப் பாராளுமன்றத்தவரையில் கூட இரட்டை நிலைப்பாடு ஒன்றையே ஐ.தே.மு. அரசாங்கம் கடைப்பிடிக்க முயல்வது தெரிகின்றது. பொ.ஐ.மு. தலைமையுடன் சமரசத் துக்குச் செல்லத் தேவையில்லை. இதிலிருந்து தேவையான எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்று இரண்டில் மூன்று பெரும்பான்மையுடன் அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் அடித்துக் கூறுகின்றார்கள். இதனை இவர்கள் சொல்வதுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்கான முயற்சிகளையும் தீவிரமான முறையில் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளார்கள். அந்தப் பக்கத்தில் நடைபெறும் இந்த முயற்சியையும் தட்டிக்கொடுக்கும் பிரதமர் ரணில் மறுபக்கத்தில் சமாதான முறையிலான அணுகுமுறையையும் கடைப்பிடிக்க முற்படுகின்றார். இரு அணுகுமுறைகளில் ஏதாவது ஒன்று பலனைத் தரும் என அவர் எதிர்பார்த்திருக்கின்றார்.

பொ.ஐ.மு.வின் முக்கிய பிரமுகர்களில் முன்னாள் அமைச்சர்களான பௌஸி, றொனி டி மெல் உட்பட பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இவர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றபோதிலும் நேரம் வரும் வரை பொறுத்திருக்கும் நிலைப்பாட்டில் ரணில் இருப்பதாகத் தெரிகின்றது.

இதனை விட பொ.ஐ.மு.விலிருந்து கொண்டே அரசுக்கு மாறக்கூடியவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆக ஜனாதிபதிக்கு எதிராக பல்வேறு மட்டங்களில் அரசாங்கம் வலைவிரித்திருக்கின்றது. இதில் எந்த வலையில் அவர் அகப்பட்டுக் கொள்வார்? அல்லது இந்த வலைகளை எவ்வாறு அறுத்துக் கொண்டு தனது அதிகாரங்களை அவர் பாதுகாத்துக் கொள்வார்? இவை தான் இப்போதுள்ள கேள்விகள்.

பொ.ஐ.மு.வின் ஆதரவும் திருத்தத்துக்கு அவசியம்

தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கும் அதேவேளையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது போல அடுத்த மாத முற்பகுதியில் இச்சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படுமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கின்றது. தமக்கு ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் மேலும் சில மாதங்கள் காத்திருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

18 வது திருத்தச்சட்டமூலம் வேறு பல ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்ற போதிலும் பாராளுமன்றம் கூட்டப்பட்டு ஒரு வருட காலத்தின் பின்னர் தன்னிச்சையாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பது தான் இதன் பிரதான நோக்கமாக உள்ளது. குறிப்பிட்ட இந்தத் திருத்தச் சட்டமூலத்தின்படி பாராளுமன்றத்தைக் கலைப்பதாயின் பிரதமரதும் சபாநாயகரினதும் ஆலோசனையை ஜனாதிபதி பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். தொடர்பாகவும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் தன்னிடமே உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். தன்னிடமுள்ள அதிகாரங்களை பேரம் பேசி விட்டுக் கொடுப்பதற்கு அவர் தயாராகவில்லை என்பதம் தெரிகின்றது. ''அரசுக்கு எதிராக நூறு எதிர்ப்புக்கூட்டங்கள் நடத்தப்படும். அதன் முடிவில் அரசாங்கம் கைமாறும்' என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

மாற்று ஏற்பாடு 'இம்பீச்மெண்ட்'?

இந்தப் பின்னணியில் ஐதேமு வுக்கு ஒரேயொரு மாற்று ஏற்பாடு ஜனாதிபதிக்கு எதிரான இம்பீச்மெண்ட் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பது தான் என அரசியலமைப்பு வல்லுநர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் 50 வீதமானவர்களின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையைச் சமர்ப்பிக்கமுடியும். இவ்வாறான ஒரு பிரேரணை பாராளுமன்றத்தைக் கலைப்பதில் இருந்து ஜனாதிபதியைத் தடுத்து வைத்திருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான பிரேரணையை பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதிக்க வேண்டும் என்றில்லை. இதனைச் சமர்ப்பித்தாலேயே அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் வரையில் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கும். இவ்வாறான ஒரு பிரேரணையைச் சமர்ப்பிப்பது தொடர்பாகவே இப்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது.

'இம்பீச்மெண்ட்' தொடர்பாக அரசாங்க வட்டாரங்கள் தீவிரமாகச் சிந்திப்பதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. உத்தேச 18 வது திருத்தத்திலேயே கட்சி மாறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதனை பொ.ஐ.மு. எதிர்க்கவில்லை. இதனைத் தமக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று தான் அவர்கள் கணக்குப் போடுகின்றார்கள். இருந்தபோதிலும் சிறிய கட்சிகள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன இந்த யோசனை தொடர்பாக அச்சமடைந்திருக்கின்றன. தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்படுபவர்களை அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ விலை கொடுத்து வாங்குவதற்கு இச் சட்டமூலம் வழிவகுப்பதாக அமைந்துவிடும் என இவ்விரு அமைப்புக்களும் கருதுவதுடன் அதற்கு எதிரான தமது நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கும் தெரிவித்திருக்கின்றன. இவற்றின் ஆதரவும் இல்லாத நிலையில் இம்பீச்மெண்ட் பிரேரணையைச் சமர்ப்பிப்பதை விட அரசாங்கத்துக்கு வேறு மாற்றுவழிகள் எதுவும் இருக்கப் போவதில்லை.

ஹக்கீமுடன் ரணில் விரிவாகப் பேச்சு

கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்விவகாரம் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை சுமுகமான முறையில் கொண்டு செல்வதற்கும் அதற்கு பொஜமுவின் ஆதரவைப் பெறுவது அவசியமானது என இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டிய ஹக்கீம், இவ்வாறான சூழ்நிலையில் பொஜமுவை ஆத்திரமூட்டும் வகையிலான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கு வசதியாகச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும்அவர் தெரிவித்திருக்கின்றார். குறிப்பிட்ட அரசியலமைப்பு திருத்த யோசனையை உடனடியாக கொண்டு வருவதில்லை என அரசாங்கம் தீர்மானித்தமைக்கு ஹக்கீம் தெரிவித்த ஆட்சேபனைகளும் காரணமாக உள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் அரசாங்கத்தினதும் கருத்துக்களை அறிந்து கொள்ளும் முகமாக ஹக்கீம் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்துவதற்கும் திட்டமிட்டிருக்கின்றார்.

சந்தனத் தீவில் விடுதலைத் திருவிழா

திமுக்குத் தைமூர் இன்று (20-5-2002) விடுதலை பெறுகிறது. 490 ஆண்டுகால விடுதலைப் போர் இன்றுடன் முடிவ டைகிறது. 17 தலைமுறைகளின் இடையீடற்ற தொடர்ச்சியான விடுதலைக் குரலுக்கு இன்று வெற்றி நாள்.

இருபத்தோராம் நூற்றாண்டின் தலைச்சான் பிள்ளை இன்று (20-5-2002) பிறக்கிறது. கிழக்குத் தைமூர் இன்று விடுதலை பெறுகிறது. 490 ஆண்டுகால விடுதலைப் போர் இன்றுடன் முடிவ டைகிறது. 17 தலைமுறைகளின் இடையீடற்ற தொடர்ச்சியான விடுதலைக் குரலுக்கு இன்று வெற்றி நாள்.

இந்துப் பெருங்கடலின் தென் கிழக்கு மூலையில், ஆஸ்திரேலியாவுக்கு வடமேற்காக, 600 கி.மீ. தொலைவில் வாழும் 8 இலட்சம் கிழக்குத் தைமூரியர் விடுதலைக் காற்றை இன்று முதல் சுவாசிப்பார்கள். அங்கு 30க்கும் அதிக எண்ணிக்கையில் மொழிகள். அவற்றுள் தெத்துன் மொழி பரவலாகப் பழக்கத்தில் உளது. மலாய், போர்த்துக்கேயம், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் அங்கு வழங்குகின்றன.

சந்தன மரக் காடுகளும் நறுமணச் செடிகளும் மூலிகைகளும் நிறைந்த தைமூரின் பெரும்பகுதி குறிஞ்சி நிலமே. நறுமணச் செடிகளையும் சந்தன மரங்களையும் நாடிப் பாண்டியர்களும் சோழர்களும் அங்கு சென்றனர். தமிழர் வாழ்ந்த தடயங்கள் அங்கு உண்டு. தமிழர்களோடு அராபியர்களும் சென்றனர். சீனர்களும் வந்துபோயினர்.

இந்தியாவை நோக்கி கி.பி.1496இல் வஸ்கொடகாமாவின் பயணத்துடன் தொடங்கிய ஐரோப்பிய மேலாதிக்க முயற்சியின் நீட்டமாக, கி.பி. 1512இல் போர்த்துக்கேயர் தைமூரில் கால்வைத்தனர்.

தைமூர்வாசிகளின் கடுமையான எதிர்ப்புகளை மீறிக் குடியேறினர். அங்கிருந்த அரசுகளைப் போரில் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினர். சந்தனக் காடுகளை அழித்தனர். கி.பி. 1800 அளவில் தைமூரின் மேற்குப்பகுதியை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.

தைமூர்வாசிகள் விடுதலாக்காகத் தொடர்ந்து போரிட்டனர். போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் விரட்ட முயன்றனர், முடியவில்லை.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (கி.பி.1941-1944) ஜப்பானிய மேலாட்சியில் கடும் சித்திரவதைகளைத் தைமூர்வாசிகள் அநுபவித்தனர்.

ஏறத்தாழ 35,000 சதுரகி.மீ. கொண்ட அத்தீவில் 18,900 சதுரகிமீ. கொண்ட கிழக்குப் பகுதி போர்த்துக்கேயரிடம் 1975ஆம் ஆண்டு வரை இருந்தது.

1960இலேயே கிழக்குத் தைமூர் விவகாரங்களில் ஐநா சபை தலையிடத் தொடங்கியது. தன்னாதிக்கமில்லா ஆள்புலமாகக் கிழக்குத் தைமூரை அறிவித்தது.

1975இல் ஒருதலைப் பட்சமாகக் கிழக்குத் தைமூரைவிட்டுப் போர்த்துக்கல் வெளியேறியதும் இந்தோனீசியப் படைகள் உள்ளே புகுந்தன. தனது 27ஆவது மாகாணமாகக் கிழக்குத் தைமூர் அமையும் என இந்தோனீசியா அறிவித்தது. இந்த இந்தோனீசிய நிலைப்பாட்டைக் கண்டித்தன.

கிழக்குத் தைமூர் மக்களின் விடுதலைத் தாகம் ஓயவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், யப்பானியர், இந்தோனீசியர் என ஒருவர் பின் ஒருவராகத் தம்மை அடிமைகொள்ள முயன்றோரை விரட்ட இரத்தம் சிந்தினர், சிறைகளை நிரப்பினர், உடல்வதைகளைத் தாங்கினர், இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர், அகதிகளாயினர்.

இவர்களின் விடாமுயற்சியின் பெறுபேறாக 1982 தொடக்கம் ஐநா தலைமையில் இந்தோனீசியாவும் போர்த்துக் கல்லும் கூடிப் பேசி வந்தன. இந்தோனீசிய இறைமைக்குள் அடங்கிய தன்னாட்சிக்கு 1998இல் இந்தோனீசிய அதிபர் ஹபீபி உடன்பட்டார். கிழக்குத் தைமூர்வாசிகள் முழுமையான விடுதலையைத் தவிர வேறு எதையும் ஏற்க மறுத்தனர்.

கிழக்குத் தைமூரின் எதிர் காலத்தைத் தீர்மானிக்க அம்மக்களிடமே ஐநா தலைமையில் கருத்துக் கணிப்பு நடத்துவதென 1999 மே 5ஆம் நாள் இந்தோனீசியாவும் போர்த்துக்கல்லும் ஒப்பின. இதுவே விடுதலையின் முதற் படி.

அறிவிப்பையோ இந்தோனீசிய ஆக்கிரமிப்பையோ ஐநா ஏற்கவில்லை. சர்ச்சைக்குரிய ஆள்புலமாகவே ஐநா கருதியது. ஐநா பாதுகாப்பு அவைத் தீர்மானங்கள்

1999 ஆகஸ்ட் 30இல் நடந்த கருத்துக் கணிப்பில் 451,792 வாக்காளர்களில் 344,580 (78.5%) பேர் விடுதலைக்கு வாக்களித்தனர். கருத்துக்கணிப்பைக் குழப்ப இந்தோனீசியா

மறவன்புலவு க.சச்சிதானந்தன்
(ஐநாவின் முன்னாள் ஆலோசகர்)

இந்தோனீசிய நிலைப்பாட்டைக்கண்டித்தன.

கிழக்குத் தைமூர் மக்களின் விடுதலைத் தாகம் ஓயவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், யப்பானியர், இந்தோனீசியர் என ஒருவர் பின் ஒருவராகத் தம்மை அடிமைகொள்ள முயன்றோரை விரட்ட இரத்தம் சிந்தினர், சிறைகளை நிரப்பினர், உடல்வதைகளைத் தாங்கினர், இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர், அகதிகளாயினர்.

இவர்களின் விடாமுயற்சியின் பெறுபேறாக 1982 தொடக்கம் ஐநா தலைமையில் இந்தோனீசியாவும் போர்த்துக் கல்லும் கூடிப் பேசி வந்தன. இந்தோனீசிய இறைமைக்குள் அடங்கிய தன்னாட்சிக்கு 1998இல் இந்தோனீசிய அதிபர் ஹபீபி உடன்பட்டார். கிழக்குத் தைமூர்வாசிகள் முழுமையான விடுதலையைத் தவிர வேறு எதையும் ஏற்க மறுத்தனர்.

கிழக்குத் தைமூரின் எதிர் காலத்தைத் தீர்மானிக்க அம்மக்களிடமே ஐநா தலைமையில் கருத்துக் கணிப்பு நடத்துவதென 1999 மே 5ஆம் நாள் இந்தோனீசியாவும் போர்த்துக்கல்லும் ஒப்பின. இதுவே விடுதலையின் முதற் படி.

எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

8950 வீரர் கொண்ட ஐநா அமைதிப் படை அங்கு சென்றது. ஐநா தலைமையில் இடைக்கால ஆட்சி மலர்ந்தது. 2,500 கோடி ரூபாய்க்கான உதவித் திட்டத்தை ஐநா தலைமைச் செயலாளர் கோபி அனான் அறிவித்தார். இடைக்காலத் தேசிய அவை அமைந்தது.

அகதிகள் திரும்பத் தொடங்கினர். படிப்படியாக இந்தோனீசியப் படை வெளியேறியது. கூலிப்படைகளின் கொட்ட மடக்க இந்தியா உள்ளிட்டநாடுகள் உதவின.

இந்தியரான லக்கான் லால் மெஹொத்திரா அங்கு இணைப்புப் பொறுப்புகளை ஏற்றார். இலங்கை, சிங்கப்பூர், போன்றசிறிய நாடுகள் கூட அங்கு காவலர்களை அனுப்பி ஐநா முயற்சிக்கு ஆதரவளித்தன.

அரசியலமைப்பு யாக்க அவைக்கான தேர்தல்களும் குடியரசுத் தலைவருக்கான தேர்தல்களும் 2001 ஆகஸ்ட 30இல் நடந்தேறின.

விடுதலைக்கு உதவியதால் அமைதி திரும்ப உழைத்த கார்லோஸ் பிலிப் சிமானெஸ், ஜோஸ் ராமோஸ் ஹொர்த்தா ஆகிய இருவம் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றனர்.

1945 அக்டோபர் 24இல் தொடங்கிய ஐநா நிறுவனம் இருபதாம் நூற்றாண்டைக் கடந்து இருபத்தொராம் நூற்றாண்டுக்குள் நுழையும் பொழுது 189 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 2002இல் கிழக்குத் தைமூர் ஐநாவின் 190ஆவது உறுப்புரிமை நாடாகிறது.

உலகில் 233 ஆள்புலங்களுள் தன்னாதிக்கமும் இறைமையும் கொண்டவை 193 நாடுகளே. எஞ்சிய தன்னாதிக்கமற்ற 40 ஆள்புலங்களில் (அமெரிக்காவிடம் 5, இஸ்ரேலிடம் 1, டென்மார்க்கிடம் 2, நியூசீலாந்திடம் 3, நெதர்லாந்திடம் 2, பிரான்சிடம் 9, பிரிட்டனிடம் 12, போர்த்துக்கல்லிடம் 2, மொறொக்கோவிடம் 1, ஸ்பெயினிடம் 3) வாழும் ஒரு கோடி மக்களும் கிழக்குத் தைமூர் வாசிகளைப் போலவே விடுதலைக்காகப் போராடி வருகின்றனர். நான்கு இலட்சம் தமிழர் பெரும்பான்மை எண்ணிக்கையில் வாழும் இந்துப் பெருங்கடல் தீவான நியூனியன் பிரான்சின் மேலாட்சியில் இன்றும் உள்ளது. விரைவில் இஸ்ரேலிடமிருந்து விடுதலை பெறப்போகும் நாடு பாலஸ்தீனம்.

பாலஸ்தீன விடுதலைக்கும் ஐநா உதவி வருகிறது. பாலஸ்தீனத்துக்கு அரபு நாடுகளின் ஆதரவே உண்டு. கிழக்குத் தைமூரின் விடுதலைக்கு மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளையான ஆஸ்திரேலியா ஆதரவளித்ததால், மேற்கு நாடுகள் கிழக்குத் தைமூரின் விடுதலைக்கு ஐநா மூலம் வழி வகுத்தன.

இந்தோனீசியா முஸ்லிம் பெரும் பான்மை நாடு. பாலித்தீவில் இந்துக்களும், கிழக்குத் தைமூரில் கிறிஸ்தவர்களும் வலிமை பெற்றவர்கள். போர்த்துக்கேயர் விட்டுச்சென்ற 1975இல் கிழக்குத்தைமூரில் கத்தோலிக்கர் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். இந்தோனீசிய முஸ்லிம்களின் மேலாட்சியை விட ஆஸ்திரேலியாவின் ஆதரவுடனான விடுதலையே மேலானது எனக் கிழக்குத் தைமூர்வாசிகள் விரும்பியது வியப்பல்ல.

தைமூர், நியுகினியா ஆகிய இரு தீவுகளும் ஆஸ்திரேலியாவின் வடஎல்லையில் உள. இவ்விரு தீவுகளின் கிழக்குப் பகுதிகள் தனித் தனி நாடுகளாக உள. பாப்புவா நியுகினியா ஒன்று. கிழக்குத் தைமூர் மற்றது. இவை இரண்டும் ஆஸ்திரேலியா சார்ந்த அரசுகள். இவ்விரு தீவுகளின் மேற்குப்பகுதிகள் இந்தோனீசியாவின் மாகாணங்கள்.

இந்தோனீசிய அதிபர் மாயாவதி சுகர்ணோ இன்றைய விடுதலைத் திருவிழாவில் நிலியில் பங்கேற்கிறார். முன்னதாக அங்கு விடுதலைப் போரை அடக்க முயன்று உயிர் நீத்த இந்தோனீசியப் படையினருக்கு அஞ்சலி செலுத்துகிறார். புதிய நூற்றாண்டின் புதிய நாடு கிழக்குத் தைமூர்.



THE CRISPY MOISTURIZED CHICKEN BY

CHESTER FRIED

AVAILABLE AT
PHALAPPASS
TAKE-OUT & CATERING
416-614-9669

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

CHICKEN TO GO
416 248-5999

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**
ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**
உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

பாலப்பாஸ்

வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு (5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்) FRIDAY SPECIAL $ 4.99

பிரைட் பிஷ் - Fried Fish .....$ 1.99

மாதாந்தச் சாப்பாடு SPECIAL - $ 299

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில் நாவுக்கு ருசியூட்டும் கடலுணவுக்கூழ்

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ் பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு $ 5.99

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

பாலப்பாஸ்
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

PHALAPPASS
1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO
(416) 614-9669
(416) 248-5999

MILLENNIUM LEISURE TRAVELS INC.

ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக் குறைந்த விலையில் சிறந்த சேவையுடன் உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு முதல் EuroRail Pass, Rental Car வரையில் சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல, வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்

Florida, Cuba, Carribean நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா?
நியாயமான விலையில் Package வசதிகள், Car Rentals, Cruise வசதிகளும்
அத்துடன் Disney World Tickets
அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன் டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப் பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை தொடர்புகொண்டு உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும் நீங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை உடனே தொடர்பு கொள்ளுங்கள்

108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9
TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722

மரண அறிவித்தல்



அமரர் உயர்திரு மயில்வாகனம் குலசிகாமணி

(இளைப்பாறிய வட கிழக்கு நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளரும் பொறியியலாளரும்)

மலர்வு 10.06.1946 **உதிர்வு** 01.06.2002

உடுப்பிட்டி கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வதிவிடமாகவும் தற்போது திருகோணமலையில் வசித்து வந்தவருமாகிய இளைப்பாறிய வடகிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரும் பொறியியலாளருமான திரு மயில்வாகனம் குலசிகாமணி அவர்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை கொழும்பில் இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் – அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும்

காலஞ்சென்ற ஐயாத்துரை (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) – பொன்னம்மா (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும்

சரோஜினிதேவி (ஆசிரியை – திருமலை புனித சேவியர் மகாவித்தியாலயம்) அவர் களின் அன்புக் கணவரும்

சுஜாதன் (கனடா) சுகுணன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) சுஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும்

இராமச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியர்) சபாரத்தினம் (இளைப்பாறிய பொறியிய லாளர்) இரத்தினசிகாமணி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்

காலஞ்சென்ற சிவகாமி மற்றும் தங்கமணி, சந்திரிகா (தமிழீழம்) சிவராஜகுமார், சாந்தினிதேவி (கனடா) வசந்தாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்

மகேந்திரராஜா (சுவிஸ்) சண்முகநாதன் (கனடா) இந்திரா (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் ஜூன் மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை திருகோண மலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: சிவா அல்லது சுஜாதன் (416) 266 – 7399 சாந்தி (514) 337 – 3112

மரண அறிவித்தல்

திருமதி நல்லம்மா தர்மலிங்கம்

(வீரபத்திரர் கோவிலடி – கல்வியங்காடு)

மலர்வு 26.10.1927 **உதிர்வு** 01.06.2002

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தர்மலிங்கம் அவர்கள் 01.06.2002 சனிக்கிழமை கல்வியங்காட்டில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி – தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் – செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும்

தில்லையம்பலம் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்

காலஞ்சென்ற துரைராஜாவின் அன்புச் சகோதரியும்

தங்கேஸ்வரி, புவனேஸ்வரி, கமலேஸ்வரி, தர்மகுலசிங்கம், ஜெயராணி, பாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும்

காலஞ்சென்ற மகேந்திரராஜா, காலஞ்சென்ற சிவப்பிரகாசம், செல்வராஜா, சந்திரலேகா, புலேந்திரன், செல்வரத்தினம் ஆகியோரின் அருமை மாமியாரும்

மோகன் – வேணி, மனோ – சயந்தி, லதா – நிரஞ்சன், பிரபா, கீதா – ஈசன், சுதா – சிறி, அப்பன் – நந்தா, அப்பு, பிறேமலதா – ராஜி, மதியன் – ஜெயா, லல்லி – ரவி, சோனா – குமார், வண்ணன், தனுசன், கௌதமன், ரஜிவா, மிலானி, சிந்து, கீர்த்தி, ஜெனார்த், சாமினி, சதுசன், யாழினி ஆகியோரின் அருமைப் பேத்தியாரும்

நரேஸ், டயாணி, சுசானா, சேரோமீனா, இசாகர், அபர்ணன், லவர்ணன், தூசான், சியான், டிலோசன், சர்விகா, தனுக்கா, தனுசன், தர்சிகன், டினுசா ஆகியோரின் அன்புப் பூட்டியும்ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் செம்மணி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: தங்கேஸ் (514) 735 – 0686 புவனேஸ் (416) 332 – 1263 கமலா (416) 412 – 0291 ராணி (416) 287 – 3398 பாமா (ஜேர்மனி) 49 2381 – 442571

இலட்சக்கணக்கான தமிழர்கள் நாடு கடத்தப்படுவார்கள்
ஐரோப்பிய ஒன்றியம் – ஸ்ரீலங்கா அரசு திடீர் ஒப்பந்தம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே தான் மேற்படி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படப் போவது முன்கூட்டியே தெரிந்தால் அதனை எதிர்த்து ஈழத்தமிழர்கள் மற்றும் மனிதநேயவாதிகளைக் கொண்ட அமைப்புக்கள் பலத்த ஆர்ப் பாட்டங்களை மேற்கொள்வார்கள் என்று அனுமானித்து இது தொடர்பான விடயங் கள் "காரியம்" கைக்கூடும் வரை மூடு மந்திரமாக வைக்கப்பட்டிருந்தது என்று அறியப்படுகின்றது.

ஐரோப்பிய நாட்டுக் கூட்டமைப்பின் வெளி விவகார அமைச்சர் அலன் பேற்றன் என்ப வருக்கும் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமை ச்சர் டிரோன் பெர்னாண்டோவுக்கும் இடை யில் இந்த ஒப்பந்தம் மே 31ம் திகதி கைச் சாத்திடப்பட்டுள்ளது.

மின்னாமல் முழங்காமல் பெய்த மழை போல் திடீரென்று வந்த இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து சட்டபூர்வமான ஜனநாயக ரீதி யிலுமான வழிகளில் போராட்டம் நடத்தப் போவதாக ஐரோப்பிய தமிழ்அமைப்புக்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளன.

இது பற்றிய விபரங்கள் பின்வருமாறு

இலங்கைத்தீவில் இனப்பிரச்சனை கூர்மைய டையத் தொடங்கிய காலத்திலிருந்து ஏராளமான தமிழ்பொதுமக்கள் சிங்களக் கொடுங்கோலாச்சியில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள நாட்டை விட்டு வெளி யேறி உலகின் மூலைமுடுக்கெல்லாம் தஞ் சம் தேடிக் கொள்ள ஆரம்பித்தனர்.

1983 ஜூலைக்குப் பின்னர் இந்த நடை முறைப்போக்கு பரந்துபட்டு வியாபித்தது டன் மிகத் துரிதகதியிலும் நடைபெறத் தொடங்கியது. இவ்வாறு லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் ஐரோப்பாக்கண்டத்தின் பல் வேறு நாடுகளில் அரசியல் அடைகலம் கோரினர்.

அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, அவுஸ்தி ரேலியா போன்று குடிவரவாளர்களால் கட்டி யெழுப்பப்பட்ட ஒப்பீட்டளவில் குறுகிய கால வரலாறு கொண்ட நவீன நாடுகள் அல்ல ஐரோப்பிய நாடுகள்.

அவை ஆயிரத்தாண்டு தொன்மையும் தமக் கெனத் தனித்துவமான கலாசாரம், வரலாறு கொண்ட நாடுகளாகும். நாகரீக யுகம் கொண்ட ஆனால் ஆழமான இன உணர்வு கள் அந்நாட்டவர்க்கு.

குறிப்பாக தோல் நிறத்தாலும் மொழியாலும் மதத்தாலும் கலாச்சாரத்தாலும் வேறுபட்ட ஆசிய, ஆபிரிக்க நாட்டு அகதிகள் மீது இத்தகைய வேறுபாட்டு உணர்வுகள் மிக அதிக அளவிலேயே உண்டு.

களுக்கு அடிப்படை வசதிகளும் வரையறு க்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களும் வழங்கப ்பட்டாலும் பூரணமான குடியுரிமை வழங்கப் பட கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டன.

பெருமளவிலான அகதிகள் தொடர்ந்தும் சில சலுகைகளுடன் கூடிய அகதிகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். கணிசமானவர்களு க்கு சில கட்டுப்பாடுகளுடன் கூடிய வதிவிட

பிரதமரின் ஐரோப்பிய விஜயத்தின் போது பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயருடன்.....

உரிமைகள் கிடைத்திருக்கின்றன. ஒப்பீட ்டளவில் மிகச் சொற்பமான அளவினருக்கே நிரந்தரக் குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது.

நாட்டுக்குநாடு சில சட்டவிதி வேறுபாடுகள் இருந்தபோதுலும் ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை இந்த அடிப்படை களையே கடைப்பிடித்தன. ஆயினும் அந்தந்த நாடுகளில் பிறந்தவர்கள் அல்லது அந்த நாட்டுப் பிரஜைகளை மணம் புரிந்த வர்கள் குடியுரிமை பெற்றவர்களாக காலம் தள்ளி வருகின்றனர்.

அகதிகள் மீதும் புதிய குடிவரவாளர்கள் மீதும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் துவேஷ மனப்பான்மை வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக நகர்ப்புறங் களில் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இவ்வுணர்வுகள் பெருகி வளர்ந்து கொண் டிருக்கின்றன.

அண்மைக்காலங்களில் அனேகமான அனை த்து ஐரோப்பிய நாட்டு அரசியலிலும் இந்த உணர்வு அலை வீசிக் கொண்டு தான் இருக்கிறது. ஆஸ்திரியா, நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ், பிரிட்டன் போன்ற நாடுகளில் இந்த உணர் வுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இந்நிலையில் சென்றஆண்டு செப் 11ம்திகதி அமெரிக்காவில் நடைபெற்ற அனர்த்தங் களின் பின்னர் மேற்குலக நாடுகளில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் புதிய குடிவர வாளரான சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான உணர்வலைகளை விஸ்பரூபம் எடுக்கச் செய்துள்ளன.

கடந்த பல மாதங்களாக ஐரோப்பிய நாடுகள் பல தத்தமது நாடுகளிலுள்ள சட்டபூர்வமற்ற குடிவரவாளர்களையும் அகதிகளையும் படிப்படியாக வெளியேற்ற அல்லது அவரவர் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்க முயற்சிகள் மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

ஆனால் அகதிகளைப் பொறுத்தவரை சொந்தநாட்டில் பாதுகாப்பு இல்லையென்று கூறி அரசியல் அடைக்கலம் கோரிய ஒரு வரை அந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பு வது என்பது சர்வதேச சட்டமுறைமை களுக்கு முரணானது என்றபடியால் இதனை ஒட்டுமொத்தமாகச் செய்ய முடிய வில்லை.

ஆயினும் கூட ஜேர்மனி இத்தாலி போன்ற நாடுகள் குறிப்பிட்ட அளவு இலங்கைத் தமிழர் அகதி மனுக்களை நிராகரித்து இலங்கைக்கே திருப்பி அனுப்புகின்ற போக்கு நடைபெற்றுக் கொண்டே இருக்கி றது.

இதேவேளை ஐரோப்பியக் கூட்டமைப்பு என்ற வகையில் ஒன்றுபட்டுள்ள ஐரோப்பிய சமூகம் தமக்கென்று ஓர் ஐரோப்பிய பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் வைத்துள்ளன.

இவ்வாறு ஓரணியான ஐரோப்பிய நாடுகள் மேற்கொள்ளும் முடிவுகள் கூடுதல் வலிமை யும் தாக்கமும் கொண்டவை. எடுக்கப்படும் முடிவுகள் அனைத்து ஐரோப்பிய நாடு களாலும் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த அடிப்படையில் ஐரோப்பிய நாட்டுச் சமூகம் துருக்கி, அல்ஜீரியா, பிலிப்பைன்ஸ், ஈரான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பந்தங் களில் கைச்சாத்திட்டு அவரவர் நாடுகளில் இருந்து வந்து அகதி மனு நிராகரிக்கப் பட்டோரையும் அகதி அந்தஸ்து பெற்றவர் களையும் திருப்பித் தமது நாடுகளுக்கே வரவழைத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்திக் கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தன.

ஐரோப்பாவில் இருந்து திருப்பி அனுப்பப் படுபவர்களைத் துன்புறுத்துவதில்லை என்றும் அவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்குவதென்றும் உத்தரவாதம் செய்யும் ஒப்பந்தங்களில் இந்நாடுகள் கைச்சாத்திட வேண்டும் என்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் ஐக்கிய நாடுகள் அகதிகளு க்கான உயர் ஆணையர் அமைப்பின் அழுத் தங்களும் "புதிய" கமைகளை ஏற்றுக் கொள்ள விரும்பாத நாடுகளின் மனப்பான் மையும் இந்த முயற்சி வெற்றியளிப்பதற்கு ஏதுவாக இருக்கவில்லை.

அடிவருடித் தமிழ்அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை வெளிவிவகார அமைச்சராகக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா கூட ஐரோப்பிய சமூக நாடுகளின் முயற்சிக்கு துணை போக வில்லை.

ஆனால் சமாதானத்தீர்வு காண்பேன் என்று சொல்லிக் கொண்டு பிரதமராகப் பதவியேற்று சிங்களப் பகுதிகளின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஒரு சமாதானக் குழலை தென்இலங்கையில் ஏற்படுத்துவ தற்கு முயற்சிகள் எடுத்து வரும் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைக்க முன்வந்துள்ளார்.

தற்போது ஸ்ரீலங்கா அரசாங்கத்தூற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச் சாத்திடப்பட்டுள்ளது வெறுமனே ஒரு யுத்த நிறுத்தத்துக்கான ஒப்பந்தம் மாத்திரமே.

இதன் விதிகளைத் திட்டமிட்ட முறையில் அரசாங்கத்தரப்பு மீறினால் அல்லது விடுத லைப்புலிகள் மீதான தடையை நீக்கத் தயங் கினால் அல்லது வடகிழக்கு மாகாணங்களு க்கு விடுதலைப்புலிகள் தலைமையில் இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்தத் தவறினால் இந்த யுத்தநிறுத்தம் பயனற்ற ஒன்றாய்ப் போய்விடும்.

எனவே தற்காலிகமான சமாதானச் சூழல் ஒன்றை மாத்திரமே ஏற்படுத்தியுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம் நிரந்தரமான சமாதானத் தீர்வை உருவாக்கியுள்ளதாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

இவ்வாறு தற்காலிக சமாதானச் சூழலை நிரந்தரமான சமாதானத் தீர்வாகத் தவறான முறையில் சித்தரித்துக் காட்டுவதில் ஐரோப் பிய நாடுகளுக்கும் சரி ரணில் அரசாங்கத் திற்கும் சரி சில நன்மைகள் உண்டு.

ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை நிரந்தர சமாதானம் இலங்கைக்கு வந்து விட்டது என்ற பொய்த்தோற்றத்தை ஏறபடு த்துவதன் மூலம் அதைச் சாக்காக வைத்து லட்சக்கணக்கான இலங்கை அகதிகளைத் திருப்பி இலங்கைக்கு அனுப்பலாம்.

சிங்களப் பிரதமர் ரணிலைப் பொறுத்தவரை நிரந்தர சமாதானம் உள்ளது என்பது போன்ற தோற்றத்துக்கு உடன்படுவது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நிதி யுதவியை ஐரோப்பிய நாடுகளிடமிருந்து பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத் துகின்றது.

குறிப்பாக திருப்பி அனுப்பப்படும் அகதி களின் மீள் குடியேற்றத்தையும் புனர்வாழ்வு என்பவற்றையும் காரணம் காட்டி விசேட நிதி உதவி பெறமுடியும். அத்துடன் ஐரோப்பிய அகதிகள் ஒப்பீட்டளவில் கூடுதல் வாழ்க்கைத்தரம் கொண்டவர்களாக இருப்ப தால் அவர்கள் மறுவாழ்வுக்கு கூடிய பணம் பெறலாம்.

இந்த நோக்கத்துடன் தனது குறுகிய ஐரோப்பிய பயணத்தை பிரதமர் ரணில் மேற்கொண்டார். அவர் நிறைவேற்றிய நோக்கங்கள் மூன்று. முதலாவதாக பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயரைச் சந்தித்துப் பல விடயங்கள் குறித்துப் பேசியதுடன் விடுத லைப்புலிகள் மீதான தடையை மறுபரி சீலனை செய்ய வேண்டிய காலம் இன்னும் பிரித்தானிய நாட்டுக்கு வரவில்லை என்று கட்டிக்காட்டினார். (24ம் பக்கம் பார்க்க)

"அடிவருடித் தமிழ்அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை வெளிவிவகார அமைச்சராகக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா கூட ஐரோப்பிய சமூக நாடுகளின் முயற்சிக்கு துணை போக வில்லை"

மரண அறிவித்தல்

தோற்றம்	மறைவு
10 - 24 - 1955	29 - 05 - 2002

திரு. சுந்தரம் மீனாட்சிசுந்தரலிங்கம்

(புங்குடுதீவு 4ம் வட்டாரம், உடுவில் கிழக்கு, சுன்னாகம்)

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்டவரும், தற்போது ஸ்காபரோவில் வாழ்ந்து வந்தவருமான திரு. சுந்தரம் மீனாட்சிசுந்தரலிங்கம் 29-05-2002 புதன்கிழமையன்று ஸ்காபரோவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உடுவிலில் வசிக்கும் சுந்தரம், காலஞ்சென்ற பத்மாவதி தம்பதியினரின் அன்பு மகனும், கனடாவில் வசிக்கும் சத்தியசீலன், காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியினரின் அருமை மருமகனும், சத்தியவேணியின் (கௌசலை) அன்புக்கணவரும், சரண்யா, சுபிதன், சுகிர்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்.

காலம் சென்ற மகேஸ்வரியின் மருமகனுமாவார்.

காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சண்முகசுந்தரலிங்கம், பத்மசுந்தரி (லண்டன்), சிவகாமசுந்தரி (பிரான்ஸ்), கற்பகமதி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கனகசுந்தரலிங்கம் (2ம் லெப். வெள்ளை) ஆகியோரின் அருமைச்சகோதரரும்,

சீதாதேவி (கொழும்பு), அமுதா (யாழ்ப்பாணம்), கதிர்காமதாசன் (லண்டன்), குகதாசன் (பிரான்ஸ்), அம்பிகைபாகன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சத்தியமூர்த்தி(மூர்த்தி), கனடாவில் வசிப்பவர்களான பத்மலோசனி(பாப்பா), சத்தியலோசனி(யசோ), சத்தியகுமார்(குமார்), சத்தியாம்பிகை(பாமா), சத்தியபவான்(பவான், SV Production), சுதா, உதயகுமார்(உதயன்), சிவகுமார், ஈஸ்வரன், உருத்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

கனடாவில் வசிப்பவர்களான லோகேந்திரலிங்கம் (பிரதம ஆசிரியர், உதயன் பத்திரிகை), சுதந்திரகரன், சாந்தினி, கதிர்காமநாதன் (ஒன்ராரியோ நிதி அமைச்சு), சுகிர்தலாதேவி(றோயல் வங்கி) ஆகியோரின் சகலனும்,

லண்டனில் வசிப்பவர்களான திவாகரன், தினேஷ், தீபிகா, தீபிதன், பிரான்ஸில் வசிப்பவர்களான சேரன், சேந்தன், சாரங்கி, சாரா, கனடாவில் வசிப்பவர்களான லகிதரன், சங்கீர்த்தனா, அஜித்தன், யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களான கஜன், கோகுலன், விதுஷா, ருக்ஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், கனடாவில் வசிப்பவர்களான கோபி, யாழினி, ஜனனி, பாலசத்தியன், நிஷா, சுபன்யா, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களான சாருகேசி, வாகீஸன், திரிபுரன் ஆகியோரின் சித்தப்பாவும், கனடாவில் வசிப்பவர்களான பவித்திரன், வாசுகி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுட இன்று (3ம் திகதி) மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும், 4164 Sheppard Avenue East ஸ்காபுரோவில் அமைந்துள்ள Ogden Funeral Home ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை 4ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி வரை சமயக்கிரியைகள் நடைபெற்று பின்னர் அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டு (DonMills/Steels) சந்திப்பில் இலக்கம் 33 Memory Garden Lane இல் அமைந்துள்ள HighLand Memorial Garden மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: மனைவி: 416 335 5001 / 416 829 1180 / 416 884 0005/ 416 292 5042

29

இரத்தத்தின் ஈரம்

கண்டி மாவட்டத்தில் இருந்த அந்த வசதியான வீட்டில் ரோகண விஜேவீர தனது மனைவி இந்து பிள்ளைகளுடன் இருந்தார்.

கைது செய்யப்பட்ட ஜே.வி.பி. தலைவர் விஜேவீரவுக்குக் கொடுத்த நெருக்குதல்களினால் அவர் சகல உண்மைகளையும் கூறி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் தலைமையகம் உறுப்பினர்கள் மறைந்திருக்கும் இடங்கள் போன்ற சகல விபரங்களையும் அவர் கூறியதாகவும் அதனால் ஆத்திரமடைந்த ஜே.வி.பியின் மற்றொரு அரசியல் குழு உறுப்பினர் அவரைச் சுட எத்தனித்ததாகவும் ஆனால் படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இருவரையுமே கொன்று விட்டதாகக்கூறப்பட்டது. இந்தக் கதையை நம்புவது கஷ்டமான காரியம். விஜேவீர பல பேரை கொன்றிருந் தார். விசேடமாக பொலிஸ்காரர்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டி ருந்தது. ஆதலால் அவர் இருந்த இடத் தைச் சுற்றி வளைத்த படையினர் அவருடன் தேனீர் குடித்து அளவளாவி அவரு டைய அமைப்புப் பற்றிய தகவல்களைக் கேட்டதாகக் கூறப்படுவது நம்ப முடியாத தொன்று. இலங்கைப் பொலிசாருக்கு அவர் மீது கடுமையான ஆத்திரமும் வெறுப்பும் இருந்தது. ஆதலால் அவரைக்கண்டவுடன் தம்மை அவர்கள் கட்டுப்படுத்திக் கொண்டி ருப்பார்கள் என்பது ஏற்கக்கூடியதல்ல. விஜேவீரவும் அவருடைய இரு சகாக்களும் சித்திரவதை செய்யப்பட்டு கூட்டுக் கொலை செய்யப்பட்டதாகச் சந்தேகங்கள் உள்ளன. அரசாங்கம் அவர்களின் உடல்களை துரிதமாகத் தகனம் செய்து விட்டது.

என்றாலும் நாடு அவர்களின் மரணத்தின் பின் பெரியதொரு ஆறுதல் பெருமூச்சு விட்டது. மகிழ்ச்சி மீதியால் பொலிசார் பாடசாலைப் பையன்கள் போல் வெடிகுட்டு மகிழ்ந்தனர். பலர் தங்களது அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்ந்தனர். அன்பு செலுத்தப்படுவதிலும் பார்க்க அதிகளவு பயத்தையே விஜேவீரவிடம் மக்கள் கொண்டிருந்தனர். கமருஜ்ஜின் பொல்பொட்டுடன் இவர் ஒப்பிட்டுநோக்கப்பட்டார். பொல்பொட் 1975 இற்கும் 1979இற்கும் இடைப்பட்ட காலப பகுதியில் பல இலட்சக்கணக்கான கம்போடியர்களைக் கொன்று குவித்தார்.

அமைச்சர் விஜேரட்ண ஒரு சந்தோஷமான மனிதர். தனது நோக்கங்களில் ஒன்றை அவர் முடித்து விட்டார். ஜே.வி.பி.யை அவர் அழித்தொழித்து விட்டார். இப்போது விடுதலைப்புலிகள் தான் எஞ்சியுள்ளனர்.

ஒன்று போய் விட்டது. ஒன்று போகவுள்ளது. அவர் கிரிக்கட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அவர் தம்மை முதர் தரப் பந்துவீச்சாளராகக் கருதினார். ஒன்றன் பின் ஒன்றாக விக்கட்டுக்களை வீழ்த்தலாம் என அவர் இலக்கு வைத்தார்.

எனக்கு விஜேரட்ண மீது பிடிப்பு ஏற பட்டது. ஏனெனில் அவர் அச்சமற்றவராக நேர்மையானவராக அதே சமயம் இரக்கமற்ற வராகவும் இருந்தார். ஆனால் எனக்கு அவரில் பிடித்த விடயம் அவரின் வெளிப்படை

மனித உரிமைகள் பற்றிக் கேட்ட போது வெகுண்டெழுந்த ரஞ்சன் விஜேரட்ண

ரோகண விஜேவீர

சனதபை நான ஞாபகபபடுதது கொளகி றேன். விஜேவீர கொல்லப்படுவதற்கு முன்னர் பயங்கரவாதத்திற்கு எதிரான அரசின் நடவடி

அனிதா பிரதாப்

யான தன்மையாகும். அந்த மனிதரில் பாசாங்குத்தனம் இல்லை. அவருடனான முதல்

அதன் பின்னர் நான் அவரிடம் கேள்வி கேட்டேன். அப்படியானால் மனித உரிமைகள் என்னமாதிரி? மனித உரிமைகளுக்கு அரசாங்கம் எந்தவிதமான கௌரவத்தையும் கொடுக்கின்றதில்லையா? இராணுவம். பொலிஸ் பின்னணியுடன் தினமும் பாடசாலைப் பையன்கள் கொல்லப்படுகின்றார்களே இது நாகரீகத்திற்கு முற்றிலும் முரணப்பட்டதொன்றல்லவா? ரஞ்சன் விஜேரட்ணவிடமிருந்து ஆத்திரத்துடனான தொனி எழுந்தது.

மனித உரிமைகளைப் பற்றிக் கதைக்க உங்களுக்கு என்ன துணிச்சல் உள்ளது? அவற்றைப் பற்றிக் கதைக்க நீங்கள் யார்? நீங்கள் மனித உரிமைகளைப் பற்றி பெரிதாக எழுதுகின்றீர்கள். பின்னர் நீங்கள் யாவருமே காணாமல் போய் விடுகின்றீர்கள். பொறுப்பற்ற விதத்தில் நீங்கள் எழுதுகிறீர்கள். பத்திரிகைத்துறை முற்றாக நசுக்கப்பட்டால் உலகிலுள்ள அரசாங்கங்கள் தங்கள் ஆட்சியைச் சிறப்பாக நடத்தமுடியும். நீங்கள் செய்வது ஒன்றுமே இல்லை. ஆனால் குழப்பத்தை ஏற்படுத்துபவர்களாகச் சகல விடயங்களிலும் தலையிடுகின்றீர்கள். ஜே.வி.பி.யினராலும் விடுதலைப் புலிகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனித உரிமைகள் இல்லையா? அதைப் பற்றி நீங்கள் எழுத ஏன் துணிச்சல் வருவ தில்லை? நீங்கள் யாவருமே கோழைகள். பயங்கரவாதிகளை நீங்கள் துணிந்து எதிர்க்க மாட்டீர்கள். ஏனெனில் அவர்கள் உங்கள் தொண்டைகளை அறுத்து விடுவார்கள். ஏனென்றால் உங்கள் கோழைத் தனம் தான் இதற்குக் காரணம். நீங்கள் உங்களிடமிருக்கும் கோழைத்தனத்தால் பயங்கரவாதத்திற்கு சட்டபூர்வத்தன்மை கொடுக்கின்றீர்கள். உங்களைப் பொறுத்தவரையில் பயங்கரவாத நடவடிக்கைகள் எல்லாம் சரியானவை. ஏனெனில் அவை அவர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது என்பது உங்கள் கருத்து. ஆனால் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கங்கள் முயற்சி செய்யும் போது நீங்கள் மனித உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றீர்கள். நீங்கள் கோழைகள் மட்டுமல்ல பயங்கரவாதத்திற்கு துணை போபவர்களும் கூட. ஒருநாளைக்கு பால் விநியோகம் நிறுத்தப்பட்டால் துள்ளிக் குதித்து அரசாங்கம் பிரயோசனமற்றதெனக் கத்துவீர்கள். சமூகத்திலேயே மோசமான பாசாங்குத்தனம் நிறைந்தவர்கள் பத்திரிகையாளரே.

அவரின் குரல் உச்சஸ்தாயியில் எழுந்தது. கத்தினார். ஆத்திரப்பட்டார். அரை மணித்தியாலத்திற்கு முன்னர் எனக்கு வாழ்த்துத் தெரிவித்த அந்த நரைத்த தலை முடியை உடைய சிவந்த நிறமுடைய மனிதரா அவர் என என்னால் வேறுபடுத்திப் பார்க்க முடியாதிருந்தது.

ஆத்திரத்தால் அவர் முகம் சிவந்திருந்தது. அவரின் அடர்த்தியான கண் இமை குத்திட்டு நின்றன. கைகளை உயர்த்திக் கொண்டார். மூக்கு ஆத்திரத்தால் துடித்தது. அவரைப் பார்த்தால் அல்பினோ இனகாளை மாதிரி இருந்தது. அவரது குரல் ஓங்கி ஒலித்தபோது எனக்கு அவ்வாறு தான் தோன்றியது. எனக்கும் ஆத்திரமேற்பட்டதை நான் உணர்ந்து கொண்டேன். ஆயினும் அவரின் மேசைக்கு முன்னாலிருந்த கதிரையிலேயே நான் தொடர்ந்து இருந்தேன். என்னால் எழும்பமுடியவில்லை. அவரின் கோபப் பார்வையினால் கதிரையிலேயே தொடர்ந்து உட்கார்ந்து விட்டேன்.

அவரின்சத்தத்தைக் கேட்டு உதவியாளர்கள் உட்புறம் ஓடி வந்தனர்.ஆனால் இடையில் குறுக்கிட அவர்களுக்குத் துணிச்சல் இல்லை. என்னையும் அவர்கள் வெளியேற்றவில்லை. நீங்கள் மனித உரிமைகளைப் பற்றிக் கதைப்பது சுலபமான விடயம். கதைத்து விட்டுப் போய்விடுவீர்கள். ஆனால் நீதியான விடயங்கள் எங்களுக்குத் தான். அதாவது அரசாங்கத்திற்கு விடயங்களைச் சுமுகமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

பயங்கரவாதத்தைப் பாவுத்து நாட்டை ஜே.வி.பி. ஸ்தம்பித்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. நாங்களும் பதிலுக்குப் பயங்கரவாதத்தைப் பிரயோகித்து நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு செல்கிறோம். தேவைப்பட்டால் இதிலும் பார்க்க மேலும் கடுமையான நடவடிக்கையை நாங்கள் எடுப்போம். என்ன பிரச்சனை என்றால் பத்திரிகையாளர்களிடம் நாங்கள் மென்மையாக நடந்து கொள்வது தான் பாரிய குழப்பதை ஏற்படுத்துகின்றது. அதனாலேயே மனித உரிமைகள் போன்ற முட்டாள்தனமான கேள்விகளையெல்லாம் நீங்கள் கேட்கத் துணிகின்றீர்கள்.

இத்தகைய கேள்விகளை இடிஅமீனிடம் உங்களால் கேட்க முடியுமா? முடியாது. இடிஅமீன் தனது ஆட்களை நடத்தியது போன்று நாங்களும் பத்திரிகையாளர்களை நடத்த வேண்டும். உங்களை துண்டாக வெட்டி எனத குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்க வேண்டும். அது தான் தலையிடு செய்யும் பத்திரிகையாளர்களுக்கு நாம் செய்ய வேண்டியது. அதன் பின்பு தான் இத்தகைய மடத்தனமான கேள்விகளை நீங்கள் கேட்கத் துணிய மாட்டீர்கள்.

எனக்குள் ஏதோவொன்று நெருடியது. துண்டாடப்பட்ட என் தலை அவருடைய குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்படுவது பற்றி நான் கவலைப்படவில்லை. அந்த விடயம் எனக்குப் பயிடியாக இருந்தது. அழகான துணியொன்றினால் சுற்றி என்னுடைய தலை வைக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். சிவப்பாக இருக்கும் ஏனென்றால் எனக்கு சிவப்பு விருப்பமான வர்ணம். விளங்கிக் கொள்ளாமலேயே (27ம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேரூந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES

The Car Accident People

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

உங்களுக்குத் தெரியுமா?

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைட்டட்" நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

தீபன் (416) 505-9804

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*

WOODBINE BANQUET
&
CONVENTION CENTER

HWY#27 & REXDALE BLVD.

உங்கள் திருமண, பூப்புனித நீராட்டு விழா மற்றும் சகல வைபவங்களையும் சிறப்பாக கொண்டாடிட தொடர்பு கொள்ளுங்கள். 50 பேர் முதல் 1500 பேர் வரை உபசரிக்க கூடிய சொகுசு மண்டபம்.

மேலதிக தொடர்புகளுக்கு
GIRI OR PERRY
TEL: 416 704 9755, 416 917 1518
FAX:416 746 1053

இவ்வாரச் சிறுகதை

அகதி மனம்

சுப்பையா

சுளீரென விழுந்து உடம்பில் வேதனை உண்டாக்கும் மாயச்சாட்டை வீச்சுக்கு வேகமெடுத்து ஓடுவதுபோலத் தான் வேலைநாட்களின் வழமைகள். அலாம் அடிக்க உறக்கம்கலைந்து படுக்கையிலிருந்து உடம்பை உரித்ததும் மனசு நிமிடங்களை எண்ணத் தொடங்கிவிடும். பஸ் வரும் நேரம். வேலை தொடங்கும் நேரம். சாப்பாட்டு நேரம்.படுக்கும் நேரம்.மறுநாள் அலாம் சத்தம்.இப்படியே இதுவொரு நேரத்தைத்துரத்தியோடும் வாழ்க்கையாகிப் போய்விட்டது .ஆனால் இதற்கெல்லாம் இடைவேளைபோல வரும் ,வந்து சடுதியில் மறைந்துபோகும். வாரஇறுதி நாட்கள்.

இன்று சனிக்கிழமை லீவுநாள். இருந்தும் வழமையாக அலாம் தட்டி எழுப்பும் நேரத்திற்கு மூளை விழித்து உறக்கம் கலைந்து விட்டது.லீவு நாட்களில் செய்து முடிக்கவென ஒதுக்கியிருக்கும் அலுவல்களின் பட்டியலில் எதை முதலில் ஆரம்பிப்பது எவற்றையெல்லாம் அடுத்த சனிக்கிழமைக்கு தள்ளிப்போடுவது என படுக்கையில் இருந்தபடியே யோசித்தான் சேகர்.

சீட்டுக்காரனின் முகம் தான் எல்லாவற்றையும் தள்ளிக்கொண்டு முன்னுக்கு வந்தது.

போன கிழமையே கொடுக்கவேண்டிய கட்டுக்காசு. கமம்பாறாங்கல்லாய் தலையை அழுத்தும்போது ரெலிபோன் அடிக்கும் சத்தத்தையே அலட்சியப்படுத்த வேண்டியதா கிவிடும். அப்படி தற்காலிக செவிடாயிருந்ததில் வீட்டு வாடகை கொடுக்கமுடிந்தது. பிந்திப்போகும் ஒவ்வொரு கட்டுக்காசுக்கும் வட்டி கறக்கும் கில்லாடி அந்த சீட்டுக்காரர்.ஏனோ இன்னும் இவனிடம் அந்த தந்திரத்தை பிரயோகிக்கமுடியாத சிக்கலில் இருந்தார்.

சீட்டுக்காரரை எதிர்கொள்வதற்கு பொருத்தமான இரண்டொரு பொய்களை எடுத்து ஒத்திகை பார்த்தான். நாங்கள் என்ன அரிச்சந்திரன் காலத்திலா வாழ்கிறோம்? இடம் ,பொருள்,தொிந்து பொய் சொல்லாமல் அந்த மன்னன் பட்டபாடு இருக்கின்றதே. நாய் படாப்பாடு. இந்தப் பூமியில் தடுக்கி விழுந்த இடமெல்லாம் பொய்களும் உதிரிமுகங்களும் தானே விரவிக் கிடக்கின்றது. அதில் நம்பக்கூடியதொன்றை எடுத்து அணிந்து கொண்டான்.

லீவு நாட்களில் அவன் கோப்பிக்கு மனைவியை எதிர்பார்க்கமுடியாது. வேலை நாட்களின் ஓட்டங்களில் அவளது தான் நீளமும் வேகமும் கூடியது. சேகரை விட இருபது நிமிடங்கள் முன்னர் எழும்பி கடுதண்ணிக்கு கேற்றிலை பிளக்கில் செருகிவிட்டு முகம் கழுவச் செல்வாள். முகம் துடைத்த துவாய் கழுத்தில் மாலைபோலக் கிடக்க கோப்பி தயாராகும். பாண் துண்டுகளை ரோஸ்ரரில் நுழைத்துவிட்டு உடுப்புப் போடவோ தலையிழுக்கவோ அறைக்குத் திரும்புவாள். அங்குரோன்ஸ் தயான சத்தம் கேட்டதும் சீப்பைப் போட்டுவிட்டு சமையலறைக்குள் ஓடுவாள்.

இன்று அந்தப் பாய்ச்சல்கள் ஏதுமின்றி கைகால்களை மூலைக்கொன்றாய் கழற்றி யெறிந்து விட்டு உறங்கிக் கொண்டிருந்தது ஜீவன். தட்டியெழுப்புவது மிருகத்தனம். வெளியில் எங்காவது கோப்பி குடித்தால் போயிற்று என எண்ணிக்கொண்டு எந்த அவசரமுமற்ற நடத்தலில் இளங்காலையை எதிர்கொள்ள தெருவிற்கு இறங்கினான்.

ஓங்கி உயர்ந்து வரிசை கட்டியிருக்கும் கட்டிடங்களை நிமிர்ந்து பார்க்கும்போது சேகருக்கு கையில் பிரம்புடன் நிற்கும் வாத்தியாரைப் பார்த்தமாதிரி மனதில் இறுக்கம் வந்தது. எனினும் அமைதி கொண்ட பீதி பிடித்தது. இப்போதைய இவனைப் போலவே அது குளிர்நீரால் முகத்தில் தடவியதுபோல இளங்காற்று அவனைக் கடந்து செல்ல சந்தோசம் நெஞ்சிலிருந்து முகிழ்ந்து கிளம்பி மூக்கு நுனியில் நின்றது. வீதியின் எதிரேஒரு கிழவி தன் நாயுடன் கதைத்துக் கொண்டு வந்தாள்.அவளது குரலில் கண்டிப்பு தொனித்தது. பெரும்பாலும் காலைக்கடன் கழிப்பது தொடர்பான பிரச்னையாகத் தான் இருக்கவேண்டும். கிழவியின் சொல்லுக்கு ஆமோதிப்பது போல தலையைன் குனிந்து கொண்டு வந்தது நாய். வீதியில் திடீரென இவனைக் கண்டதும் அதற்குப் பிடிக்கவில்லை. தன் தவறுகளை முன்றாம் நபரான இவன்... அதுவும் அற்பப்பயல் கேட்பதாவது எரிச்சலுடன் உறுமியது.

சேகரைப் பார்த்து கிழவி 'காலை வணக்கம்'' என்றாள்.

இவனுக்கோ சங்கடமான நிலை. கிழவிக்கு பதில் சொல்வதா நாயின் விருப்பமின்மையால் வரும் விளைவைச் சமாளிப்பதா என்ற சிக்கல்.

''கவலைப்படாதே அவளால் பாதகமில்லை. அவள் நல்லவள்'' என்றாள் கிழவி.

சந்தர்ப்பம் கிடைக்காதவரை இந்தப் பூமியில் யார் தான் நல்லவரில்லை..?என நினைத்துக் கொண்டு மேலே நடந்தான்.

ஆறு மாதமாக சோம்பிக் கிடந்த சூரியக்குதிரை வானத்திடலுக்கு இன்னமும் மேய்ச்சலுக்கு வரவில்லை. அது கட்டிடங்களுக்கு பின்னே பதுங்கிக் கிடந்தது. வீதியின் தோள்களில் வயோதிகர்களே முளைத்திருந்தனர். ஆரோக்கியத்திற்காக அதிகாலை நடையும் தனிமையைப் போக்க ஆதரவாகிய நாய்களுமாக நடந்தனர். அவர்களுக்கானதரிப்பிடம் வந்து சேரும் வரைகடைசிச் சொட்டுக்காற்றையும் அனுபவித்து விட வேண்டுமென அலைந்தனரோ தெரிய வில்லை. ஆனாலும் இவர்கள் வாழத்தெரிந்தவர்கள். வாழ்வையும் ஒரு கணக்குப் போல கூட்டிக்கழித்து சமன் செய்துவிடுவார்கள்.

சேகர் இந்த மண்ணில் காலூன்றி எட்டு வருஷங்கள் வெப்பத்திலை வைத்த ஐஸ்கட்டி போல கரைந்து போயிற்று. வரவேற்பறையில் வளர்க்கும் தொட்டிப் பூங்கன்று மாதிரி ஸ்திரமற்ற வாழ்வு. இருப்பும் இல்லாமையும் மாறி மாறி முந்திக்கொண்டு ஓடும் அஞ்சல் ஓட்டம். ஏனோ இன்னும் இவனால் இதில் ஒட்டிக் கொள்ளமுடியவில்லை. வெளிக்காற்று நுழையாத வீட்டுச் சதங்குள் வேலைக் களைப்புடன் வந்தடையும் ஒவ்வொரு இரவும் மனது கிளம்பி சொந்த மண்ணுக்குப் பறந்து விடுகின்றது. வெண்மணல் உடுத்த கற்கோவளக்கடலுக்கும் அதன் முன்னே விரிந்த சவுக்கம்தோப்பில் புதைத்துவிட்டு வந்த இளமைக்காலத்திற்கும் நெஞ்சு ஏங்கித்தவிக்கும்.

சோளக்கக்காற்று அடிக்கத் தொடங்க கோடைகாலப் பள்ளி விடுமுறையும் வரும். சேகரும்தகப்பனுடன்கூடலுக்குப்போவான். தோளில் வீச்சுவலை காவிக்கொண்டு தகப்பன் முன்னே நடக்க கையில் பறியுடன் இவன் பின்னே செல்வான்.ஊர் மனையிலிருந்து அரைமைல் தூரம் தென்னந் தோப்பையும் சவுக்கம் தோப்பையும் கடந்து நடக்க கடல் தெரியும். கடலுக்கும் தோப்புக்கும் இடையே பச்சைச்சேலை காயப்போட்டது போல புல்வெளி பிரிக்கும்.

சவுக்கந்தோப்பின் வடக்கு மூலையில் தன்னந்தனியே ஒரு ஐயனார் கோவிலும் அதற்கு நிழல் தரும் பெரிய அரச மரமும் அந்த மரத்து நிழலில் எப்போதுமே ஐயனார் சாமிக்கு காவலாக இரண்டொரு நாய்கள் படுத்திருக்கும்.

கோயில் அண்மித்து அதைக் கடந்து போகும் வரைகாலை எட்டப் போட்டுதகப்பனுடன் சேர்ந்து நடந்து பயத்தைப் போக்க கதைத்துக் கொண்டே போவான்.

''ஐயா ..ஏன் இந்த நாயள் எப்ப பார்த்தாலும் கோயில்லையே கிடக் குதுகள்..?''

''அது..நடு மத்தியானம் ஐயனார் சாமி வேட்டைக்குப்போகும். அவரோடை போய் கடற்கரைக்குப் போய்ச்சேரும் வரை அந்தக் காவல் தெய்வத்தின் மகிமையைப் பற்றியும் அதன் கோபத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டு வருவார்.சாமப்பொழுதில் காடேறி பிடித்து காட்டுக்குள் வழி தவறி அலைந்து திரிந்த கிட்ணரை ஐயனார் சாமி காப்பாற்றி வீடு சேர்த்ததும்அதே ஐயனார் பூசைவைக்காமல் ஏமாற்றிய கணேசய்யரை சூலத்தால் குத்தி காவு கொண்டதும் இப்படி உண்மையும் கற்பனையும் கலந்த எத்தனை கதைகள்.

கொக்கின்பொறுமையுடன்அலைக்கரையில் கடலைப் பார்த்தபடி நிற்பதும் புற்களும் காவாய்களும் நீரில் சரிந்து விழுந்து மீன் கவ்விப் பறக்க திடீரென அந்த இடத்தை நோக்கிவலையை வீசுவதுமாகதகப்பன் மீன் பிடிக்கத் தொடங்க,சேகர் அடம்பன் கொடிச்சிறையிலிருந்து தப்பி கடலுக்கு தற்கொலை செய்ய ஓடும் இராவணன் மீசையை கலைத்துக் கொண்டு திரிவான்.

வீச்சுவலையில் பெரும்பாலும் மணலை குடைபோன்ற மீன்கள் தான் பிடிபடும். சிலநேரம் அதிர்ஷ்டவசமாக வாலான் மீன் சிக்கும். அப்படிவாலான் மீன் அகப்பட்டால் நீருக்குள்நின்றபடியே 'தம்பி''என்றுதகப்பன் குரல் கொடுப்பார். ஏறுவெயிலின் ஒளி கருமையானதாடியில் விழுந்து பிரகாசிக்கும் . அவரது குதாகலங் கொண்ட முகத்தைப் பார்த்தும் சேகருக்குப் புரிந்துவிடும் இன்று ஒரு கலாதியான இரவு என்று.

சூரியன் சாய்ந்ததும் குளிக்கப்போவதற்கு முன்னர் அம்மாவிடம் சொல்லுவார். ''பாக்கியம்..கிழங்கு அவிச்சு சம்பலும் போட்டு வையணை..'' குளிப்பு முடிந்ததும் திரும்பும்போது கையுடன் கள்ளுப் போத்தலும் வரும்.மாமரத்தின் கீழே வீச்சுவலையின் பொத்தல் விழுந்த பகுதிகளைதைத்துக் கொண்டேகள்ளையும் மரவள்ளிக்கிழங்கையும் ருசி பார்ப்பார். சற்றைக்கெல்லாம் கள்ளு தன் வேலையைத் தொடங்க காகரத்த குரலில் பாட்டுப் பிறக்கும். அரிச்சந்திர மகாராஜன் கடமை தவறாது மயானம் காப்பான். திடீரென அதையெல்லாம் மறந்து வயல்வெளிக்குள் வள்ளளியைத் தேடி முருகன் காதலிசைப்பான். இடையில் உச்சஸ்தாயியிலில் சில அம்பாள் பாடல்கள் வரும். பொறுக்க முடியாமல் அம்மா வந்து.. ''சரி..சரி காணும் எழும்பிச் சாப்பிடுங்கோ..''என்று சொல்லும் வரைக்கும் கச்சேரி நீளும்.

அன்று சேகரும் தகப்பனும் இன்னும் பல தகப்பன்மாரும் பிள்ளைகளும் பதித்துச் சென்ற பாதச்சுவடுகளைகாற்றும் அலையும் அழித்துச் சென்றது. பின்னர் ஒரு பிஞ்சுக் காலடியும் படாத வெண்மல் விரிந்து கிடக்க இன்றும் கடலன்னை தன் நேசம் மிக்கோருக்காக ஏங்கி அலைக்கின்றாள். நினைவுகள் இனிமையும் துயரமும் சேர்ந்தவை தான். ஆனால் சேகரால் நினைவுகளை மேலும் தொடரமுடியாதபடி சீட்டுக்காரரின் வீடு வந்துவிட்டது.

அப்பாற்மெண்டின் வெளிக்கதவு திறப்பதற்காக அழைப்பு மணியை அமுக்கினான்.சில நிமிடங்களின் பின்னர் கதவு திறந்தது. சீட்டுக்காரர் வாசிப்பது மூன்றாவது தளத்தில் லிப்ட் இல்லை. படிகளில் ஏறினான். நித்திரை கொள்ளாது முரண்டு பிடிக்கும் குறும்புச் சிறுவனை அழுத்திப் படுக்க வைக்கும் தாயைப்போல கறி,பொரியல்,தாழிப்பு போன்ற இத்தியாதி மணங்களையெல்லாம் புதைத்துக் கொண்டு மேலிருந்து சாம்பிராணி வாசம் வீசியது. அத்துடன் ஒரு தளர்ந்த குரலிலே தேவார ஒலியும் இறங்கி வந்தது.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்''

இச்சையின்றிய செயலாக சேகரின் சப்பாத்துச் சத்தம் மெல்லக் குறைந்துபோயவள் நெஞ்சம் தேவராத்தில் இணைந்து கொண்டது. சீட்டுக்காரரின் பக்கத்து வீட்டில் தான் யாரோ தேவாரம் பாடினார்கள். அந்த வீட்டை மெல்லக் கடந்துபோய் சீட்டுக்காரரின் வீட்டுக்கதவைத் தட்டினான். நித்திரைக்குழப்பமும் எரிச்சலும் மண்டிய முகத்துடன் கதவு திறந்த மனிதர் வாசலில் சேகரைக் கண்டதும் உடனே முகத்தில் சிரிப்பைச் சிருகினார்.

காலங்காத்தால வந்திருப்பது லட்சுமி யல்லவா..

சப்பாத்து லேசைக்கழற்றுவதற்கு சேகர் குனிந்தபோது இதுவரை பக்கத்து வீட்டிலிருந்து கேட்ட தேவாரம் நின்று

''எந்தக் கழிசடை படலையைத் திறந்துவிட்டது ஆற்றையோ ஆடு வந்து என்ர தென்னம்பிள்ளையைக் கடிச்சுப் போட்டுது'' என்ற சத்தம் வந்தது.

மூன்றாவது தளத்தில் இருக்கும் அப்பார்மெண்டில் ஆடும் தென்னம்பிள்ளையுமா? மனத்தில் தடுமாறிய சேகரின் முகத்தைக் கவனித்த சீட்டுக்காரர் அட்டகாசமான சிரிப்பொலியுடன் சொன்னார்.

''கிழவனுக்குத் தட்டிப்போட்டுது. நானெண்டபடியாலை விட்டிட்டு இருக்கிறன். அந்தாளின்ர மகனும் என்னோட சீட்டுப்பிடிக்கிறவர். இல்லாட்டி பொலிசுக்கு அடிச்சு கிழவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருப்பன்''

''சேகர் மாமா'' என்று கத்தியபடி ஓடி வந்து காலைக்கட்டிப்பிடித்தது சீட்டுக்காரரின் குழந்தை. அதை அள்ளி அணைத்து தூக்கினான். குழந்தைகளுக்கேயுரிய வியப்பும் ஆவலும் சேர்த்து அது கேள்விகளைப் போடத் தொடங்கியது. ஏனோ சேகரின் மனசு குழந்தையிடம் சேரவில்லை. பக்கத்து வீட்டுக் கிழவரையும் அவரது தென்னம்பிள்ளையையுமே சுற்றிச்சுற்றி வந்தது.

''ஏன்.. என்ன நடந்தது கிழவனுக்கு?''

''கிழவியும் கிழவனும் இரண்டு மாசத்துக்கு முன்னம் ஸ்பொன்சரிலை வந்தவை. வெல்பெயர் எடுக்கிறதுக்காக மகன் தனிய வீடெடுத்துக் குடுத்தவர். இடையிலை மகளின்ரை பிள்ளைப்பேறு பார்க்க கிழவி வன்கூவருக்குப் போட்டுது. தனிய ரண்டு நாள் இருந்த கிழவன் ஏதோ குணம் மாறி ஊருக்குப் போறனெண்டு உந்த ஜீன்தலோன் பஸ்லிலை ஏறியிருக்கு. பஸ்காரன் அம்புவன்சிலை ஏத்தி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிப் போட்டான்.

பிறகு மகன் போய்க்கூட்டி வந்து விட்டுட்டுப் போனவர். அது ஒரே கூத்து''

நகைச்சுவையான விஷயம் மாதிரிஇதைச் சொன்ன சீட்டுக்காரரின் முகத்தில் ஒங்கிக் குத்தவேண்டும் போல சேகருக்கு ஆத்திரம் வந்தது. நின்ற நிலையிலேயே கட்டுக்காசைக் கொடுத்தான். ''கோப்பி குடித்துவிட்டுப் போங்கோ'' என்ற அவரது உபசரிப்பையும் நிராகரித்துவிட்டு வெளியே வந்தான்.

கிழவரின் வீடு திறந்துதான் கிடந்தது. அதைக் கடக்கும்போது திரும்பிப் பார்த்தான் .முழங்காலளவுக்கு நாலு முழம் கட்டிய கறுத்து மெலிந்த ஒரு உருவம் தன் கையிலிருந்து கேற்றில் தண்ணியை வரவேற்பறையில் போட்டிருந்த செற்றியின் மீது மிகப்பதனமாக ஊற்றிக்கொண்டிருந்தது. என்றுமே வற்றாத நிவாரணக் கிணற்றில் தண்ணீர் இறைத்து கிழவர் தன் பிரியமானகத்தரிச் செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருக்கின்றார்.

''மூக வண்டறை பொய்கையும் போன்றதே''

இனிமேல் எந்தச் சுண்ணாம்புக் காழவாயும் கிழவரைக் காயப்படுத்தமுடியாத நிலைக்கு அவர் உறைந்து போய்விட்டார் என எண்ணிக்கொண்டு வீதிக்கு வந்த சேகருக்கு சூரிய ஒளி பட்டுக் கண்கள் கூசியது.

OPTOMETRIST

கண் பரிசோதனை நிபுணர்

டாக்டர் யாழினி கருணாநிதி O.D



கனேடியப் பட்டதாரி.,
கனடாவிலும் அமெரிக்காவிலும்
பயிற்சி பெற்று அனுபவம் உள்ளவர்.

உங்கள் கண்களை முழுமையாகப்
பரிசோதித்து தகுந்த கண்ணாடிகளை,
அல்லது விழி வில்லைகளைப்
(Contact Lens) பெற்றுக்கொள்ளலாம்.

கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு
தகுந்த சிகிச்சை வழங்கப்படும்.
அல்லது தகுந்த சிகிச்சைக்கு
அனுப்பிவைக்கப்படும்.

OHIP, மற்றும்
பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.

DON MILLS - SCARBROUGH இரண்டு இடங்களில் **CLINIC** நடைபெறுகிறது.

OHIP and Private Insurance accepted - Evening and weekend appointments available.

Tel : (416) 429-2548 **Tel : (416) 298-9674**

COPY NET

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செய்ற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று
இயற்கை மூலிகைகள் கொரண்டு தயாரிக்கப்பெற்ற

Vitaplex

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

தலைமுடி உதிர்தல்,
சொடுகு,
எண்ணைத்தன்மை
போன்றவற்றை
எளிதில் அகற்றி
உங்கள் தலைமயிருக்கு
புத்துயிர் அளிக்கின்றது.

குடும்பத்தில்
சிறு குழந்தைகள்
முதல் பெரியவர்கள்
வரை உபயோகிக்கக்கூடிய
ஒரே ஒரு சம்போ அன்
கன்டிஷனர்

Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo
Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

பாவிக்கும் முறை

தலைமயிரை நன்றாக நனைத்தபின் **Vitaplex** சம்போவை சிறிதளவு கையிலெடுத்து தலையில் இட்டு நன்றாக தேய்த்து 30 வினாடிகளின் பின் நன்றாகக்கழுவவும் பின்னர் **Vitaplex**கன்டிஷனரையும் சம்போ போன்று தலையில் வைத்து முழுகவும்.
இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் சிறந்த பலனை வெகு விரைவில் பெறலாம்.

பலா பலன்கள்

1. பக்க விளைவற்றது.
2. தலைமயிர் பளபளப்பாகவும், தடிப்பாகவும் வளர உதவும்.
3. மண்டையோட்டில் எவ்வித படிவுகளையும் படியவிடாது.

கிடைக்குமிடங்கள்

SCARBOROUGH		
இரா சுப்பர் மார்க்கட்	(Midland & Eglinton)	416-269-2622
சங்கர் அன் கோ	(Kennedy & Eglinton)	416-759-5100
சுரபி	(Birchmount & Eglinton)	416-285-8518
ஸ்டார்ஸ் சுப்பர் மார்க்கட்	(Markham & Eglinton)	416-266-5025
ஸ்டார்ஸ் சுப்பர் மார்க்கட்	(New Location)	416-264-1546
எஸ். பி. இம்போட்டர்ஸ்	(Brimley & Lawrence)	416-266-3077
நியூ ஸ்பைசி லாண்ட்	(Markham & Sheppard)	416-292-9769
ஜவ்னா சுப்பர் மார்க்கட்	(Markham & Tuxedo Crt.)	416-289-8812
மார்க்கர் ரேடர்ஸ்	(Midland & Ellesmere)	416-285-0587
மார்ஸன் மார்க்கட்	(Warden & Finch)	416-494-9494
டெயிலி நீட்ஸ்	(Pharmacy & Finch)	416-490-7703
MARKHAM		
பிரியாஸ்	(Kennedy & Denison)	905-944-1229
பிரியாஸ்	(Brimley & Steeles)	905-415-8501
BRAMPTON		
S.T. P. MARKET	(Kennedy / Steeles)	905-455-3483
MISSISSAUGA		
தர்ஷனாஸ்	(Dundas & HWY 10)	905-270-7576
தர்ஷனாஸ்	(Field Gate & Bloor)	905-625-8152
TORONTO		
துவாரகாஸ்	(Victoria Park & Eglinton)	416-757-1091
றீகல் குறோசரி	(Victoria Park & St. Clair)	416-755-6724
றோயல் குறோசரி	(Victoria Park & Danforth)	416-693-8078
யாழ் சுப்பர் ஸ்ரோஸ்	(Wellesley & Parliament)	416-923-9806
தனா சுப்பர் மார்க்கட்	(Queen & Jemeson)	416-534-7770
பாலா பிறதர்ஸ்	(Landsdowne & Bloor)	416-532-6809
ஏஜிபி	(Landsdowne Subway)	416-531-3306
ETOBICOKE		
சுபீனா சுப்பர் மார்க்கட்	(Keele & Sheppard)	416-638-9554
ஜெம்ஸ் குறோசரி	(Jane & Finch)	416-636-0884
உதயாஸ்	(Kipling & Steeles)	416-740-7971
MONTREAL		
மார்சே மாருதி	(155 Jean Talon East)	514-270-9511
மார்சே எமி	(6455 Victoria Ave.)	514-731-5368
மார்சே துர்க்கா	(Parc Metro)	514-276-9262
மார்சே அலெக்ஸ்சாண்டியா	(Cote Desneiges)	514-737-0612
மார்சே மெரில்ஸ்	(Sauve / St. Laurent)	514-389-5236
மார்சே A.M.R.	(Cote Vertu / Sauve)	514-334-6737

நாடு கடத்தப்படுவார்கள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) அத்துடன் விடுதலைப்புலிகள் தம் பயங்கரவாதத்தை முற்றாகக் கைவிட்டுப் பேச்சுவார்த்தை மேசையை நாட வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இரண்டாவதாக பெல்ஜிய நாட்டிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்துக்குச் சென்று உரையாற்றி ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த ரணில் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கூடுதல் அரசியல் அழுத்தம் புலிகள் மீது தேவை என்று கூறினார். அத்துடன் இம்மாத இறுதியில் ஐரோப்பாவில் நடக்க இருக்கும் இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் உள்ளடக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்துக் கூடுதல் நிதிக்கான வேண்டுகோளை விடுத்தார். இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானம் பின் நிரந்தரமானது என்பது போல் ரணில் வாதிட்டு அச்த நிரந்தரத்தன்மையைத் தொடர்ந்து பேணுவதற்கும் கூடிய நிதி தேவை என்று வேண்டுகோள் விடுத்தார்.

மூன்றாவதாக ஐரோப்பியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் ஏற்றுக் கொள்ள இணக்கம் தெரிவித்தார். இதன் மூலம் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருந்த கிடைக்கும் வருமானத்தை நிறுத்த முடியும் என்பதையும் எண்ணிச் செயற்பட்டார்.

சர்வதேச சட்ட முறைமைகளுக்கும் [illegible] தொடர்பான மனிதாபிமான சட்டக் கோட்பாடுகளுக்கும் விரோதமான முறையில் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றை ஐரோப்பியக் கூட்டமைப்புடன் செய்து கொள்ள முன்வந்த முதல்நாடு என்ற அபகீர்த்தியைப் பிரதமர் ரணில் பெற்றுள்ளார்.

மேற்படி இணக்கத்தையடுத்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் ஐரோப்பிய கூட்டமைப்பு வெளியுறவு அமைச்சர் அலன் பேட்டனும் முறையான ஒப்பந்தத்தில் உத்தியோகபூர்வமாகக் கைச்சாத்திட்டனர். ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள தனது நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட அகதிகளை திரும்பப் பெறத் தயாராகவுள்ள முதல் நாடுஎன்ற முத்திரையை இவ்வொப்பந்தம் மூலம் ஸ்ரீலங்கா பெற்றுள்ளது.

இவ் ஒப்பந்தம் 16 நாடுகளில் உள்ள இலங்கை அகதிகளுக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. இந்த நாடுகளில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் தற்போது சுமார் 570,000 இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் இருப்பதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் சுமார் 235000 பேர் நிரந்தரக் குடியுரிமையையும் நிரந்தர வதியுரிமையையும் பெற்றுக் கொண்டவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். எஞ்சிய சுமார் 335,000 பேர்களை ஒரு அடிப்படையில் கட்டம் கட்டமாக இலங்கைக்குத் திரிப்பி அனுப்புவது என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையை அகதிகளுக்கான ஐநா. உயர்ஸ்தானிகராலயம் வன்மையாகக் கண்டித்துள்ளது. அது விடுத்த அறிக்கை 14ம் பக்கத்தில் உள்ளது.

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
22.07.1958

உதிர்வு
21.05.2001

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் உயர்திரு
சந்தனராசா கணபதிப்பிள்ளை

திதி: 07.06.2002

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
ஆருயிரே அன்பின் சிகரமே!
காலனவன் இடைவழியில் உங்களை
அழைத்துக் கொண்ட மாயமென்னவோ?
அன்பான தாய், தந்தை, மனைவி, பிள்ளை
பாசமுள்ள சகோதரர்களும் அருகில் இருந்த வேளைதனில்
காலனும் தான் தங்களை
இவ்வளவு அவசரமாய் கவர்ந்து கொண்ட மாயம் என்ன
எமது அன்புத் தெய்வமே!
எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு கழிந்தாலும்
கண்ணீரிலே வாழுகின்றோம் நாம்
பொன்னான வார்த்தைகளை கேட்பதற்கு ஏங்குகின்றோம்
எத்தனை உறவுகள் இருந்தாலும் உங்களது உறவுக்கு யாரும் ஈடாகாது
உங்களது ஆத்மா சாந்தியடைய அன்னை மாரியம்மனின் பாதங்களை வேண்டுகின்றோம்.
நீங்காத நினைவுகளுடன் அன்புப் பெற்றோர், மனைவி, மகன், சகோதரர்கள்

தொடர்புகளுக்கு: (416) 740 - 7687

நீங்காத நினைவில் 1ம் ஆண்டு நினைவஞ்சலி



எங்கள் கண்கண்ட தெய்வமே ஐயா!
பாசத்தின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய்
எங்களைப் பாராட்டி சீராட்டி அவனியிலே வாழவைத்து
இன்று காலத்தின் கோலத்தால்
எமை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடிவிட்டது ஐயா!
ஓராண்டு என்ன ஓர் யுகம் ஆனாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு நீங்காது ஐயா!
இனி எப்பிறப்பிலே எங்களுக்கு அந்த சுகம் கிட்டுமோ?
எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும்
மீண்டும் உங்கள் பிள்ளைகளாகப் பிறந்திட
வேண்டுகிறோம்!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவனடியில் நித்திய சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுடன் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

அமரர் கிருஷ்ணர் நடராசா

(நிரஞ்சனாஸ் வெல்டிங் வேர்க்ஸ் உரிமையாளர்,
ஆனைப்பந்தியடி - குருநாதர் சுவாமி கோயில் (முன்பாக)
தோற்றம்: 21.07.1923 மறைவு: 29.05.2001 திதி: 18.05.2002

தகவல்: பவளராஜா - 06 09 22 26 45,
லோகேஸ் - ரதி - 01 55 21 40 96, 06 74 79 04 14,
ரஞ்சனி - 06 61 71 32 10 (பிரான்ஸ்)
ARUERN - Restaurant
95, Bld. Victor Hugo, 92110 CLICHY.

1ம் ஆண்டு நினைவஞ்சலியும் திருப்பலியும்

அன்னை மடியில்: 12.03.1938
ஆண்டவன் திருவடியில்: 16.05.2001

யாழ் - பாசையூரைப் பிறப்பிடமாகவும் தமிழ்நாட்டில் வசித்துவந்தவருமாகிய

திரு மருத்தீஸ் ஜேக்கப்

ஆண்டொன்று போனதையா ஆறவில்லை எமது நெஞ்சம்
ஆண்டவரைத் தேடி அவசரமாய் போனீர்கள்
வேதனையால் நாமிங்கு வெந்து தவிக்கின்றோம்
எங்கள் துயர் தீர்க்க உங்களைப்போல் எவருமில்லை
உங்கள் சாந்திக்காய் இறைவனிடம் மன்றாடுகின்றோம்!

எங்கள் அன்புத் தந்தையாரின் 1-ம் ஆண்டு நினைவுத் திருப்பலி 19.05.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பாரிஸ் Belle Ville (57, Bld. de Belle Ville, 75011 Paris) ஒப்பரவு அன்னை சிற்றாலயத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இத் திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: பிள்ளைகள்
Tel: 01 60 06 41 57 / 06 10 03 13 24 (Paris)

2ம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி யசிதா விஜயரத்தினம்

(சாவகச்சேரி)

பூத்துக் குலுங்கிய பூ மலரே! எங்கள் வீட்டின் வசந்தமே!
வாழ்ந்தவரை போதும் என்றா வானகம் நீ சென்றுவிட்டாய்?
நேற்றுப்போல் உன் நினைவு, நெடுந்தூரம் சென்றுவிட்டாய்!
தோற்றுப்போய் நிற்கின்றோம்... உன்னைத் தொலைத்துவிட்டுத் தேடுகின்றோம்...
வா வெண்ணிலவே வானகம் விட்டு மீண்டும் எம் வீட்டில் விளக்கேற்று
விடியாத துயரத்தை விரட்டிவிடு... வா வெண்ணிலவே!

பிரிவால் துயருறும் அன்பு அம்மா, அப்பா, சகோதரங்கள்.
பாரிஸ் 01 60 20 29 76

மலேசியப்பாடகர் இராஜராஜசோழன் வழங்கும் இசைக்கச்சேரி

சேர்காழி கோவிந்தராஜனின் தேன் குரலைக் கொண்ட மலேசியப் பாடகர் இராஜராஜசோழன் வழங்கும் இசைக் கச்சேரி எதிர்வரும் செவ்வாய் இழமை 04.06.2002 மாலை 6.30 மணியளவில் ஸ்காபரோவில் அமைந்துள்ள ஸ்ரீநாக பூஷணி அம்மன் ஆலயத்திலும் வெள்ளிக் கிழமை 07.06.2002 பிரதோஷவிரத நாளன்று மாலை 6.30 மணியளவில் வரசித்தி விநாயகர் ஆலயத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 08.06.2002 அன்று ஸ்ரீஐயப்பன் ஆலயத்திலும் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரும் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்குவோர் ஈஸ்டவுன் திருமண மண்டப சேவை, மற்றும் சுப்பர் குறோசர் மொத்த விற்பனையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இரத்தத்தின் தீவு.... (தொடர்ச்சி)

நான் சிரிக்க ஆரம்பித்தேன். எனது சிரிப்பொலி விஜேரட்ணாவின் வார்த்தைகளை இடைநடுவில் நிறுத்திவிட்டது. திறந்த வாயுடனேயே என்னை விழித்துப் பார்த்தார். அதிர்ச்சியிலிருந்து மீள அவருக்குப் பல செக்கன்கள் எடுத்தது. அதன் பின்னர் அவரின் முகம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியது.

அவர் சிரிக்க ஆரம்பித்தார். சிரித்தவாறு உங்களைப் பற்றி ஆட்கள் சொல்வது சரி தான். நீங்கள் ஒரு துணிச்சலான முரட்டுத் தனமான பெண் என்றார். பின்னர் எழுந்து நின்று என்னுடன் கைகுலுக்கினார். அப் போது தான் அவரின் உதவியாளர்கள் தம்மை ஆகுவாசப்படுத்திக் கொண்டனர். அதுவரை அவர்கள் மூச்சும் விடவில்லை. அதன் பின் அமைதியாக அறையை விட்டுச் சென்றனர்.

அன்றைய தினத்தின் பின் விஜேரட்ணாவும் நானும் நல்ல நண்பர்களானோம். அவர் புலிகளுடன் நடத்திக் கொண்டிருந்த யுத்தச் செய்திகளைச் சேகரிப்பதற்காக நான் வடக்கிற்குச் செல்வதற்கான நகல அனுமதிகளையும் அவர் துரிதமாக வழங்கினார்.

அரசு – புலிகள் பேச்சுவார்த்தை....

(6ம் பக்கத்தொடர்ச்சி) 13வது அரசியலமைப்புத் திருத்தத்தில் அதிகாரப் பரவலாக்கலை மேற் கொள்வது குறித்து இந்திய அரசியலமைப்பு நிபுணர் ஆலோசனையைப் பெறவும் பீரிஸ் கூறியிருந்தார். கடும்இராணுவப் போக்குக் கொண்ட சமாதானத்திற்கு எதிரான ஜனாதிபதியின் கருத்துக்க இசைவான போக்கே தற் போது அரசாங்கத்திடமும் காணப்படுவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பலத்த அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய "தமிழ்ஈழ" உணர்வாளர்கள் மத்தியில் கலாநிதி அன்டன் பாலசிங்கம்

(5ம் பக்கத் தொடர்ச்சி) முதல் கட்டமாக தமிழ்த்தேசிய இனக் கோட்பாடு. தமிழர் தாயகக் கோட்பாடு, தமிழர் சுயநிர்ணயக் கோட்பாடு. ஆகியவற்றை முதலில் அங்கீகரிக்கும் படி கேட்போம். அதன் பின் தான் ஏனைய பேச்சுவார்த்தை. ஆனால் இந்த நிலை வரும் போதோ அல்லது அதற்கு முன்பாகவோ அரசாங்கம் தடுமாறத் தொடங்கிவிடும். சிங்களப் பேரினவாத எதிர்ப்புக்கு முன் அரசாங்கம் தடுமாறிப் பணிந்து போகும் அல்லது கவிழ்ந்து விடும்.

நாம் கொடுத்த அவகாசத்தைச் சரியாகப் பயன்படுத்தினார் என்றால் ரணில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு ஒரு ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டத்தை முன் வைக்கலாம். ஆனால் அப்படிச் செய்வாரா என்ற கேள்விக்கு இப்போது சரியான பதில் கிடையாது.

ஆனால் இப்படு எங்களுக்கு ஒரு நல்ல தீர்வை ஐக்கிய இலங்கைக்குள் தரமுடியாது போனால் நாம் சர்வதேச சமுகத்திடம் எமக்கு என்ன பதில்? என்று கேட்போம். சுயநிர்ணய உரிமையின் இறுதிப் பிரயோகம் பிரிவினையே என்ற கோட்பாட்டை வலியுறுத்துவோம். இந்த நிலையில் சர்வதேச நாடுகள் இலங்கையில் பிரிவினையைத் தடுக்கக்கூடிய தார்மீக உரிமையை இழந்து விடும். அவை ஒன்றில் எம்மை ஆதரிக்க வேண்டும் அல்லது எதிர்க்காமல் இருக்க வேண்டும்.

உடனடியாக நாம் சட்டபூர்வமான நாடாக அங்கீகரிக்கப்படாவிட்டாலும் கூட சைப்பிரஸ் அல்லது கொசொவோ போன்ற நிலைமை ஏற்படும். பின்னர் கிழக்குத் திமோர் போல் முன்னேற்றகரமான நிலைமை ஏற்படும்.

இது தவிர செப் 11 சம்பவங்களின் பின் தென்னாசியாவில் பெரிய வல்லரசுகள் கண் வைத்துள்ளன. இந்தக் கவனம் இருக்கும் போது இலங்கையில் நாம் பெரிய போர் செய்து இராணுவச் சமநிலையை மாற்றியமைத்தால் அதுவேறு வகை தலையீட்டுக்கு வழி வகுக்கும். எனவே தற்போதைய பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற வெறியுணர்வு அடங்கும் வரை நாம் பெரிய நடவடிக்கை எதிலும் இறங்காமல் இடைக்கால நிர்வாகத்தை நடத்தி எல்லா வழிகளிலும் எம்மைப் பலப்படுத்திக் கொள்வதே சிறந்தது. அதைத் தான் செய்யப் போகின்றோம் என்று கலாநிதி பாலசிங்கம் தெரிவித்தார்.

தலைவரின் பெற்றோர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமது பொறுப்பில் யு.என்.எச்.சி.ஆர் அவர்களை நாட்டிற்குத் திருப்பிக் கொண்டு போய் விடும். அந்தவகையில் தலைவரின் பெற்றோர் மனுவும் பரிசீலனை செய்யப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். தனது பெற்றோரைக் குறிப்பாக நோயுற்ற தாயாரைக்காண விரும்புவதாகத் தலைவர் பிரபாகரன் தெரிவித்தது பற்றி செய்திகள் வெளியாகியிருந்தன. ஏற்கனவே இந்தியாவில் இருந்து சில தமிழர்கள் கொழும்பு திரும்பியுள்ளனர்.

சந்திரிகா – ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து நீண்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். இரண்டாம் கட்டச் சந்திப்பு இந்த வாரம் நடக்க வுள்ளது. ஏற்கனவே தாய்லாந்தில் நடத்த உத்தேசிக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் கடைப்பிடிக்கக் போகும் நிலைப் பாட்டினை வகுக்க இரு தரப்புக்கும் பொது வான குழு ஒன்று நிறுவும் முயற்சியும் ஆரம்பமாகியுள்ளது.

V.I.P ROSSLI RESTAURANT

ரேக்கவுட் மட்டும்

புதிய முகவரியில்

638 Jean Talon (West)
Boucherie, Thang Cung
Poission - Vlande
பாக் மக்றோக்கு அருகாமை (Metro)

பலவருட காலமாக பலரின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்
VIP ROSSLI உணவகம்

ஜயர் முதல் அம்மிவரை அனைத்தையும் ஒழுங்கு செய்ய
VIP யை நாடுங்கள்
குறைந்த செலவில் நிறைந்த சுவையூட்டும் உணவுவகைகள்
விசேட விலைகளில் பெற VIP

100 பேருக்கு 2 விதமான உணவுவகை
நீங்கள் விரும்பும் இடத்துக்கு கேற்றரிங் சேவிஸ் செய்து தரப்படும்
$ 399.00 மட்டுமே

வெள்ளிக்கிழமை மாத்திரம் மரக்கறி சாப்பாடு..... $ 5.99
(வெள்ளி மதிய உணவு – 4 மரக்கறி, வடை, பாயாசம், அப்பளம், மிளகாய் பொரியலுடன்)

100 இடியப்பம் (சம்பல், சொதி, பருப்புடன்)..... $ 12.00

முட்டைக் கொத்து	$ 3.99
மட்டன் (ஆடு) கொத்து	$ 4.99
பீவ் (மாடு) கொத்து	$ 4.99
சிக்கன் (கோழி) கொத்து	$ 4.99
மட்டன் (ஆடு) புரியாணி	$ 4.99
பீவ் (மாடு) புரியாணி	$ 4.99
சிக்கன் (கோழி) புரியாணி	$ 4.99
புட்டு (கறி, முட்டைப் பொரியலுடன்)	$ 4.99
புட்டுக்கொத்து	$ 3.99
மீன்கறி	$ 3.50
கணவாய் கறி	$ 3.99
ஆட்டுக்கறி	$ 4.99
மாட்டுக்கறி	$ 3.99
(மிச்) பிறைட்றைஸ்	$ 6.99
ஆடு, மாடு, கோழி, ஸ்ரீம் பிறைட்றைஸ்	$ 4.99
(மிச்) பிறைட்றைஸ்	$ 6.99
டெவல் மாடு	$ 4.99
டெவல் கோழி	$ 3.99
மாட்டு றோஸ்ட்	$ 4.99

பற்றிஸ் மரக்கறி	$ 1.00
றோல்ஸ் மாமிசம்	$ 1.00
வடை	$ 1.00
மாலுப்பாண்	$ 1.00

காலை 11:00 மணிமுதல் இரவு 9:00 மணிவரை

தற்காலிக தொலைபேசி (514) 272-8338 (514) 978-3823

CLAIREPORT Place
Banquet & Convention Centre

தனியொரு உயர்ந்த கூரையின் கீழ்
50 பேர் தொடக்கம் 1200 பேர் வரை கொள்ளக்கூடிய
அழகிய (Luxurious) 4 மண்டபங்கள்



திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழா
ஒன்று கூடல் மற்றும் சகல
வைபவங்களுக்கும் நாடுங்கள்.

416-675-7700
416-460-7700

என்றும் உங்கள் சேவையில்

Contact: Jey or Sasi

65 Claireport Crescent, Etobicoke, Ont. M9W 6V5
Between Steeles & Finch on Albion Road
www.claireportplace.com E-mail: info@claireportplace.com

உங்கள் உடல்,
உள
நலம் பேண

வைத்திய நிலையம்

டாக்டர் யசோ தர்மரத்தினம்
குடும்ப வைத்தியர்
(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)

Dr (Mrs) YASHO THARMARATNAM
(MBBS, MD), (CCFP)

FAMILY DOCTOR

2466 Eglinton Ave. East, Unit 03
Scarborough, ON M1K 5J8
(Near Kennedy Subway Station)

(416) 266-7786

IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

குடிவரவுச் சேவைகள்
சாம் நாகேந்திரா
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

ROBERT I. BLANSHAY
Barrister & Solicitor
49 St. Nicholas Street
(Yonge / Wellesley)
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

SAM NAGENDRA
TEL: (905) 405-9615
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

LEGAL AID ACCEPTED

மரண அறிவித்தல்

மலர்வு
03.05.1922

உதிர்வு
31.05.2002

திருமதி அன்னப்பிள்ளை தம்பிராஜா

புங்குடுதீவு இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மன்னார் வட்டக்கண்டலை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவரு மாகிய திருமதி அன்னப்பிள்ளை தம்பிராஜா அவர்கள் 31.05.2002 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பிராஜாவின் அன்பு மனைவியும்

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகமணி - பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்

அமிர்தம், மதியாபரணம், கனகம்மா, பேரம்பலம், தங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும்

காலஞ்சென்றவர்களான இராசையா, சிவக்கொழுந்து, தம்பையா, சிற்றம்பலம், சின்னம்மா, செல்லம்மா, முத்துப்பிள்ளை, அன்னப் பிள்ளை (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்

காலஞ்சென்ற வேதநாயகம், கனடாவைச் சேர்ந்த லோகநாயகி, கமலாம்பிகை (இலங்கை) ரஞ்சிதமலர் (இந்தியா) மனோகரன் (கனடா) சரோஜா (கொலன்ட்) வசந்தி (கனடா) ஜெயந்தி (கனடா) செல்வநாயகம் (ராஜா - T.R.International பேக்கறி அன்ட் ரெஸ்ரோறன்ஸ் கனடா) பிறேம்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கண்மணி (கனடா) குலசேகரம்பிள்ளை (A.K.Gold house - கனடா) காலஞ்சென்ற கந்தசாமி, இந்தியாவைச் சேர்ந்த யோகராஜா, மகேஸ்வரி (இலங்கை) முத்துலிங்கம் (கொலன்ட்) கனகசிவம் (கனடா) மாசிலாமணி (கனடா) நாகேஸ்வரி (கனடா) மதிவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

சசி, சுசி, விஜயா, சேகர், தர்சினி, கௌரி, ஆனந்தி, சுமதி, தயா, கிருபா, யசோதா, சுகதா, உதயன், ரஞ்சினி, விஜயன், சுதாகரன், பிறேமினி, சுதாஜினி, லதா, முரளி, ரமேஸ், சுமலதா, சத்தியா, சாமந்தியா, சந்திரிகா, சிந்தியா, பிரதாப், பிரதீப், ஜனா, சரண், ராஜேஸ், நாகேஷ், ராதிகா, ரஜீகா, ரம்மியா, திசாந், தர்சாந், ரஜீகா, சுகிகா, விதுகா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், நிருபா, ரூபிகா, தீபிகா, சப்தா, சாதனா, நிலா, சூரியா, சங்கவி, அட்ஷயா, ஜனார்த்தன், கஜந்தன், கௌசலியா, இந்துஜன், பிரவீணா, ஜசிதா, சதுரன், விந்தியா, சகானா, கரூரன், ஜீவனா, வினோதா, ஜசீதன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 3280 Sheppard Ave East (Warden / Sheppard) அமைந்துள்ள Highland Funeral Home இல் 02.06.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு செவ்வாய்கிழமை 04.06.2002 பகல் 12.30 மணி முதல் 2.30 மணி வரை Highland Memory Garden (Donmills / North of Steele) மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடை பெற்று தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: வசந்தி கனகசிவம் (மகள்) (416) 742- 2933 குலசேகரம்பிள்ளை (மருமகன் A.K.Gold house - கனடா) (416) 466 - 0830 செல்வநாயகம் (ராஜா - மகன்- T.R.International பேக்கறி அன்ட் ரெஸ்ரோறன்ஸ் கனடா) (416) 817 - 8345

31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் உயர்திரு தம்பிஜயா குமாரசாமி

(JP மன்னார்) (முன்னாள் விஜயாஸ் / குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் - மன்னார்)

மலர்வு
28.07.1953

உதிர்வு
04.05.2002

அண்ணா!

நித்திலத்தில் நவமணியாய் யாமிருந்தோம்
இவ்விடத்தில் குடும்பம் என்ற செடி
தளிர்க்க வந்த முதல் முத்தே
நீ இவ்வுலகம் மறைந்தாய் என்பதை விட
எம்மனம் உறைந்தால் என்பதே உண்மை!
உருகும் மெழுகுவர்த்தியாய் யாமிங்கு
கண்ணீர் விழியுடன் உருகுகின்றோம்
ஆண்டுகள் பல ஓடினாலும் இவ் வையகத்தில்
யாமிருக்கும் வரை உன் நினைவுகள்
எம்மனத்தில் அழியாது! அழியாது!! அழியாதண்ணா!

அன்னார் வாழ்ந்த காலத்தின் பெரும்பகுதியை பொதுத்தொண்டிலும் சமூக சேவையிலும் ஈடுபடுத்தி உழைத்து ஊர்மக்களின் மனத்தில் நிலையான இடம் பிடித்தவராவர். வாழ்க்கையை சீரோடும் சிறப்போடும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் வாழ்ந்து வந்தவர்.

தமிழீழம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலில் வசித்து வந்தவருமாகிய தம்பிஜயா குமாரசாமி (JP) அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் கொக்குவிலில் அவரத இல்லத்தில் நடைபெற்றது.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேலணை முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக் கின்றோம்.

தகவல்: அனித்தா குமாரசாமி 94 21 3629 சந்திரன் (சுவிஸ்) 41 326854287 ராசன் (பாரிஸ்)331 - 48663961 சிவம் (லண்டன்) 44 2088484388 குமார் (கனடா) (416) 743 - 4458

மரணஅறிவித்தல்

திருமதி புவனேஸ்வரி கனகலிங்கம்

(10ம் வட்டாரம் - புங்குடுதீவு)

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி கனகலிங்கம் அவர்கள் 01.06.2002 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அம்பலவாணர் - சின்னத்தங்கம் (வெள்ளைச்சி) தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்ற வில்வரெத்தினம். இலங்கையில் இருக்கும் பரமேஸ்வரி, சேதுலட்சுமி, கோமதியம்மா கணேசமூர்த்தி, ராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்

கதிரவேலு (கனடா) இலங்கையில் வசிக்கும் தர்மலிங்கம். அப்புத்துரை. காலஞ்சென்ற திருஞ்ணபிள்ளை. கனகலஷ்மி (தோடை - கனடா) நாகேஸ்வரி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும்

மஞ்சுளாதேவி (லண்டன்) கனடாவில் வசிக்கும் கருணானந்தன். சியாமளாதேவி, சுகாநந்தி. கண்ணதாசன் (சுவிஸ்) அருளானந்தன் (லண்டன்) இலங்கையில் வசிக்கும் சிவானந்தி. கணேசானந்தன். முருகானந்தன். லாவண்யா ஆகியோரின் அன்புச் சித்தியும்

கனடாவில் வசிக்கும் கலைமதி. சுகுமார். சசிகுமார். ஸ்ரீகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் சமைக்கிரியைகள் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் மணல்காடு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: கா.கதிரவேலு (மைத்துனர்) க.கருணானந்தன் (பெறாமகன்) (416) 686 - 6535 த.சியாமளாதேவி (பெறாமகள்) (416) 265 - 2357 ஞா.சுகாநந்தி (பெறாமகள்) (416) 293 - 1497

31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
21.05.1946

உதிர்வு
10.05.2002

திருமதி புஸ்பதேவி சுவேந்திரராசா

(கொக்குவில் மேற்கு கேணியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டவர்)

எங்கள் குடும்பத்தின் தீபச் சுடரே!
பாசத்தின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே!
அன்போடும் பண்போடும் எமை அரவணைத்த தெய்வமே
கண்ணை இமை காப்பது போல் காலமெலாம் காத்து நின்றீர்கள்
காலனவன் எம் கண்ணை குத்திச் சென்ற மாயமென்ன?
மாதமொன்று ஓடி மறைந்தாலும். அம்மா
மாறாது உங்கள் அன்புருவம் என்றும் எம்மை விட்டு
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத்தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்து கலந்து கொண்டோர்க்கும் தொலைபேசி, கடிதம் மூலம் தங்கள் அனுதாப அலைகளைத் தெரி வித்த உற்றார். உறவினர். நண்பர்கள். அன்பர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் கணவர். பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்

தகவல்: திருமதி வனிதா தவராசகுலசிங்கம் (கனடா) (905) 477 - 7015
திருமதி வாககி பஞ்சலிங்கம் (பிரான்ஸ்) 48 37 1995
திருமதி விஜிதா தேவரட்ணம் (பிரான்ஸ்) 49 61 1465

-- சோதிடர் தர்மர்

		ராகு புதன்,சனி	சுக்கிரன் வியாழன் செவ்வாய்
சூரியன்	இவ்வார கிரகநிலை		
சந்திரன்	கேது செந்திரன்	சந்திரன்	

மேடம்

பூமி சம்பந்தமான நன்மைகள் கிட்டும். உயர்பதவிகள் நாடி வரும். தொழில் ரீதியாக வளர்ச்சி ஏற்படும். மனைவியுடன் பிணக்கு ஏற்பட லாம். செலவு அதிகமாகும். தீய பழக்கங்களால் துன்பம் ஏற்படலாம். கணவன்,மனைவி உறவு மகிழ்ச்சியாக அமையும். வெள்ளி நல்ல நாள்.

இடபம்

அதிகாரிகள் ஆதரவாக இருப்பர். பதவி உயர்வு போன்ற நன்மை களுக்கு இடமுண்டு. பெரியோர் ,தலைவர்களை சந்திப்பீர்கள். உதவிகள் கிட்டும். சொத்து,சுகம் சேரும்.குடும்பத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெறும். வழக்கு விவகாரங்கள் ஏற்படலாம். சட்ட விரோதகாரியங்களை தவிர்க்கவும். தீய பெண்கள் தொடர்பைத் தவிர்க்கவும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

மிதுனம்

எதிரிகளால் தொல்லைகள் விளையும். மனைவியை விட்டுப் பிரிய வேண்டி நேரிடலாம். அதிகாரிகள் உறவு அதிகமாகும். கடன் தொல்லை இருக்கும். நோய் வரலாம். கணவன்,மனைவி உறவு நல்லவிதமாக இருக்கும். தொழி லில் உயர்வு கிட்டும். எதிர்பாராத வகையில் சிலருக்கு சொத்து சேரலாம். குடும்பத்தில் நன்மைகள் கிட்டும். ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

கடகம்

முன்னேற்றத்திற்கான வழிகள் கிட்டும். கல்வியில் விருப்பம் உண்டாகும். நிலம் வாங்க விற்க நற்பலன் கிட்டும். வீண் தொல் லைகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.நல்ல காரியம் நடக்கும். நோய் நீங்கும். எதிரிகள் பணிந்து போவர். மனமகிழ் ச்சிக்கான நிகழ்வுகள் நடக்கும். சௌபாக்கியம் உண்டாகும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

சிம்மம்

செய்காரியங்கள் சாதகமாக முடிவ டையும். தொழிலில் நன்மைகள் கிட்டும். அதிகாரிகள் ஆதரவு தருவர். மனைவி மக்களால் நன்மைகள் உண்டாகும். மகிழ்ச்சி பெறலாம். வீண் செலவுகளும் வரும். சில காரியங்களில் எதிர்ப்பு இருந்து வரும். குடும்பத்தில் சுபகாரியங்களுக்கும் இடமுண்டு. வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

கன்னி

கெல காரியங்களிலும் இடையூறு இருக்கும். தொழிலில் தடை யேற்படும். அலைச்சலும் அமைதி யின்மையும் இருக்கும். ஏமாற்றம், பொருள் இழப்பு ஏற்படும். கணவன், மனைவி உறவு மகிழ்ச் சியாக அமையும். உறவினர் ஆதரவு கிட்டும். எதிர்பாராத வெற்றி கிட்டும். பிடிவாத குணம் இரு க்கும். எதிரிகள் விடயத்தில் எச்ச ரிக்கை தேவை. ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

துலாம்

நினைத்ததைச் செய்து முடிக்கக் கூடியதாக இருக்கும். மனச்சாந்தி ஏற்படும். செய்யும் தொதிலில் மிக உயர்ந்த நிலைக்கு செல்லலாம். செல்வாக்கு உயரும். மனைவி மக்களிடையே மகிழ்ச்சி நிலவும். திருமண முயற்சிகள் பலிதமாகும். பிரயாணங்கள் மூலம் நன்மைகள் கிட்டும். நண்பர்கள் மூலம் விருந் துகள் கிட்டும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

விருச்சிகம்

எதிலும் எச்சரிக்கை தேவை. நண்பர்களிடம் இணக்கம் இருந்து வரும்.சில காரியங்களில் ஏமாற்றம் ஏற்படும். கணவன்,மனைவி உறவு நன்றாகும். பெற்ற கடனால் அவமானம் அடைய நேரிடலாம். திருடரால் நெருப்பால் பயம் உண்டாகும். சிறு விபத்துக்கள் ஏற்படலாம். புதிய வகை நோய்களும் வரலாம். வியாழன் நல்ல நாள்.

தனுசு

போக சுகங்கள் கிட்டும். கௌரவம் பெருமை உயரும். கோபம் அதிக மாகும். நல்லவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். தொழிலில் கவனம் செலுத்தில் லாபம் பெறலாம். செய்காரியங்கள் வெற்றியாக முடியும். வீடு,நிலம் போன்ற சொத் துக்கள் சேரும். கணவன், மனைவி உறவு நன்றாக அமையும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

மகரம்

சண்டை சச்சரவு ஏற்படும். தொழிலில் தடைகள் ஏற்படும். அதிகாரிகளை அனுசரித்துப் போக வும். வெற்றியும் புகழும் கிட்டும். நண்பர் மக்கள் ஆகியோரால் பலன்உண்டு. குடும்பத்தாருடன் பிணக்கு வராமல் நடந்து கொள்ளவும். எதிர்பார்த்த வெற்றி கிட்டாது. பெண்கள் விடயத்தில் அவதானம் தேவை. ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

கும்பம்

எதிலும் வெற்றியும் புகழும் கிட்டும். தொழில் வளமாகும். தன்னை வ லி மை ப் ப டு த் தி க் கொள்ளமுடியும். நண்பர்களால் உதவியுண்டு. எதிர்ப்புக்கள் மறையும். மனைவி வழியால் நன்மைகள் கிட்டும். லாபம் அதிகரிக்கும். அவமானம் தரத்தக்க விடயங்களைத் தவிர்க்கவும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

மீனம்

குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். செல்வம் சேரும். நோய் நீங்கும். நிம்மதியுண்டாகும். தன விருத்தி உண்டாகும். எதிரிகளை வெல்லலாம். கணவன்,மனைவி உறவு சுவையாக அமையும். அரசவழி பகைமையுண்டாகும். கௌரவக்குறைவு ஏற்படும். ஆயுத பயமும் உண்டு. புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

உங்கள்
குழந்தைகளின்
ஜாதகக்
குறிப்புக்களை
சரியாகக்
கணிக்க

தொடர்பு
கொள்ளுங்கள்

சோதிடர்
தர்மர்

11 Av de la
Commune de
paris,
95140 Garges
les Gonesse,
France.
Tel:
01 39869208

TORONTO
TRUCK &
FORKLIFT
SCHOOL

இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (905) 653- 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
FAX: (905) 653 - 4031

N.K.S. DRAPERY & BLINDS
CUSTOM MADE
• VERTICAL BLINDS
• VENETIAN BLINDS
• DRAPERIES
• CURTAINS
• SHUTTERS
For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)
210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420

கண்காணிப்புக்குழு உறுப்பினருக்கு சவப்பெட்டி மிரட்டல்

சவப்பெட்டியைத் தயார்படுத்தி வைக்குமாறு தொலைபேசி மூலம் தனக்கு மிரட்டல் விடுக்கப்பட்ட தாக அம்பாறை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காரணிப்புக்குழு உறுப்பினர் இராசையா சண்முக நாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 30 ஆம் திகதி அரசு 11.30 மணியள வில் தனக்கு வந்த அனாமதேய தொலைபேசி அழைப்பிலேயே தனக்கு இந்த மிரட்டல் விடுக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற ஹர்த்தால் மற்றும் வீதிமறிப்புப் போராட்டங்களுக்கு நீரே பொறுப்பு. நீர் தான் இவற்றை ஒழுங்குபடுத்தி நடாத்தியுள்ளீர். எனவே நீர் உமக் குரிய சவப்பெட்டியை வாங்கி வையும் எனத் தனக்கு விடுக்கப் பட்ட இந்த மிரட்டலின்போது தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறி னார்.

இதே போன்றதொரு மிரட்டல் வெள்ளி இரவு தனது நண்பர் ஒருவருக்கும் விடுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

இருவருக்குமே வந்த மேற்படி தொலைபேசி அழைப்புக்களின் இலக் கங்களை, உள்வரும் அழைப்புக் களை இனங்காணும் வசதி மூலம் தாம் கண்டு கொண்டதாகவும் இருவருக்கும் ஒரே இலக்கத்தில் இருந்தே இவ்வழைப்புக்கள் வந்தி ருப்பதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

சில பாதுகாப்புக் காரணங்களுக் காக தனது நண்பரது பெய ரையோ மேற்படி தொலைபேசி இலக்கத்தையோ தெரிவிக்க மறு த்துவிட்ட அவர் எனினும் இவ் வழைப்புக்கள் எங்கிருந்து வந்தன எனத் தனக்குத் தெரியும் எனவும் இது குறித்து தான் அடுத்த கண்காணிப்புக்குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த புதன் நள்ளிரவு காரை தீவில் நான்கு இளைஞர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுத் தாக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக மேற் படி கண்காணிப்புக்குழு உறுப்பி னரே தலையிட்டு இந்த இளைஞர் களை விடுவித்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் அக்கரைப்பற்றுப் பகுதிகளில் அண்மையில் நடை பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அதிரடிப்படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக் கைகளால் அம்பாறை மாவட் டத்தில் தமிழ்க்கிராமங்களில் தொடர்ந்தும் பதற்ற நிலையே காணப்பட்டு வருகின்றது. முன் னர் வீரமுனை பகுதியில் படையி னர் சவப்பெட்டிகளைத் தயார் படுத்துமாறு பொதுமக்களுக்கு மிரட்டல் விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து
இராணவத்தினர் வெளியேற மறுப்பு

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் ஆக்கி ரமிப்புக்கு உள்ளாகியுள்ள பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரிக் கட்டி டங்களில் இருந்து படையினர் உடனடியாக வெளியேற முடியா தென யாழ். மாவட்ட கட்டளை யிடும் அதிகாரி அறிவித்துள்ளார்.

இத தொடர்பாக பலாலியில் உள்ள யாழ்.மாவட்ட கட்டளையிடும் அதிகாரி யாழ்.மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளருக்கு அறிவித துள்ளார். எனினும் இது தொடர் பாக ஹாட்லிக் கல்லூரி நிருவாகத் திற்கு அறிவிக்கப்படவில்லை.

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக் கட்டிடங் களில் இருந்து படையினர் வெளி யேற வேண்டுமெனக் கோரி வட மராட்சிக் கல்விச் சமூகத்தின் அனு சரணையுடன் மாணவர்களால் கடந்த மே மாதம் 23ம்திகதி பாடசாலை பகிஸ்கரிப்பு மற்றும் மறியல் போராட்டம் என்பன நடத் தப்பட்டன.

இதையடுத்து மெதடிஸ்த பெண் கள் உயர்தரப் பாடசாலையில் இரு ந்து படையினர் வெளியேறினர். எனினும் ஹாட்லிக் கல்லூரியின் கட்டிடத் தொகுதியில் இருந்து படையினர் வெளியேற முடியாதென தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்ப ந்தத்தின்படி தற்போது பாட சாலைக் கட்டிடங்கள் மற்றும் வணக்கத் தலங்கள் தனியார் வீடு களில் இருந்து படையினர் வெளி யேற வேண்டும். ஆனால் ஹாட்லிக் கல்லூரியில் இருந்து படையினர் வெளியேற முடியாதென அறிவித் துள்ளது புரிந்துணர்வு ஒப்பந்தத் திற்கு முரணான செயலென கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாடு 1996 ஆம் ஆண்டு படையினரால் கைப்பற்றப்பட்ட போது ஹாட்லிக் கல்லூரியை இராணுவம் ஆக்கிரமித்தது.

குடாநாட்டில் பிரான்ஸ் நாட்டு நிறுவனமும் கண்ணி அகற்றும் பணியில்!

குடாநாட்டில் கண்ணிவெடி அகற் றும் பணியில் பிரெஞ்சு நிறுவனம் ஒன்றும் ஈடுபடவிருக்கின்றது. புனர்வாழ்வு அகதிகள் மீள்குடிய மர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்த னாவின் அழைப்பையேற்று யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்த லண் டனைத் தலைமையகமாகக் கொண்ட நிலாம் இன்ரநஷனல் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப் பாளர் சாலிய அபயசேகர இத்தகவ லைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுமாறு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா விடுத்த கோரிக்கையை ஏற்றுள் ளோம். நிலைமையை நேரில் மதிப பிடவே யாழ்ப்பாணம் வந்து ள்ளேன். கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பிரெஞ்சு நிறுவ னம் ஒன்று எமது நிறுவனத் துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. அந்த பிரெஞ்சு நிறு வனத்தின் உதவி யுடன் கண்ணி அகற்றும் பணிகளை மேற் கொள்ள அரச எமக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இங்கு தற்சமயம் கண்ணிவெடி அகற்றும் அமெரிக்க நிபுணர்களு க்கு மேலதிக வேறு புதிய பிரதே சங்களில் கண்ணிகளை அகற்றும் பணியை நாம் மேற்கொள்வோம். இந்தப் பணிகளை ஆரம்பிப்பதற் காக எமது நிபுணர்கள் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கி ன்றனர் என்றும் அவர் தெரிவித் தார். வடக்கு கிழக்கு பகுதிகளில் கண்ணிகளை அகற்ற வெளிநாடு கள் பல முன் வந்துள்ளன. அமெ ரிக்க ஏற்கனவே குடாநாட்டில் அப்பணியை சிறப்பாகச் செய்து வருகிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் குரென்ஜே விபத்தில் பலி!

தென்னாபிரிக்காவின் கேப் மாகாண த்தில் இடம்பெற்ற ஓர விமான விபத்தில் அந்நாட்டின் பிரபல கிரிக் கட் நட்சத்திரமான ஹன்ஸி குரே ன்ஜே உயிரிழந்தார்.

இந்தச் செய்தி உலகெங்கும் கிரிக்கட் ரசிகர்களை அதிர்ச்சிக்கு ள்ளாக்கியுள்ளது. கேப்டவுனுக்கு 500 கிலோ மீற்றர் தொலைவில் ஜோர்ஜ்என்னும் நகருக்கு வெளியே விமானம் நொருங்கியது. வீரர் குரென்ஜேயும் அவரோடு அந்த விமானத்தில் இருந்த வேறு மூவ ரும் சம்பவம் நடந்த இடத்தி லேயே உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஜோர்ஜ் நகரில் விமானத்தை இறக்குவதற்கு விமானி முயற்சித் தார் என்றும் காலநிலை சீராக இல்லாததனால் விமானி மற்று மொரு தடவை தரையிறக்குவ தற்கு முயற்சி மேற்கொண்ட போது விமானம் மலையொன்றில் மோதி விபத்துக்குள்ளானது என் றும் கூறப்படுகிறது. தென்னா பிரிக்க அணியின் தலைவராக இருந்த சமயம் 2000 ஆம் ஆண் டில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் குரென்ஜே கிரிக்கெட் விளையாட்டில் இருந்து நிறுத்தப் பட்டிருந்தார். தென்னாபிரிக்க விளையாட்டு வீரர்களைத் திறமை யாக விளையாடாது இருக்கும்படி யும் அதற்கு அவர்களுக்கு பணம் வழங்கப்படும் என்றும் தான் கூறியதை ஐக்கிய கிரிக்கெட் சபை விசாரணைகளின் போது அவர் ஒப்புக் கொண்டார். அவர் ஒரு லட்சம் டொலர் பெற்றிருந்தார்.

நேரடிப் பேச்சுக்கு முன்பாக புலிகள் மீதான தடையை நீக்க ஐரோப்பியநாடுகள் ஆதரவு

ஐரோப்பிய விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நாடு திரும்பியுள்ளார். பிரதம ரின் ஐரோப்பிய விஜயம் எதிர் பார்த்ததை விட பெருவெற்றி யையும் ஊக்கத்தையும் அளித்திரு ப்பதாக அரச தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் மீதான தடையை உள்நாட்டில் நீக்கு வதற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆசீர்வாதம் பிரதமருக்கு கிடைத் துள்ளது என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தது.

அடுத்தமாத ஆரம்பத்தில் தாய் லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாவ தற்கு முன்னர் தடையை நீக்கக் கூடிய சூழ்நிலை தற்சமயம் உரு வாகியுள்ளது.

நீங்கள் வாகன விபத்தில் உங்களது தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?
SIDNEY FINANCIAL
AND ACCIDENT BENEFIT SERVICES
SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK
விபத்தின் அவி விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான
• நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
• உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
• வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
• வணிக இழப்பீடுகள்
• கல்வி இழப்பீடுகள்
• மறுதொழில் பயிற்சித்தல்
• சிறப்பு மருத்துவ வசதிகள்
மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்
இவற்றுடன் உங்கள்
• INCOME TAX
• BUSINESS ACCOUNTING
• BUSINESS G.S.T, P.S.T.
• PAYROLL
• PERSONAL LOAN & BUSINESS LOAN
• BANKRUPTCY
• PARALEGAL SERVICES (Immigration)
• வருமான வரி
• வியாபாரக் கணக்குகள்
• சம்பளக் கணிப்பீடு
• தனியார், வர்த்தகக் கடன்கள்
• வங்குரோத்து நிலையடைதல்
• குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்